# பழமொழிக் கதைகள்-6

கே.வி. குணசேகரம்.

## நூல் விபரம்

நூலின் பெயர் : பழமொழிக் கதைகள் 40

(கவிதை, உரை, பழமொழி, விளக்கம் , கதைகள்)

நூலாசிரியர் : கே. வி. குணசேகரம்.

பதிப்பாண்டு :

மொத்தப்பக்கங்கள் :

விலை :

விநியோகம் : லங்கா புத்தகசாலை

F.L. 1.14, டயஸ் பிளேஸ்

குணசிங்கபுர,

கொழும்பு – 12.

Tel : 011-2-341942

# அணிந்துரை

கவிதைகளாக இருந்த நூல்கள் பலவற்றை சகல மக்களும் புரிந்து சைவசமயத்தை ஒழுக்கமான முறையில் பின்பற்ற வேண்டும் என்பதற்காக அவற்றை ஆறுமுகநாவலர் வசனமாக்கினார். அதனால் சைவசமய மக்கள் அனைவரும் அதைப் பின்பற்றி வாழ்ந்தனர். அதுபோலக் கவிதைகளாக இருக்கும் தத்துவங்களைக் கே.வி. குணசேகரம் கதைகளாக்கி வெளியிடுகிறார். இது இதுவரை இலக்கிய உலகில் நடைபெறாத புரட்சியென்றே கூறலாம். வேதங்கள், உபநிடதங்கள், திருக்குறள், பகவத்கீதை, திருவருட்பயன் என இருந்த தத்துவங்கள் யாவும் கதைகளாக்கப்பட்டுள்ளன. இதனால் எழுத வாசிக்கத் தெரிந்த அனைவரும் அவற்றைத் தெளிவாகப் புரிந்து கொள்ள முடிகிறது.

இது ஒரு சைவ சமயப்புரட்சி என்றே கூறலாம். "இவரது தத்துவக் கதைகள் யாவும் தத்துவங்களுக்குப் பொருத்தமானவை யென்றும், நுட்பமான தத்துவங்கைளப் படிப்படியாக விளக்கித் தெளிவாக்கிப் பொருத்தமான கதைகளைப் புனைவதில் நூலாசிரியர் திறமை மிக்கவராக விளங்குகிறார்" என்றும் திருக்கைலாய பரம்பரைத் திருவாவடுதுறை ஆதீனத்தின் 23 ஆவது குருமகா சன்னிதானச் சுவாமி சீர்வளர் சீர் சிவப்பிரகாசதேசிக பரமாச்சாரிய சுவாமிகள் 07.07.2010 அன்று எழுதிய கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

யாழ்ப்பாண மாவட்டத்தில் பிரதிக் கல்விப் பணிப்பாளராகக் கடமை புரிந்த திரு.க. மகேசன் அவர்கள் ; "நீங்கள்

ஒரு ஞானி. எதிர்காலத்தில் சம்பந்தர், நாவுக்கரசர், சுந்தரர், மாணிக்க வாசகர் போல ஒரு “நாயன்மார் பட்டம் பெறுவீர்கள்” என்று கூறியுள்ளார். இவை உண்மையான கூற்றுக்கள். பகவத்கீதை, திருவருட்பயன், மாயை பற்றிய கதைகள், திருமந்திரம் போன்ற பல நூல்கள் இன்று கதை வடிவம் பெற்றுள்ளதால் சைவ சமய தத்துவங்கள் இதுவரை காலமும் இல்லாதவாறு எளிமைப்படுத்தப்பட்டு மக்களை அடைந்துள்ளது. இவர் வெளியிட்ட 65 நூல்களில் பெரும்பான்மையான நூல்கள் பாடசாலைகளிலும், நூலகங்களிலும் உள்ளன. அவற்றைப் பலரும் விரும்பி வாசிப்பதை நான் கண்டுள்ளேன். நான் கிருஸ்ணனின் பக்தன், ‘பகவத்கீதைக் கதைகள்’ என்னை மிகவும் கவர்ந்தது. வடமொழியில் உள்ள சுலோகங்கள் மொழிபெயர்க்கப்பட்டு, விளக்கப்பட்டு, அவைக்குக் கதைகள் எழுதப்பட்டுள்ளன. மிகவும் பயனுள்ள சேவை இது.

இப்பொழுது வெளிவந்திருக்கும் பழமொழி நானூறு என்ற சமண சமயப்பழமொழி நூலை ஆசிரியர் சைவசமய கதை நூலாக்கியுள்ளார். அருமையான 400 கதைகளைக் கொண்ட பத்து நூல்களும் இலக்கிய உலகால் வரவேற்கப்படுமென நான் நினைக்கிறேன். அவர் இன்னும் பல அரிய சமய நூல்களைக் கதைகளாக்க வேண்டுமென எனது குலதெய்வமான வெள்ளெருவை விநாயகரைப் பிரார்த்திக்கின்றேன்.

க. வேலாயுதபிள்ளை,
முன்னாள்த் தலைவர்
வெள்ளெருவைப் பிள்ளையார்
சனசமூக நிலையம், முன்பள்ளி,
கூட்டுறவுப் பண்டக சாலை.
நலன்காக்கும் பிரிவு, கோப்பாய்.

# என்னுரை

'பழமொழி' என்பது பழையமொழி என்றும், நம் முன்னோரின் அனுபவமொழி என்றும் பொருள் கொள்ளப்படுகிறது. மக்களின் செம்மையான நல்வாழ்விற்கு உதவுவனவாகப் பழமொழிகள் விளங்குகின்றன. பழமொழியை 'முதுமொழி' என்றும் சொல்வர். இலக்கண இலக்கியங்களை வரையறை செய்த தொல்காப்பியர் பழமொழியையும் வரையறை செய்துள்ளார்.

**"நுண்மையும் சுருக்கமும் ஒளியுடை மையும்**
**ஒண்மையும் என்றிவை விளங்கத் தோன்றிக்**
**குறித்த பொருளை முடித்தற்கு வரூஉம்**
**ஏது நுதலிய முதுமொழி என்ப'**

என்பது தொல்காப்பியரது கூற்று.

அரையனார் என்ற புலவர் பாடிய கவிதையிலான இந்நூலின் முதல் இரு அடிகள் பழமொழி சம்பந்தமான தத்துவங்களைக் கூறுகிறது. பின் இரு அடிகள் முதலிரு வரிகளிற் கூறப்பட்ட தத்துவங்களைக்கான பழமொழியைக் கூறுகின்றது.

பழமொழி நானூறு என்ற இக் கவிதை நூலை முதன் முதலில் அச்சேற்றி வெளியிட்டவர் சோடசாவதானம் சுப்பிராயச் செட்டியார் அவர்கள். 1874ஆம் ஆண்டு இந்நூல் அச்சிடப்பட்டது. இதனை அடுத்து 1914 ஆம் ஆண்டு திருமணம் செல்வக் கேசவராய முதலியார் பதிப்பித்து வெளியிட்டார். 1918 -1922ஆம் ஆண்டளவில் திரு. நாராயண ஐயங்கார் அவர்கள் 200 பாடல்களைப் பதிப்பித்து வெளியிட்டார். இதனை அடுத்துத் திரு. புலியூர்க்கேசிகன் அவர்கள் 1989 இல் செய்யுள்களை உரை நடையுடன் பதிப்பித்து வெளியிட்டார்.

வேதங்கள், உபநிடதங்கள், திருக்குறள், ஆத்திசூடி, பகவத்கீதை, திருமந்திரம், திருவருட்பயன், ஆசாரக்கோவை என்பன தத்துவங்களாகவும் உரைநடைகளாகவுமே இருந்தன. அவற்றை முதன் முதலில் இலகுபடுத்தி உரை, விளக்கம், கதைகள் எழுதியதைப் போல பழமொழி நானூறு என்ற கவிதைகளுக்கும்

உரை விளக்கம் கதை என்பன எழுதியுள்ளேன். பழமொழிகளின் பொருளைச் சிறுவர்கள் புரிந்து கொள்ள வேண்டும் என்பதே எனது நோக்கம்.

உரை எழுதுவதும், ஆய்வுகள் செய்வதும் மிகவும் இலகுவானது. உரையை ஆயிரக்கணக்கானோர் எழுதியுள்ளனர். அதை அப்படியே பின்பற்றி உரை எழுதலாம். ஆய்வையும் ஆயிரக்கணக்கானோர் செய்துள்ளனர். அதில் சில ஆய்வுகளைப் படித்து விட்டு அதைப் பார்த்து மொழி மாற்றம் செய்து புதிய ஆய்வொன்றைச் செய்யலாம். ஆனால் கதைகள் எழுதுவது மிகவும் சிரமமானது. அதனால் தான் யாரும் இந்நூல்களுக்குக் கதைகள் எழுதவில்லை.

காலங்காலமாக எழுதப்படும் உரைகளாலும் ஆய்வுகளாலும் சமூகம் எந்தப் பயனையும் அடையவில்லை. ஒரு சில மாணவர்கள் மட்டும் பயனடைந்தனர். உரைகளை, ஆய்வுகளை சாதாரண மாணவர்கள் விளங்கிக் கொள்ள மாட்டார்கள். அதனால் தத்துவங்களை மாணவர்கள் விளங்கிப் பின்பற்ற வேண்டு மென்பதற்காகவே அவற்றைக் கதைகளாக எழுதி வருகிறேன். இந்நூல்களை ஆராய்ந்து ஆலோசனைகள் கூறி எழுத்துப் பிழைகளைச் சீர் செய்து தந்த செல்வி. ப. இறைமகள் ஆசிரியைக்கும், இதைக் கணணி மயப்படுத்தித் தந்த திருமதி. கௌசலா நாகராஜன் அவர்களுக்கும், இந்நூலை வெளியிட்டு விற்பனை செய்து தரும் லங்கா பதிப்பக உரிமையாளர் திரு. கந்தசாமி இராசேந்திரனுக்கும் நன்றி கூறிக் கொள்கின்றேன். மீண்டும் சந்திப்போம். எனது ஆக்கங்களை www.kvkuna.com இல் பார்வையிடலாம்.

கே.வி. குணசேகரம்.
பிள்ளையார் கோவிலடி,
கோப்பாய் மத்தி, கோப்பாய்.
ஸ்ரீலங்கா.

1 “அன்பானவர்களே, உயிரை இயமன் எடுக்கும் போது எடுப்பவனின் சுகதுக்கங்களை விசாரித்து அறிந்து கொள்வதில்லை. அது போலக் கொடுங்கோல் மன்னனும் குடிமக்களின் இன்ப துன்பங்களைப்பற்றி விசாரித்தறியாது, இயமனைப் போலத்தனது விருப்பத்திற் கேற்பத் தண்டனைகளைக் கொடுப்பான்”

“குறைவில்லாது விளைபொருட்களை உற்பத்தி செய்வோரும், தகுதிமிக்க அறிஞர்களும், குறைவற்ற செல்வர்களும் உள்ள நாடே சிறந்த நாடாகும்”

“அரசனெனப்படுபவன் பெருந்துன்பம் வந்த போதும், அதை எதிர்த்து நின்று நாட்டின் வளங்களைப் பெருக்குதல் வேண்டும். மிகக் கொடிய பசியும், தீராத நோய்களும்,அழிவினை உண்டாக்கும் பகையும் வந்து சேராமற் காப்பவன் தான் சிறந்த அரசனாவான். இதை விட்டுவிட்டு ஆசைகளுக்கு ஆளாகி முறையற்ற செயல்களால், மக்களைக் கொடுமைப்படுத்தும் அரசன், கொலைத் தொழிலைச் செய்பவர்களை விடக்கேவலமானவனாவான்”

“சேனையூரின் அரசன் சேரரூபன். அவன் தனது ஆட்சியில் நடைபெறும் நன்மை தீமைகளைத் தினமும் ஆராயாது தான் நினைத்த படியும், தனக்கு விருப்பமானவர்களின் சொற்படியுமே நாட்டை ஆள்வான். அதனால் நாட்டில் அடிக்கடி கலகங்கள் நடை பெற்றன. கொள்ளை, கொலை, கற்பழிப்புப்போன்ற பாதகமான செயல்கள் பல தினமும் நடைபெற்றன. அரசன் முறையற்ற

வழிகளில் திறைப்பணத்தைப் பெற்றுவந்தான். அதனால் மக்கள் தமது நாட்டை விட்டு அயல் நாடுகளிற் சென்று குடியேறினர்".

"சேனையூரில் சிவசாமி என்றொரு கொடியவன் வாழ்ந்து வந்தான். அவன் மன்னனுக்கு மிகவும் வேண்டியவன். அதனால் அவன் ஊரில் மன்னனைப் போலவே நடந்து கொள்வான். ஒரு நாள் இரவு அவன் அங்குவாழ்ந்த ஆறுமுகசாமி என்பவரின் வீட்டுள் நுழைந்து அங்கிருந்த பெண்களுடன் தகாதமுறையில் நடக்கமுற்பட்டான். ஆறுமுகசாமி அதைக் கண்டு வெகுண்டெழுந்து சிவசாமியைத் தாக்கிவிட்டான். சிவசாமி அரசனான சேரரூபனிடஞ் சென்று சொன்னான்; "அரசே நமது ஊரில் வாழும் ஆறுமுகசாமி என்பவன் அயல்நாட்டு மன்னனுடன் தொடர்பு கொண்டுள்ளான். அந்தநாட்டு மன்னனின் வேண்டுகோளுக்கிணங்க மக்களைத் தூண்டி அயல் நாட்டிற்கு அனுப்பிக் கொண்டிருக்கிறான் . மக்களிற்பெரும்பான்மையானவர்கள் அயல் நாடு சென்றதும், அதைச் சாட்டாக வைத்து எமது நாட்டைக் கைப்பற்ற எண்ணுகிறான். எனவே அவனுக்குத் தகுந்த தண்டனையைக் கொடுக்க வேண்டும்"

"மன்னன் எதையும் ஆராயாது படைவீரரை அழைத்து, உடனே ஆறுமுகசாமியைக் கைது செய்து பாதளச் சிறையில் அடைக்குமாறு கட்டளையிட்டான். அதனால் அன்பானவர்களே, அதிகாரிகளாக இருப்பவர்கள் ஒரு விடயத்தைப் பல முறை ஆராய்ந்த பின்பே முடிவுவெடுத்துத் தண்டணை கொடுக்க வேண்டும்" என்றார் நமசிவாயம் சுவாமிகள்.

***கூற்றம் உயிர்கொள்ளும் போழ்து குறிப்பறிந்து***
***மாற்றம் உடையாரை ஆராயாது - ஆற்றவும்***
***முல்லை புரையும் முறுவலாய்! செய்வதெள்***
***வல்லை அரசாட் கொளின்?***

குடிகளின் பிரச்சினைகளை ஆராயாது தண்டனை வழங்கும் அரசன் இயமனைப் போன்றவனாவான். "**செய்வதெள் வல்லை அரசாட்கொளின்**" என்பது பழமொழி.

2 "அன்பானவர்களே, உங்களுடன் கூட இருக்கின்ற ஒருவர் உங்களைப் புரிந்து கொள்ளாது தினமும் தொல்லைகள் கொடுத்துக் கொண்டிருந்தால், அது தினமும் காலின் பாதுகாப்பிற்காக அணியும் செருப்பினுள்ப் புகுந்த கல் வருந்துவதைப் போல வருத்தும். பெருமைக்குரிய குணம் கொண்டவர்கள் சிறுமதியாளருடன் சேரமாட்டார்கள். ஆனால் விதி வசத்தால் பெருமைக்குரிய குணம் கொண்டவரின் இரத்த உறவினராக ஒரு சிறுமதியாளர் வந்து சேர்ந்தால், அது அவர் அணியும் செருப்புக்குள்க் கல் புகுந்து வருத்துவதைப் போன்று அவரை வருத்தும்.

"சிவசுந்தரம் மிகவும் நல்லவர். ஊரவர் அனைவருக்கும் உதவி செய்பவர். இரக்கசுபாவம் மிக்கவர்; இரப்பவர்களுக்கு இல்லை யென்று சொல்லாதவர். அவரது மனைவி பாக்கியலட்சுமி அவருக்கு எதிர்மாறானவள். கோயிலுக்கு ஏதாவது கொடுப்பதாக இருந்தாலும் கூட அவள் விடமாட்டாள். அவருக்கு நல்ல சுவையான உணவு கூடக் கொடுக்க மாட்டாள். அவர் அவளுக்குத் தெரியாது தான் தானதர்மங்களைச் செய்வார்"

“அவரது தங்கை மாலதி. அவளுக்குத் திருமணம் பேசி முற்றாகியிருந்தது. அவர் மாலதிக்குத் தங்கத்திலான ஒரு சங்கிலி போட விரும்பினார். அதைத் தனது மனைவியிடம் சொன்னார். அதற்கு அவள் சம்மதிக்கவில்லை. கொடுக்கக்கூடாது என்று பிடிவாதமாகச் சொன்னாள். கொடுத்தால் தான் வீட்டை விட்டுச் சென்று விடுவேன் என்று மிரட்டினாள். அதனால் துன்பமடைந்த சிவ சுந்தரம் வீட்டிற்கு வராது வேறு இடங்களில் தங்கினார். அப்படியிருந்தும் பாக்கியலட்சுமியின் மனம் இழகவில்லை. ஊரவர்கள் அவரை ஏசியதால் அவர் வீட்டுக்கு வந்தார். அவருடைய நண்பன் மணிவண்ணன் நகைக்கடை வைத்திருந்தான். அவன் சிவசுந்தரத்தின் மனக்கவலையை அறிந்து ஒரு தங்கச் சங்கிலியைக் கொடுத்து விட்டுச் சொன்னான்; “சிவா, இதைக் கொண்டு சென்று உனது தங்கைக்குக் கொடு. காசுள்ள நேரம் தா. பகுதி பகுதியாகத்தந்தாலும் பரவாயில்லை” என்றான்”.

“சிவசுந்தரம் மகிழ்வுடன் அதைப் பெற்றுக் கொண்டு மாலதியின் வீட்டுக்குச் சென்று சங்கிலியைக் கொடுத்தார். மாலதி அதை வாங்காது சொன்னாள்; “அண்ணா, உங்கள் அன்பு ஒன்றே எனக்குப் போதும், நீங்கள் உங்கள் மனைவிக்குத் தெரியாமல் தருவதை நான் பெறவிரும்பவில்லை. இருவரும் மனமொத்துத்தரல் வேண்டும். தற்செயலாக நீங்கள் தந்தது தெரிய வந்தால் வீண் பிரச்சினைகள் வந்து குடும்பம் பிரிந்துவிடும். அதை நான் விரும்பவில்லை. நீங்கள் நல்லவர். உங்களுக்குப்

பொருத்தமில்லாத மனைவி விதி வசத்தால் வந்தமைந்து விட்டாள். அதனால் நீங்கள் படும் வேதனை கொஞ்ச நஞ்சமில்லை. அதோடு இதுவும் சேர்ந்தால் எப்படி இருக்கும்? காலுக்கு அணியும் செருப்புக்குள் கல் புகுந்து விட்டது. காலம் பூராகவும் துன்பம் தான்" என்று அழுதாள். ஆகையால் அன்பனவர்களே, மற்றவர்களின் மனநிலையைப் புரிந்து அதற்கேற்றபடி வாழுங்கள்" என்றார் நமசிவாயம் சுவமிகள்.

***தருக்கி ஒழுகித் தகவல்ல செய்தும்***
***பெருக்க மதித்தபின் பேணாத செய்தும்***
***கரப்புடை யுள்ளம் கனற்று பவரே***
***செருப்பிடைப் பட்ட பரல்.***

தீய எண்ணங்களை உடைய கொடியவர்கள், எப்போதும் தம்மைச் சேர்ந்தவர்களுக்குத் துன்பம் செய்து கொண்டிருப்பார்கள், **"செருப்பிடைப்பட்ட பரல்"** என்பது பழமொழி

**3** "அன்பானவர்களே, எது நடப்பதானாலும் அதற்குரிய காலம் கனிந்தால் தான் நடக்கும். அரசனின் மனங் கவர்ந்த மகாரணியானாலும் அவள் விரும்பியவையும் காலம் கனிந்தன்று தான் நடைபெறும். வேங்கைமரம், அது பூப்பதற்கான காலம் வந்தால் தான் பூக்கும். தான் பூத்ததற்குரிய நல்ல நாளினை அறிந்தே வேங்கை மரம்பூக்கும். அதனால் வேங்கை மரம் பூக்கும் நாளை மண நாளைக்குறிக்கும் 'கணி' என்று சொல்லப்படும்"

"வாதவூர் மன்னன் மதனசேகரன் ஒரு முத்தமிழ் விழா நடந்தினான். அவன் பேரரசனாகையால், குறு நிலமன்னர்கள் அனைவருக்கும் விழாவுக்கான அழைப்பிதழ்களை அனுப்பினான்.

எல்லாக்குறுநில மன்னர்களும் பட்டத்தரசிகளும் விழாவுக்கு வந்தனர். விழா முடிந்ததும் மதனசேகரன் வந்த குறுநில மன்னர்களுக்கும் மந்திரி பிரதானிகளுக்கும் பெரியதொரு விருந்து வைத்தான். அந்த விருந்தில் பட்டத்தரசியும் கலந்து கொண்டாள்".

"நல்லூர்க் குறுநில மன்னனின் பட்டத்தரசி செல்வராணி அணிந்திருந்த நவரத்தின மாலை வித்தியாசமான தோற்றத்தை உடையது. அதைப் பார்த்து ஆசை கொண்ட மதனசேகரனின் மனைவி குந்தவை, அதுபோல ஒரு நவரத்தினமாலை தனக்கு வாங்கித் தரும்படி மதனசேகரனைக் கேட்டாள். மதனசேகரன் குந்தவை அணிந்திருந்த நவரத்தின மாலையப் பார்த்தான். அது மிகவும் அழகாகக்தான் இருந்தது. அதனால் அது போன்ற ஒரு நவரத்தினமாலை ஒன்றைச் செய்து தரும்படி மதனசேகரன் நல்லூர் மன்னனைக் கேட்டான். அதற்கு நல்லூர் மன்னன் சொன்னான்; "மகாராஜா, இந்த நவரத்தின மாலையை முத்தமிழ் விழாவில் அமைக்கப்பட்டிருந்த ஆபரண சாலையில் தான் வாங்கினேன்" என்றான்".

"மதனசேகரன் அமைச்சரை அந்த ஆபரணசாலைக்கு அனுப்பினான். அதைச் செய்த பொற்கொல்லன் வெளியூருக்குச் சென்று விட்டதாக அவ் ஆபரணசாலையின் உரிமையாளன் சொன்னான்".

“அதைச் செய்தபொற்கொல்லன் வெளியூரிலிருந்து திரும்பியதும் நல்லூர் மன்னனுக்கு விற்றதைப் போன்றநவரத்தின மாலை ஒன்றைச் செய்து அரன்மனைக்குக் கொண்டு வரும்படி ஆபரணசாலைஉரிமையாளருக்கு மதனசேகரன் கட்டளையிட்டான்”.

“அடுத்த வாரம் வரவிருக்கும் மகாராணியின் பிறந்த தினத்தன்று அதை மதனசேகரன் மகாராணிக்குப் பரிசளிக்க விரும்பினான்”

“மூன்று மாதங்கள் கழிந்தும் அந்தப் பொற் கொல்லன் வரவில்லை. அதனால் ஆபரணசாலை உரிமையாளன் வேறொருவனைக் கொண்டு அது போன்றதொரு நவரத்தின மாலையைச் செய்து அரசசபைக்கு அனுப்பினான். ஆனால் அது நல்லூர்க் குறு நிலமன்னனின் பட்டத்தரசியின் நவரத்தின மாலையைப் போல அழகில்லை என்று கூறிப்பட்டத்தரசி அதை வாங்க மறுத்து விட்டாள்”.

“மேலும் ஒருவருடம் கழிந்தும் அந்தப் பொற்கொல்லன் வரவில்லை. அதனால் பட்டத்தரசி மிகவும் வருத்தமடைந்தாள். நாட்டையாளும் மன்னனான மதனசேகரனுக்குத் தனது மனைவியின் ஆசையை நிறைவேற்ற முடியவில்லை யென்று துக்கமாக இருந்தது”

“மேலும் ஆறுமாதங்கள் கழிந்த பின்பு அப்பொற்கொல்லன் வந்தான். அவனது வலதுகை முறிந்ததால் அவனால் வேலை செய்ய முடிய வில்லை. மேலும் மூன்று மாதங்கள் கழிந்த பின்பே அப்பொற்கொல்லன் அழகான நவரத்தினமாலையைச் செய்து அரசிக்குக் கொடுத்தான். அதன் பின்பு தான் அரசனுக்கும் அரசிக்கும் கவலை தீர்ந்தது.”

“அதனால் அன்பானவர்களே, அரசனாய் இருந்தாலென்ன, ஆண்டியாய் இருந்தாலென்ன ஒரு பொருள் வந்து சேரும் காலம் வந்தால் தான் வந்து சேரும். அதற்காகக் கவலைப்படுவதில் அர்த்தமில்லை. ஆகையால் நீங்கள் நினைத்த ஒரு பொருள் வந்து சேரவில்லையென்றோ, நீங்கள் தொடங்கிய தொழில் நல்லபடியாக முடியவில்லையென்றோ கவலை கொள்ளாதீர்கள். எல்லாம் நடக்கவேண்டிய நேரம் தான் நடக்கும். முந்திப் பிந்தி நடக்காது” என்றார் நமசி வாயம் சுவாமிகள்.

***பன்னாளும் நின்ற விடத்தும் கனிவேங்கை***
***நன்னாளோ நாடிமலர்தலாய் -மன்னர்***
***உவப்ப வழிபட் டொழுகினும், செல்வம்***
***தொகற்பால போழ்தே தொகும்.***

காலம் வந்தால் தான் எதுவும் நடக்கும். அதுவரை பொறுமையாக இருத்தல் வேண்டும். “**தொகற் பால போழ்தே தொகும்**” என்பது பழமொழி .

4 “அன்பானவர்களே, சுற்றத்தவர்கள் வறியவர்களான காலத்தில், அவர்களது உறவைப் பாராட்டி அவர்களுக்கு உதவும் தன்மை உறவினர்க்கு எப்போதும் இருந்தல் வேண்டும். இந்த அன்பு நீங்காத உறவு வறியவர்களான சுற்றத்தவரைச் செல்வந்தராக்கும். அதோடு சுற்றத்தவரோடு மனம் கலந்து பழகாதவர்களுடைய வாழ்க்கை, அணைக்கட்டு இல்லாத குளம் நீர் நிறைந்ததைப் போலாகும். அதனால் சுற்றத்தவர்களுக்கு உதவிகள் செய்து மகிழ்வோடு அவர்களைத் தாங்கி வாழ்பவர்களே உயர்ந்தவர்களாவர்”.

“காலத்தின் தேவைகருதி நத்தையானது நீரைத் தன்னிடத்தே சேமித்து வைத்திருப்பது போல, தத்தமது பொருட்களையும், தன் சுற்றத்தாரின் வலிமையையும் ஆராய்ந்து அவர்கள் வறுமைப்பட்ட காலத்தில் உதவுவதற்கென ஒவ்வொருவரும் சேமித்து வைத்துக் கொள்ளல் வேண்டும்”

“வாகையூரில் தணிகாசலம் என்றொரு பெரியவர் வாழ்ந்து வந்தார். அவர் ஒரு பெரும் வணிகர். அவரது நண்பர் சிவசிதம்பரம். இருவரும் இணைபிரியாத நண்பர்கள். அதனால் அவர் தனது தங்கையான அபிராமியைச் சிவசிதம்பரத்திற்குத் திருமணம் செய்துவைத்தார்”.

“சிவசிதம்பரம் சோம்பேறி, அழிக்கும் தன்மையைக் கொண்ட சோம்பலை உடைய அறிவில்லாதவனின் குடும்பம் அவனுக்கு முன்னதாகவே அழிந்துவிடும் என்று தெரிந்து கொண்ட

தணிகாசலம், சிவசிதம்பரத்திற்குப் புத்திமதிகள் பலவும் கூறினார். கூறும் போது ஏற்கும் சிவசிதம்பரம் பின் அவற்றை மறந்து விடுவான். அவனுக்கு எட்டுப் பிள்ளைகள். அவர்களில் ஐவர் ஆண்கள். தணிகாசலத்திற்கு நான்கு பிள்ளைகள். அவற்றில் ஒன்று பெண். சிவசிதம்பரத்தின் மீதிருந்த நட்பின் காரணமாகத் தனது தங்கையை அவனுக்குத் திருமணம் செய்துகொடுத்தது பெரும் தவறு என்று நினைத்துத் தணிகாசலம் அவர்களின் குடும்பத்தையும் பராபரிக்கும் பொறுப்பை ஏற்றுக் கொண்டார். தனது தங்கையையும் பிள்ளைகளையும் எந்த விதமான குறைகளுமின்றிக் கவனித்து வந்தார். சிவசிதம்பரத்தின் பிள்ளைகள் தந்தையைப் போலவே பொறுப்பில்லாமல் வளர்ந்தனர்."

"சிவசிதம்பரத்தின் மூத்த மகனுக்குத் திருமண வயது வந்தது. சிவசிதம்பரம் தணிக்காசலத்திடம் சென்று அவனுக்குப் பெண் கேட்டார். அதற்குத் தணிகாசலம் சொன்னார்;" மைத்துனரே, உம்மில் உள்ள நட்புக்காரணமாக எனது தங்கையை நான் உமக்கு மணம் முடித்துத் தந்தேன். ஆனால் நீர் குடுப்பத்தை ஒழுங்காகப் பராபரிக்கவில்லை. தனது எதிர்காலம் சிறக்க வேண்டு மென்பதற்காக நத்தை நீரைச் சேமித்து வைப்பது போல நான் எனது தங்கையின் எதிர்காலம் சிறக்க வேண்டுமென்பதற்காக பொருள் சேர்த்து வைத்துள்ளேன். ஆகையால் பொருட்களைக் கேள் தருகிறேன். பெண்ணைக் கேளாதே. எனக்கிருப்பது ஒரே ஒரு

பெண்பிள்ளை. அதன் எதிர்காலம் சிறக்க வேண்டும்” என்றார். சிவசிதம்பரத்தால் பேச முடியவில்லை எழுந்து சென்றார்.”

“ஆகையால் அன்பானவர்களே, ஒவ்வொருவரும் தமது எதிர்காலம் சிறப்படைய வேண்டுமென்று சேமித்துவைத்திருப்பதைப் போலத் தமது சுற்றத்தவர்களின் எதிர்காலமும் சிறப்படைய வேண்டுமென நினைத்துச் சேமித்தல் வேண்டும். மனிதனைத் தவிர்ந்த உயிர்களெல்லாம் இயற்கையைப் பார்த்து கற்று அதன்படி வாழ்கின்றன. மனிதன் ஒருவன் தான் இயற்கையைப்பார்த்துக் கற்காது அதை அழிக்கிறான்” என்றார் நமசிவாயம் சுவாமிகள்.

*தந்தம் பொருளும் தமர்கண் வளமையும்*
*முந்துற நாடிப் புறந்தரல் ஓம்புக*
*அந்தண் அருவி மலைநாட! சேணோக்கி*
*நந்துநீர் கொண்டதே போன்று.*

சுற்றத்தவர் வலிமை குறைந்தால் தமக்கே சுமையாகும் என்று நினைத்து அவர்களது வலிமையையும் காக்க வேண்டும். **“சேணோக்கி நந்து நீர் கொண்டதே போன்று**” என்பது பழமொழி. தொலை நோக்கோடு பொருளாதார வலிமையைக் காக்கவேண்டும்.

5 “அன்பானவர்களே, அறிவு வேறு, கல்வி வேறு. அறிவைக் கல்வியால் செப்பமிடல் வேண்டுமே தவிர, அறிவால் கல்வியைச் செப்பனிட முடியாது. ஏனெனில் கற்றது கையளவு, கல்லாதது உலகளவு. கடவுள் உயிர்களெல்லாவற்றையும் அறிவுள்ளவனாகவே படைத்துள்ளார். ஆனால் மனிதனுக்கு மட்டும் கல்வி கற்கும் ஆற்றலை அதிகமாகக் கொடுத்துள்ளார். குயில் மிக மிக இனிமையாகப் பாடும். அதனால் சங்கீத முறைப்படி பாட முடியுமா?.. சங்கீதத்தைப் பற்றி ஏதாவது தெரியுமா..? நாம் இயற்கையைப் பார்த்துக் கற்க வேண்டுமென்பதற்காக இறைவன் இயற்கையை அறிவுள்ளதாகப் படைத்துள்ளான். அந்த இயற்கை அறிவை மனிதர்கள் கல்வியினால் செப்பனிட வேண்டும். கல்வியால் செப்பனிடப்படாத இயற்கை அறிவால் எந்தப் பயனும் உண்டாகாது”

“நூல்களைக் கற்று அறிந்திராத ஒருவன், வினைப்பயனால் அறிவுடையவனாக விளங்கி, தான் கண்டறிந்த மிக நுட்பமான பொருளைப் பிறருக்கு விளக்கிக் காட்ட முடியாதவனாக இருப்பான். இவன், தான் அறிவுள்ளவன் என்று தனக்குள்ப் பெருமைப்படலாமே தவிரச் சபையேறி விளக்கிப் பெருமைப்பட முடியாது. அதனால் வினைப்பயனால் வந்த இயற்கையான அறிவும் இல்லாமற் போய்விடும்”

“உறையூர் அரச சபையில் நூல்களைப் பற்றிய ஆய்வுகள் நிகழும். பெரும் பெரும் புலவர்களும் அறிஞர்களும் கலந்து கொள்ளும் அந்த ஆய்வரங்கை ரசிப்பதற்காகப் பல்லாயிரக்

கணக்கான மக்கள் அவையிற் கூடுவார்கள். நாராயணன் சிறந்த பேச்சாளன். நாவன்மை என்று சொல்லப்படும் பேச்சுத்திறமை அவனுக்கு விதிப்பயனால் ஏற்பட்ட தொன்று. அதனால் அவன் உறையூரில் உள்ள மேடைகளில் இலக்கியம் பற்றிப் பேசுவான். குரல் வளம் மிக்க அவன் இலக்கியங்களை ஆராய்ந்து கற்றவனல்ல. அதனால் அவனது பேச்சு நடைபெறும் இடங்களில் அறிஞர்கள் கலந்து கொள்வதில்லை. அதை அவன் அறிஞர்களின் பலவீனமாகவே கருதி வந்தான். அவனது நண்பர்கள் அவனை எந்நாளும் மெச்சிப் புகழ்ந்து வந்தனர். அதனால் அவன் உறையூர் மன்னனின் அரச சபைக்கு இலக்கிய ஆய்விற்காக வந்தான்."

"அவையிலே அரசனும் அறிஞர்களும் கூடியிருந்தனர். நாராணன் பட்டுப்பீதாம்பரம் அணிந்து பெரும் அறிஞரைப் போலச் சபைக்கு வந்தமர்ந்தான். மன்னன், நாராயணனைப் பார்த்து; "நீர் கற்ற இலக்கியங்களைக் கூறும்" எனக் கேட்டான்".

"மன்னா, பெரும்பாலான இலக்கியங்களைப் பற்றிப் பேசி வருகிறேன்" என்றான் நாராயணன்".

"உமக்கு விருப்பமான இலக்கியம் எது?" என்று மன்னன் கேட்டான்."

"திருக்குறள்" என்றான் நாராயணன்".

"அப்படியா..? திருக்குறள் உலக மறை. அதைக் கற்றவன் உலகைக் கற்றவனாவான்." என்றான் மன்னன்"

“உண்மை மன்னா... நான் திருக்குறளைப் பற்றித் தான் மேடைகளில் அதிகமாகப் பேசுவேன்” என்றான் நாராயணன்”.

“மிகவும் நன்று. எனக்குத் திருக்குறள் மீது அலாதியான பக்தியுண்டு. அதில் சில முரண்பாடுகள், இருப்பதாகத் தோன்றுகிறது.”

“சொல்லுங்கள் மன்னா...?” என்றான் நாராயணன்”.

“திருக்குறளின் அறுபத்திரண்டாம் அதிகாரத்தில் உள்ள அறுநூற்றுப்பத்தொன்பதாவது குறள்..” என்று மன்னன் கூறும் போது நாராயணன் குறுக்கிட்டு; “தெய்வத்தான் ஆகாது எனினும் முயற்சி தன் மெய்வருத்தக் கூலி தரும்” என்று ராக சுத்தத்துடன் பாடி முடித்தான்”.

“நல்லது அறிஞரே, தெய்வத்தின் துணையைக் கொண்டு ஒரு செயலில் வெற்றி பெற முடியாத நிலை இருந்தாலும், ஒருவன் தன் உடலை வருத்தி மேற்கொண்ட உழைப்பின் அளவிற்குப் பலன் கிடைக்கும்” என்று தான் அக்குறளுக்கு உரை சொல்லப்பட்டுள்ளது. அப்படியாயின் தெய்வத்தின் உதவியில்லாமல் முயற்சி வெற்றி பெறுமா..? அல்லது முயற்சிதான் தெய்வமா..?” என்று கேட்டான் மன்னன்”.

“நாராயணனுக்கு வியர்த்துக் கொட்டியது. அவனால் வாயைத் திறக்க முடியவில்லை. அறிஞர்களும் மக்களும் கேலியாகச்

சிரித்தனர். அதனால் அன்பானவர்களே, சொல்வன்மை இறைவனாற் கொடுக்கப்பட்ட கொடை. இது பூர்வ புண்ணிய பலனால் வருவது. இறைவன் கொடுத்த கொடையைக் கல்வியால் பட்டை தீட்ட வேண்டும். நாராயணனைப் போன்றோர் மேடைப்பேச்சிற்கு உரியவர்களே தவிர ஆய்வுக்குரியவர்களல்ல. அவர்களைப் போன்றோர் கல்வி கற்றால் மேதையாகலாம்" என்றார் நமசிவாயம் சுவாமிகள்.

***கல்லாதான் கண்ட கழிநுட்பம் காட்டரிதால்***
***நல்லேம்யாம் என்றொருவன் நன்கு மதித்தலென்***
***சொல்லால் வணக்கி வெகுண்டு அருகிற்பார்க்கும்***
***சொல்லாக்கால் சொல்வது இல்.***

அறிவு வேறு, கல்வி வேறு. அறிவைக் கல்வியால் செப்பமிட்டு செயலாற்றல் வேண்டும். "**சொல்லாக்கால் சொல்லுவது இல்"** என்பது பழமொழி.

**6** "அன்பானவர்களே, தன்னைப் பற்றிப் புகழ்ந்து மற்றவர்களுக்குக் கூறலாகாது. அது போலச் செயற்கரிய செயல்களைச் செய்த போதும் அதை மற்றவர்கள் புகழ்ந்தால் அளவுக்கதிகமாக மகிழ்ந்து கர்வங் கொள்ளலாகாது. அப்படியில்லாது கர்வங் கொண்டால், தன் குறைபாடுகளைத் தானே வலிந்து கூறுவதாக அமையும்."

“நாகையூர் மன்னன் இளம்வழுதி பெரும் வீரன். அவனது குதிரைப் படைத் தளபதி பூபதி பாண்டியன். அஞ்சாநெஞ்சன்; சுத்தமான வீரன். ஆனால் புகழை விரும்புகின்றவன். நாகையூர் மன்னன் அயலில் உள்ள நாடுகளைக் கைப்பற்றிப் பேரரசனாக வரவிரும்பினான். அதனால் அவன் தனது எண்ணத்தை முரசு மூலம் சகல நாடுகளுக்கும் அறிவித்தான். சில மன்னர் பணிந்து அதை ஏற்றுக் கொண்டனர். பலர் அதைச் சவாலாக எடுத்தனர். இளம்வழுதி அருகில் உள்ள சிறிய நாடான கொக்கூர் மீது முதலில் படையெடுத்தான். அதை இலகுவாக வென்ற பின் திருவாதூர் மீது படையெடுத்தான். திருவாதூர் சிறிய நாடானாலும் திறமையான வீரர்களைக் கொண்ட நாடு. அதனால் போர் உக்கிரமாக நடைபெற்றது. அப்போரில் இளம்வழுதி தோற்றுவிடுவானென்றே பலரும் எண்ணினர். போரின் எதிர்பாராத அழிவால் வல்லமை குன்றினாலும், துன்பத்திற்கு அஞ்சாத நெஞ்சுறுதி படைத்த இளம்வழுதி மூலப் படைக்குத் தலைமைதாங்கி உக்கிரமாகப் போர் செய்து கொக்கூரை வென்றான். அப்போரில் பெரும் துணையாகப் பூபதிபாண்டியன் கடமையாற்றினான். அதற்காக மன்னன் பூபதி பாண்டியனைப் பாராட்டிப் பரிசளித்தான்.அதனால் போர் வீரர்களும் தளபதிகளும் பூபதிபாண்டியன் இல்லாவிட்டால் கொக்கூர்ப் படைகள் தோற்றிருக்கும் என்றனர். அதனால் கர்வங் கொண்ட பூபதி பாண்டியன் தான் மன்னனிலும் பார்க்கப் பெரும் வீரன் என்று நினைத்துத் திமிருடன் நடந்து கொண்டான்.”

“அடுத்து இளம்வழுதி  சேனையூரின் மீது படையெடுக்கத் தீர்மானித்தான். அது பற்றி அவன் பூபதிபாண்டியனுக்குச் சொல்லக்கூட இல்லை. படையெடுப்பிற்கு முதல் நாள் பூபதி பாண்டியனை அழைத்துச் சொன்னான்; “தளபதியாரே, சேனையூர் மீது போர் தொடுக்க எண்ணியுள்ளேன். கொக்கூரில் நடந்த உக்கிரமான போரால் தாங்கள் களைத்து விட்டீர்கள். இப்போது ஓய்வெடுங்கள். அடுத்து வயலூர் மீது போர் தொடுக்கும் போது தாங்கள் கலந்து கொள்ளலாம்” என்றான்”

“பூபதி பாண்டியன் எதுவும் பேசாது சென்று விட்டான். முதலமைச்சர் சொன்னார் ; “காரணமின்றிப் பூபதி பாண்டியனை விலக்கியுள்ளீர்கள். அவன் வீரன்.”

“அவன் வீரன் தான். அதைப் பிறர் கூறுதல் வேண்டுமே தவிர அவன் கூறக்கூடாது. தான் பெரிய வீரன் என்று நினைத்து, மற்றைய வீரரைக் குறைத்து மதிப்பிட்டதால் தான் கொக்கூர்ப் படை எடுப்பில் பல நெருக்கடிகளைச் சந்திக்க வேண்டியிருந்தது. அதனால் தான் நான் மூலப்படைத் தலைமையை ஏற்றுப் படையை நடத்தினேன். இல்லாவிட்டால் எமக்குத் தோல்வி தான் ஏற்பட்டிருக்கும்.  தன்னைப் பற்றி அளவுக்கதிகமாகப் புகழ்பவன் தனது குறைபாடுகளையே அம்பலப்படுத்துகிறான்” என்றான்”.

“பெரும் நாடான வயலூருக்குச் சென்ற படைகள் குறிப்பிட்ட நாட்களுக்கு முன்பே வயலூரைக் கைப்பற்றின. பின் ஏனைய நாடுகளையும் கைப்பற்றி இளம்வழுதி பேரரசனானான். அதனால்

அன்பானவர்களே, திறமைசாலிகள் தமது திறமை மீது நம்பிக்கை கொள்ளவேண்டுமே தவிரக் கர்வங் கொள்ளக் கூடாது. கர்வங் கொண்டால் மேலானவர்கள் அவனைப் பற்றி ஆராய்வு செய்வர். அப்பொழுது அவர்களின் மறைக்கப்பட்ட தகவல்கள் யாவும் வந்து சேரும். அதனால் அவர்களின் பலமும் பலவீனமும் வெளிப்படும். அது தான் பூபதிபாண்டியனுக்கு நடைபெற்றது. போர் தாமதமடையக் காரணமாக இருந்தவன் பூபதி பாண்டியன் என்று இளம்வழுதி கண்டு கொண்டமையால் தான் அவன் வயலூர்ப்படையெடுப்பின் போது அவனை நீக்கினான். ஆகவே, அன்பானவர்களே, வெற்றியடையும் போது தான் நாம் அவதானமாக இருத்தல் வேண்டும்" என்றார் நமசிவாயம் சுவாமிகள்.

***செம்மாந்து செல்லும் செறுநரை அட்டவர்***
***தற்மேற் புகழ்பிறர் பாராட்டத் - தம்மேற்றாம்***
***வீரஞ்சொல் லாமையே வீழ்க களிப்பினும்***
***சோரம் பொதியாத வாறு.***

வீரர்கள் பிறரின் பாராட்டுக்களை நம்பித் தம்மை உயர்ந்த வீரர்களாக எண்ணக் கூடாது. அப்படி எண்ணுவது அவரின் பலவீனத்தை அவரே வெளிக்காட்டுவதாக இருக்கும். **"சோரம் பொதியாத வாறு"** என்பது பழமொழி.

7 “அன்பானவர்களே, ஊதியம் பெறாமல் யாரும் எந்த வேலையையும் செய்ய மாட்டார்கள். ஒருவன் ஒரு பசுவை நெடுங்காலமாக வளர்க்கிறான். அது கன்று ஈனவில்லை. பலமுறை அவன் பட்டியிலடைத்தும், அது கர்ப்பம் தரிக்கவில்லை. அதனால் அதை அவன் விற்று விட்டான். தனது வண்டியேயானாலும் எண்ணெய் விட்டால் தான் அது ஓடும். முக்கியமான வேலைகளென்றால் கூலியை அதிகமாகக் கொடுத்தால், அதை விரைவாக முடிக்கலாம். கூலி கொடுக்கா விட்டால் பத்தாண்டுகளானாலும் அந்த வேலை முடிய மாட்டாது. எனவே கூலி கொடாமல் எந்த வேலையையும் ஏவக்கூடாது.”

“வேலூரிலே ஆறுமுகம் என்றொரு கூலித்தொழிலாளி இருந்தான். அவன் நல்ல உழைப்பாளி. அவனுக்கு மூன்று ஆண் பிள்ளைகளும் இரண்டு பெண்பிள்ளைகளும் இருந்தனர். ஐவரும் பட்டணத்தில் படித்து வந்தனர். அவர்களின் கல்விச் செலவுக்காக ஆறுமுகம் அயராது அல்லும் பகலும் உழைப்பான்”.

“அந்த ஊரில் வேதாசலம் என்றொரு பெரியவர் வாழ்ந்து வந்தார். அவர் தனது வேலைகளுக்குக் கூலி கொடுக்க மாட்டார். அவர் கற்ற கல்வி காரணமாக அவரை மக்கள் மதித்து வந்தனர். அவரை வீதியில் யாராவது கண்டால் மறைந்து விடுவார்கள். ஆனால் ஆறுமுகம் அவர் கூறும் வேலைகளைக் காலம் தாழ்த்தியென்றாலும் செய்து முடிப்பான். அவருக்கு இரண்டு

சகோதரர்கள். இருவரும் வெளியூரில் இருந்தனர். அவருடன் அவரது தாயாரும் வாழ்ந்து வந்தார்".

"அந்த ஊரவர்கள் தமது வீட்டில் அல்லது தோட்டத்தில் வேலைகள் இருந்தால் ஆறுமுகத்தை தான் முதலில் அழைப்பார்கள். அவன் வேறு இடங்களில் வேலை செய்தால், அவ்வேலையை அவன் முடித்து விட்டு வரும் வரை பொறுத்திருப்பார்கள். அருணாசலம் என்றொரு பெரியவர் அவ்வூரில் வாழ்ந்து வந்தார். அவரது வேலைகளை ஆறுமுகமே செய்வான். வேலை முடிந்ததும் சம்பளம் கொடுப்பார். அத்துடன் காய்கறிகள், தேங்காய், பழ வகைகள் கொடுப்பார். இடைக்கிடை அவனது பிள்ளைகளின் கல்வி பற்றி விசாரித்து உதவி செய்வார். அதனால் எங்குவேலை செய்தாலும் அதைக் குறையில் விட்டு விட்டு ஆறுமுகம் அவரின் வீட்டு வேலைகளைச் செய்ய வந்து விடுவான்."

"வேதாசலத்தின் தாய்க்குக் கடுமையான நோய் வந்தது. அவள் தனது இளைய மகனைப் பார்க்க வேண்டும் என்று வேதாசலத்திற்குச் சொன்னாள். அவளது வாய் எந்நேரமும் 'நான் இறந்து விடுவேன். அதற்கு முன் அவனைப் பார்க்க வேண்டும்' என்று முணுமுணுத்தது. இளைய மகனின் பெயரைச் சொல்லிக் கொண்டிருந்தது. அதனால் வேதாசலம் ஆறுமுகத்தின் வீட்டிற்குச் சென்று நிலைமையைக் கூறித் தனது இளைய சகோதரனை அழைத்து வருமாறு கூறினார். ஆறுமுகம் தான் அருணாசலத்தின் வீட்டு வேலை செய்வதாகவும், அது முடிந்ததும் செல்வதாகவும்

கூறினான் ; "அருணாசலத்திற்கு நான் சொல்கிறேன் நீ போய் அழைத்து வா" என்றார் வேதாசலம்".

"ஆறுமுகத்தின் மகன் நூல் ஒன்றை வாங்குவதற்குப் பணம் கேட்டிருந்தான். ஐந்து பேரும் பட்டணத்தில் படிப்பதால் அவனுக்கு எந்நாளும் பணத்தட்டுப்பாடு இருக்கும். பணத்தட்டுப்பாடு ஏற்படும் வேளைகளில் அவன் அருணாசலத்திடம் உதவி கேட்டான்"

"அன்று சென்று ஆறுமுகம் தனது நிலையைக் கூறிய போது அருணாசலம் சொன்னார்; "ஆறுமுகம், அவன் உயர் கல்வி கற்கிறான். தேவையானவற்றை வாங்கிக் கொடுக்க வேண்டும். நீ வேலையைச் செய், நான் பட்டணம் போகிறேன் உனது மகன் படிக்கும் கல்லூரிக்குச் சென்று அவனைச் சந்தித்து அவன் வாங்க வேண்டிய புத்தகத்திற்கான காசைக் கொடுக்கிறேன்" என்று கூறிவிட்டுச் சென்று விட்டார்."

"அன்று இரவு மீண்டும் வேதாசலம் ஆறுமுகத்தின் வீட்டுக்கு வந்த போது தான் ஆறுமுகத்திற்கு அவர் சொன்னது நினைவிற்கு வந்தது. "இப்பவே போகிறேன்" என்று சொன்னான் ஆறுமுகம்"

"ஆறுமுகம், அம்மாவின் நிலை மிகவும் கவலைக்கிடமாக உள்ளது. அவா இளையமகனின் பெயரைச் சொல்லிப் புலம்புறா. விடிய முன்னம் இறந்து விட்டால் பாவம் எனக்கு வந்து சேரும்.

எனவே போய் கூட்டி வா" என்று கூறிவிட்டுப் புறப்பட்டார் வேதாசலம்."

"அவனுக்கு உடல் நொந்தது. அதனால் மறு நாள் காலை பார்ப்போம்" என்று நினைத்துப் படுத்து விட்டான். மறு நாட்காலை அருணாசலம் வந்து தனது மகனைப் பாடசாலையில் கொண்டு சென்று விடுமாறு கூறிச் சென்றார். அதனால் ஆறுமுகம் அருணாசலத்தின் மகனை அழைத்துக் கொண்டு பாடசாலைக்குச் சென்றான். பட்டணத்தில் அவன் வேலை செய்யும் கடைக்காரன் ஆறுமுகத்தைக் கண்டதும் கடையில் வேலை கொடுத்தான். அவன் கடனாக ஆறுமுகத்திற்குப் பொருள்கள் கொடுப்பவன். ஆறுமுகம் வேலை முடிந்து வீட்டுக்கு வர இரவு எட்டுமணியாகிவிட்டது. அப்பொழுது வேதாசலத்தின் தாயார் இறந்து விட்டார். ஆகையால் அன்பானவர்களே, சிறிய காரியமானாலும் கூலி கொடாது கூலிக்காரனை ஏவாதீர்கள். உலகில் உள்ள எவரும் தமக்குப் பயன்படாத எந்த விடயத்தையும் அக்கறையுடன் செய்ய மாட்டார்கள். வேதாசலத்தின் தாய் தனது இறுதி விருப்பம் நிறைவேறாது இறந்து போனாள். இது மிகப் பெரிய பாவமாகும்" என்றார் நமசிவாயம் சுவாமிகள்.

*ஆணியாக் கொண்ட கருமம் பதிற்றாண்டும்*
*பாணித்தே செய்ய வியங்கொள்ளின் - காணி*
*பயவாமல் செய்வாரார் தஞ்சாகா டேனும்*
*உயவாமல் சேறலோ இல்.*

ஊதியம் கொடுக்காது வேலையை ஏவினால் அந்த வேலை ஒரு போதும் முடியாது. "**தஞ்சாகா டேனும் உயவாமல் சேறலோ இல்"** என்பது பழமொழி.

8 "அன்பானவர்களே, ஒருவர் தம் குலத்துக்குரிய குணத்தை எவ்வளவு தான் மறைக்க முயன்றாலும், அவரது குலத்திற்குரிய குணம் தான் எப்பொழுதும் அவரை அறியாமல் முற்பட்டுத் தோன்றும். தம்முடைய குடும்பப் பெருமையைக் காப்பேன் என்று முயல்கின்றவன் ஒரு போதும் தன் குடிப்பெருமைக்கு இழுக்கு வரும்படியாக நடக்க மாட்டான். பாரபட்சம் காட்டாது நடந்து கொள்ளலும், தீய செயல்களுக்காக வெட்கப்படுவதும் உயர்ந்த குடும்பத்தில் பிறந்தவர்களது செயல்களாகும்."

"மன்னன் ஒருவன் மாறுவேடம் பூண்டு நாட்டைப் பார்க்கச் சென்ற போது, மந்தைகளை மேய்க்கும் இடையனது குடிக்குச் சென்றான். வந்தவனை வரவேற்று அவனுக்குப் பசியாற பால் கொடுத்தாள் அந்த இடையனின் மகள். அவளின் பேரழகில் மயங்கிய மன்னன் அவளைத் திருமணம் செய்து கொண்டான். ஒரு விருந்தில் மகாராணியான இடைச்சிக்கு அமிர்தம் போன்ற பால் வழங்கப்பட்டது. அப்போது அவள் மோப்ப சக்தி மூலம் அப்பால் பசுவின் பால் அல்ல என்று சொல்லி அதை அருந்தாதிருந்தாள். ஒருவர் தமது குலத்திற்குரிய குணத்தை எவ்வளவு தான்

மறைத்தாலும், அது எதிர்பாராத வேளையில் கிளர்ந்து எழுந்து சம்பந்தப்பட்டவரைக் காட்டிக் கொடுத்து விடும்.”

“சேனையூர்ச் சந்தையில் செருப்புத் தைத்து விற்பவன் நடராசா. அவனது மகன் இராகுலன் நன்றாகப் படித்துப் பல்கலைக்கழகத்திற்குத் தெரிவாகி முதலாம் இடத்தில் சித்தி பெற்றான். அதனால் அவனுக்குப் பல்கலைக்கழகத்தில் உயர்ந்த உத்தியோகம் கிடைத்தது. வேலூர்ப் பண்ணையாரின் மகள் அருந்ததி அவனுடன் பல்கலைக்கழகத்தில் கற்றவள். அதனால் அவர்கள் அடிக்கடி சந்தித்துக் கதைத்தனர். அந்தச் சந்திப்புக் காதலாக மலர்ந்தது. அது பற்றிப் பண்ணையார் அறிந்ததும் இராகுலனின் குடிப்பிறப்புப் பற்றி ஆராய்ந்தார். இராகுலன் செருப்புத் தைக்கும் ஒரு தொழிலாளியின் மகன் என்பதால் அத்திருமணத்திற்கு அவர் சம்மதிக்கவில்லை. அதனால் அருந்ததி தற்கொலை செய்ய முயன்றாள். தனது ஒரே மகளை இழக்க விரும்பாத பண்ணையாளர் விருப்பமின்றி இராகுலனுக்கு அருந்ததியைத் திருமணம் செய்து கொடுத்தார். இராகுலன் மிகவும் நல்லவன். அவர்களது குடும்ப வாழ்வு மிகவும் மகிழ்ச்சியாகவும் சிறப்பாகவும் நடந்து கொண்டிருந்தது”.

“ஒரு நாள் பண்ணையாளரின் வீட்டுக்கு அவரின் நண்பர் ஒருவர் வந்தார். அவர் மிகுந்த தனவந்தர். எவ்வேளையிலும் வெளிநாட்டு உடைகளையும், நகைகளையும், செருப்பையும் அணிந்திருப்பார். அன்று அவர் வெளிநாட்டில் இருந்து அவரது

மகன் கொண்டு வந்து கொடுத்த செருப்பை அணிந்திருந்தார். செருப்பின் மேல் அழகிற்காகச் சிவப்புப் பட்டி ஒன்று தைக்கப்பட்டிருந்தது. அதைக் கண்டதும், அதை எடுத்துப் பார்த்த இராகுலன் அதன் அமைப்பைப் பார்த்து விட்டுச் சொன்னான் ; "அழகான இந்த விலையுயர்ந்த செருப்பின் சிவப்புப் பட்டியை நீக்கிவிட்டு அணிந்து பாருங்கள் எடுப்பாக இருக்கும்"

"வந்தவர் சரி அப்படியே செய்வோம் என்று கூறிவிட்டு அச்சிவப்புப் பட்டியை நீக்கித் தரும்படி சொன்னார். உடனே இராகுலன் கத்தரிக்கோலை எடுத்துச் சிவப்புப்பட்டி இருந்த இடம் தெரியாமல் கத்தரித்து விட்டுக்கொடுத்தான். வந்தவருக்கு ஆச்சரியமாய் இருந்தது; "வெளிநாட்டின் செருப்புத் தைக்கும் நிபுணருக்கில்லாத நுட்பமான அறிவு உங்களுக்கு இருக்கிறது. நீங்கள் வெளிநாட்டில் இருந்தால் போற்றப்படுவதோடு பெரும் தொகைப் பணமும் சம்பாதிப்பீர்கள்" என்றார்".

"அவரது புகழ்ச்சி இராகுலனை மெய்மறக்கச் செய்தது ; "இதை விட அப்பா சிறப்பாகத் தைப்பார்" என்றான்".

"பண்ணையாளர் அதிர்ந்து போனார். வந்தவரின் முகம் சுருங்கியது. பண்ணையாரை அவர் ஒரு மாதிரியாகப் பார்த்தார். அப்பொழுது தான் இராகுலனுக்குத் தான் செய்த தவறு நினைவிற்கு வந்தது. ஆகையால் அன்பானவர்களே, தொழில் விடயமாகக் குணம் வெளிப்படுவது குற்றமல்ல. தீய செயல் காரணமாகக் குணம்

வெளி வந்தால் பல துன்பங்களைத் தரும்” என்றார். நமசிவாயம் சுவாமிகள்.

***காப்பான் மடமகள் காப்பான்கைப் பட்டிருந்தும்
மேய்ப்பாட்ட தென்றுண்ணா ளாயினாள் தீப்புகை போல்
மஞ்சாடு வெற்ப! மறைப்பினும் ஆகாதே
தஞ்சாதி மிக்கு விடும்.***

ஒருவரது குலப்பண்பு அவரை அறியாமலே வெளிப்பட்டு அவரைக் காட்டிக் கொடுத்து விடும். **‘மறைப்பினும் ஆகாதே தம் சாதி மிக்குவிடும்”** என்பது பழமொழி.

9

“அன்பானவர்களே, ஒரு பணியை ஒருவரிடம் செய்யுமாறு ஒப்படைத்த பின் அப்பணியைப் பற்றி அக்கறையில்லாது இருக்கக் கூடாது. அவரை இடையறாது கண்காணித்து அவர் செய்யும் தொழிலில் தவறுகள் உண்டானால் திருத்துதல் வேண்டும். வைரமில்லாத மரத்தைச் செதுக்க வேண்டிய நிலை ஏற்பட்டாலும் உளியைத் தட்டினாலன்றி மரம் சீவப்பட மாட்டாது. நற்குடியிற் பிறந்து குற்றங்களிலிருந்து நீங்கி, பாவச் செயல்களைச் செய்ய நாணப்படுபவனிடத்தும் ஒரு செயலை ஒப்படைத்த பின் அதைப் பற்றிச் சிந்தனையில்லாது இருக்கக் கூடாது. எவ்வாறு ஆராய்ந்து தெளிந்தாலும், செயலை மேற்கொண்டு செய்யும் போது வேறுபடும் மனிதர்கள் பலர் இருக்கின்றனர். பொருள் ஒருவனது சிந்தனையை மாற்றும். இரக்க சுபாபமும் மாற்றும், ஆசையும் மாற்றும். ஆகையால் தொழிலைச் செய்விக்கும் போது நம்பிக்கையோ, அவநம்பிக்கையோ கொள்ளாது, தொழில் செய்பவரைச்

சந்தேகிக்காது, அவனும் சந்தேகப்படும் படியாக நடக்காது மிகவும் அவதானமாக நடத்தல் வேண்டும்."

"மயில்வாகனம் பெரும் வர்த்தகர். அவர் தனது மகளின் திருமணத்திற்கு நூறு பவுணில் ஆபரணங்கள் செய்ய விரும்பினார். அதனால் அவர் பொற்கொல்லனை அழைத்து முதலில் பத்துப் பவுணைக் கொடுத்து ஓர் அட்டியல் செய்யச் சொன்னார். பவுண் கொடுத்துப் பத்துத் தினங்கள் கழித்து அவர் பொற்கொல்லனின் கடைக்குச் சென்றார். பொற்கொல்லன் அவர் கொடுத்த பவுணை உருக்கி வைத்திருந்தான். அவரைக் கண்டதும் சொன்னான் ; "ஐயா திருமணத்திற்கு இன்னும் ஆறுமாதங்கள் உள்ளன. திருமத்தன்று தானே மணமகளுக்கு ஆபரணங்களை அணிதல் வேண்டும் . நான் பத்துத் தினங்களில் தந்து விடுவேன்" என்றான்."

"திருமணத்திற்கு ஆறு மாத காலம் இருந்தாலும், நூறு பவுணில் நகை செய்தல் வேண்டும். முதலில் தந்த பவுணில் நகை செய்து தா" என்றார். அவன் ஒப்புக் கொண்டான்."

"அதன் பின் பத்து நாட்கள் கழித்து மயில்வாகனம் சென்றார். உருக்கிய பவுண் அப்படியே இருந்தது. அவருக்குக் கோபம் வந்தது; உன்னால் செய்ய முடியாவிட்டால் நான் தந்த பவுணைத் தா" என்று கேட்டார்".

"நாளைக்கு வாருங்கள் தந்து விடுகிறேன்" என்றான் பொற்கொல்லன். ஆனால் மயில்வாகனம் ஐந்து நாட்கள் கழித்துச் சென்றார். அவன் நகைகளைக் கொடுத்தான். மீண்டும் பத்துப் பவுணைக் கொடுத்தார். அவன் காலங் கடத்திக் கொடுத்தான். இப்படியே நூறு பவுண்களையும் கட்டியாகக் கொடுத்தார் மயில்வாகனம். திருமணத்திற்கு முதல் நாள் கடைசியாகக் கொடுத்த பத்துப் பவுணுக்குரிய ஆபரணங்களைக் கொடுப்பதாகச் சொன்ன பொற்கொல்லன் திருமணத்தன்று காலையிலே அவற்றைக் கொடுத்தான். ஆகையால் அன்பானவர்களே, மிகவும் நம்பிக்கைக்குரியவர்களானாலும் அடிக்கடி சென்று விசாரிக்கா விட்டால் அவர்கள் காலம் இருக்கிறது என்று நினைத்து ஆறுதலாக இருந்து இன்னொருவரின் வேலைகளைச் செய்வர்" என்றார் நமசிவாயம் சுவாமிகள்.

***விட்டுக் கருமம் செயவைத்த பின்னரும்***
***முட்டா தவரை வியங்கொளல் வேண்டுமால்***
***தொட்டக்கால் மாழ்கும் தளிர்மேலே நிற்பினும்***
***தட்டாமல் செல்லாது உளி.***

எவ்வளவு பொறுப்புடைய பணியாளராக இருந்தாலும், அவரது குலத்தொழிலைச் செய்பவராக இருந்தாலும், அவரைக் கண்காணித்துக் கொண்டே இருத்தல் வேண்டும். '**தட்டாமற் செல்லாது உளி**' என்பது பழமொழி.

10 "அன்பானவர்களே, சிறந்த அரசெனப்படுபவன் சிறந்த படை, உயர்ந்த குடிமக்கள், குறைவில்லாத உணவுப் பொருட்கள், திறமை மிக்க அமைச்சர்கள், உயர்ந்தவர்களின் நட்பு, பாதுகாப்பு முறைகள் என்ற ஆறு உறுப்புக்களையும் பெற்றிருத்தல் வேண்டும். காலம் தாழ்த்தாது நடவடிக்கை எடுப்பது, கல்வியில் தேர்ச்சி, துணிவுடமை என்பவை ஆட்சியாளனின் அணிகலன்களாகும். குடிகள் நெருங்குவதற்கு எளியவனாகவும், கடுமையான சொற்களைப் பேசாதவனாகவும், நீதி நெறி முறைகள் தவறாமல் குடிகளைக் காப்பாற்றும் திறமை உள்ளவனாகவும் உள்ள அரசனைக் குடிகள் தெய்வமாகப் போற்றும். இதனை விடுத்துச் சக்கரப் படையை உடைய திருமாலேயானாலும், செங்கோன்மை இல்லாதிருந்தால், அவரைச் சேர்ந்தவர்கள் கூட அவரை மதிக்காது இகழ்ச்சியாகவே பேசுவர். இருப்பினும் கொடுங்கோன்மை உடையவனாகவும் அரசன் இருத்தல் வேண்டும். அரசன் தீயவர்களிடத்துக் கொடுங்கோலனாகவும், குடிகளிடத்து அன்புள்ளவனாகவும் விளங்குவதே சிறப்பானதாகும்."

"காரையூர் மன்னன் நம்பியாண்டான் நம்பி இறைவன் மீது மிகுந்த பக்தியுள்ளவன். குடிகளை மிகவும் அன்புடன் நேசிப்பவன். தீய செயல்களைச் செய்பவர்களை இரக்கமின்றித் தண்டிப்பவன். அதனால் பெரும்பான்மையான மக்கள் அன்பு கலந்த பயத்துடனே வாழ்ந்து வந்தனர். அன்று காரையூரில் உள்ள கிராமமொன்றின் வீட்டுக்குள்ப் புகுந்த திருடனொருவன் ஆயுதங்களைக் காட்டி மிரட்டி வீட்டாரைக் கட்டி வைத்து விட்டுப் பெருந்தொகையான பொருட்களைக்

கொள்ளையடித்துச் சென்று விட்டான். வீட்டுக்காரன் அரச சபைக்குச் சென்று முறையிட்டான். முறையிட்டு  ஒரு மாதம் கழிந்தும் அரசன் உரிய நடவடிக்கை எடுக்கவில்லை. அதனால் மக்கள் கவலைப்பட்டனர். கிராமத்தில் மீண்டும் சில திருட்டுக்கள் நடைபெற்றன. திடீரென்று காவலர் திருடியவர்கள் என்று  கூறி ஐந்து பேரைக் கைது செய்து அரச சபைக்குக் கொண்டு வந்தனர்.  அமைச்சர் விசாரித்த போது ஐவரும் தாம் எடுக்கவில்லை என்று கூறினர். அவர்களை அரசன் தனித் தனி அறைகளில் அடைத்து வைத்தான். பின்பு ஒவ்வொருவராக அழைத்து விசாரணை செய்தான் ; "நீ தான் களவு எடுத்தாய் என்று விசாரணைகள் மூலம் நிரூபிக்கப்பட்டுள்ளது. களவெடுப்பவர்களுக்கு மரணதண்டனை அளிப்பதென்று உனக்குத் தெரியும். உண்மையைச் சொன்னாலும், சொல்லாவிட்டாலும் சிரச்சேதம் செய்யப்படுவது உறுதி. ஏனென்றால் நீ கிராமத்தில் பலதீய செயல்களைச் செய்துள்ளாய். உண்மையை ஒத்துக்கொள்பவர்களை மன்னிப்பது எனது குணம். எனவே உண்மையைச் சொல்" என்றவன். முதலமைச்சரை அழைத்து ; " உடனே சிரச்சேதம் செய்யுங்கள்" என்று கூறிவிட்டுச் சென்றான்."

"கைது செய்யப்பட்டவர்களில் நால்வர்; "தாம் திருடவில்லையென்றும், முன்பு பலதீமைகளை மக்களுக்குச் செய்தோம்" என்றும் கூறினர். ஒருவன் மட்டும் சொன்னான் ; " "மன்னா, நான் தான் திருடினேன். எனது தாயாருக்கு கடும் சுகவீனம். அதற்கு வைத்தியஞ் செய்யவே திருடினேன். எனக்கு மரண தண்டனை அளித்தால் எனது பெற்றோரைக்

காப்பாற்றுங்கள். அவர்கள் வயது சென்றமையால் உழைத்து உண்ணமாட்டார்கள்" என்றான்."

"மன்னன் அவனை விடுதலை செய்து விட்டு முதலமைச்சருக்குச் சொன்னான் ; "அமைச்சரே, தீயவர்களுக்கு இரக்கம் காட்டக் கூடாது. அரசனானவன் மக்கள் மீது அன்புள்ளவனாகவும், தீயவர்களைக் கடுமையாகத் தண்டிப்பவனாகவும் இருத்தல் வேண்டும். அதனால் தான் திருடாத நால்வருக்கும் மரண தண்டனை அளிப்பதாகச் சொன்னேன். அவர்கள் நம்பி விட்டனர். அதனால் தான் திருடனைக் கண்டு பிடிக்க முடிந்தது."

"அதனால் அன்பானவர்களே, அரச முறை தற்பொழுது இல்லாவிட்டாலும், அதிகாரமுள்ளவர்கள் இருக்கிறார்கள். அவர்கள் செல்வாக்குள்ளவர்களானாலும், தம் கடமையிலிருந்து தவறக்கூடாது. தீயவர்களுடன் கொடுமையாகவும், ஏனையவர்களிடம் அருளுடனும் நடக்க வேண்டும்" என்றார் நமசிவாயம் சுவாமிகள்.

***அங்கோல் அவிர்தொடி! ஆழியான் ஆயினும்***
***செங்கோலன் அல்லாக்கால் சோந்தாரும் எள்ளுவரால்***
***வெங்கோன்மை வேந்தர்க்கண் வேண்டும் சிறிதெனினும்***
***தண்கோல் எடக்குமாம் மெய்.***

பகைவரிடத்துக் கொடியவனாகவும், தன்குடிமக்களிடத்து அருளாளனாகவும் அரசன் நடந்து கொள்ளல் வேண்டும். '**தண்கோல் எடக்குமாம் மெய்**' என்பது பழமொழி.

## 11

"அன்பானவர்களே, சிறந்த ஒழுக்கமுள்ள பெரியவர்கள், ஒரு செயலைச் செய்யும் போது பொய்யைக் கூறினாலும், தாம் எடுத்த செயலை வெற்றியுடன் செய்து முடிப்பர். இவ்வாறு செயலில் ஈடுபடுவோர் அச்செயலை எப்படிச் செய்தாலும், அதில் குறைபாடில்லாதிருக்க வேண்டும். பொய் கூறுவது இழிந்த செயல் ; இது பெரும் பாவம் என்று நினைத்து முக்கியமான விடயங்களைப் பெரியவர்கள் செய்யாது விடமாட்டார்கள். நன்மை தரும் செயலுக்காக எதையும் செய்யலாம். ஒருவன் ஒரு பசுவை வெட்டி உண்பதற்காக அதைக் கொண்டு வரும் போது அவனைத் தாக்கிப் பசுவை விடுவிப்பது நன்மையையே தரும். செயல்கள் பாவப்பட்டவையாக இருந்தாலும் செய்யப்படும் நோக்கம் புனிதமாக இருந்தால் அவை புண்ணியங்களாக மாறும்".

"கணபதிப்புலம் என்ற ஊரில் வாதவூரன் என்றொருவர் வாழ்ந்து வந்தார். அவருக்கு ஆருணி என்ற பெண் பிள்ளையும், மாதவன் என்ற ஆண் பிள்ளையும் இருந்தனர். அதே ஊரில் கந்தராசா என்றொரு பெரியவர் வாழ்ந்து வந்தார். அவர் பொது விடயங்களில் ஈடுபடுபவர். அவர் சொன்னால் அக் கிராமத்தவர்கள் கேட்பார்கள். அதனால் வாதவூரன் கந்தராசா விடம் வந்து சொன்னார் ; "ஐயா, எனது மகள் ஆருணிக்குத் திருமண வயதாகி விட்டது. ஆனால் அவளுக்கு வலிப்பு நோய் உள்ளது. அது யாருக்கும் தெரியாது. வைத்தியர்கள் திருமணமாகினால் அந்நோய் சுகமாகிவிடும் என்று சொல்கின்றனர். அதனால் கந்தையாவின் மகன் செந்தூரனுக்கு எனது மகளைத் திருமணம்

செய்து கொடுக்க விரும்புகிறேன். அவர்களும் விரும்புவார்கள். அதை நீங்கள் தான் முன் நின்று நடத்தி வைத்தல் வேண்டும்” என்றார்.”

“கந்தராசா திகைத்துப் போனார். நோயுற்ற பெண்ணை யாரும் திருமணம் செய்யச் சம்மதிக்க மாட்டார்கள். அத்துடன் அதை மறைத்துச் செய்வது பாவம். வைத்தியர்கள் சொற்படி விதி நடக்காது. செந்தூரன் என்னில் மதிப்பு வைத்திருக்கிறான். உண்மையைச் சொல்லித் தான் செய்தல் வேண்டும் .உண்மையைச் சொல்லாமல் என்னால் அவர்களுடன் கதைக்க முடியாது” என்றார். அதைக் கேட்ட வாதவூரனுக்குப் பயமாக இருந்தது; “உண்மையைக் கூறினால் அது ஊர் முழுவதும் பரவிவிடும்’ என நினைத்து ; ‘ மகனிடம் கேட்டுச் சொல்கிறேன்’ என்று கூறிவிட்டுச் சென்றார்”.

“அவர் சென்ற பின் அவரது மகன் மாதவன் வந்து தங்கையின் நோயை மறைத்துச் செயற்படும்படி கூறினான். அதற்குக் கந்தராசா மறுத்து விட்டார். அதன்பின் தந்தையும் மகனும் யோசித்து விட்டு ; “கடவுளிடம் பாரத்தைப் போட்டு விட்டோம். கேளுங்கள், நடப்பது நடக்கட்டும்” என்றனர்”

“கந்தராசா செந்தூரனைச் சந்தித்து ஆருணியின் நோயைப் பற்றிக் கூறினார் ; வைத்தியர் கூறியதையும் கூறினார். அதற்குச் செந்தூரன் சொன்னான் ; “ஐயா, நீங்கள் உண்மையைக் கூறியமையால் நான் ஒத்துக் கொள்கிறேன். பலர் உண்மையை மறைத்துத் தான் செயற்படுகின்றனர். ஆரூரன் தனது மாமன் மகள்

ஊனமானவள் என்று சொல்லி வேறோர் பெண்ணைத் திருமணம் செய்தான். ஆனால் விபத்தில் சிக்கி அப்பெண் கால்களை இழந்து விட்டாள். எது விதியோ அது தான் நடைபெறும்" என்று கூறினான். அவன் கூறியதை அவர் வாதவூரனுக்கும் மாதவனுக்கும் கூறினார். திருமணம் வெகுவிமரிசையாக நடைபெற்றது."

"சில நாட்களின் பின் அவ்வூரில் வசிக்கும் நாகநாதன் வந்து கந்தராசாவுக்குச் சொன்னார் ; "ஐயா, எனக்கு ஒரே ஒரு மகள். அவள், தாய் மாமனின் மகனை விரும்பினாள். அவனும் விரும்பினான். ஆனால் அவன் சீதனத்திற்கு ஆசைப்பட்டு வேறோரு பெண்ணைத் திருமணம் முடித்து விட்டான். இந்தக் காதல் பிரச்சினை ஊரவர்களுக்குத் தெரியாது. இருப்பினும் உண்மையை மறைக்க நான் விரும்பாததால் உங்களிடம் சொன்னேன். எனது மகளின் நல்வாழ்வு கருதி அவளுக்கு ஒரு நல்ல இடத்தில் திருமணம் செய்து வையுங்கள்" என்று விம்மி விம்மி அழுதார்."

"நாகநாதா, உனது மகளின் காதல் பிரச்சினையை யாருக்கும் கூறாதே. உனக்கு வாதவூரனின் மகன் மாதவனை, உனது மகளுக்குத் திருமணம் செய்ய விருப்பமா..?" என்று கேட்டார்."

"நாகநாதன் அதற்குச் சம்மதித்தான். உடனே கந்தராசா மாதவனையும் வாதவூரனையும் சந்தித்து நாகநாதனின் மகளைத் திருமணம் செய்ய விருப்பமா?" என்று கேட்டார்.

“நாகநாதனின் மகள் மகாலட்சுமி, பேரழகி. அதனால் மாதவன் உடனே சம்மதித்து விட்டான். திருமண ஏற்பாடுகள் நடைபெற்றுக் கொண்டிருந்தன”.

விடிந்தால் திருமணம். இரவு பத்து மணிக்கு மாதவனும் வாதவூரனும் கந்தராசாவின் வீட்டுக்குப் பரபரப்புடன் வந்தனர் ; “நீங்கள் பெரிய மனிதர் என்று நினைத்து உங்களை நம்பித்தான் திருமணத்திற்குச் சம்மதித்தேன். ஆனால் மணப்பெண்ணான மகாலட்சுமி தன் தாய்மாமனின் மகனைக் காதலித்து அவனுடன் வாழ்ந்தவளாம்” மாதவன் அழுதான்.”

“கந்தரசா கலங்கவில்லை. உனக்கு இதை யார் சொன்னது..? பகை உள்ளோர் இல்லாதவற்றை உள்ளதென்று சொல்வார்கள். அன்புள்ளோர் உள்ளவற்றை இல்லை என்று சொல்வார்கள். ஊரில் உள்ளவர்களுக்கு என்னைப் பற்றித் தெரியும். அதை விட உனக்கும் எனது குடும்பத்தினருக்கும் என்னைப் பற்றியெல்லாம் தெரியும். உனது தங்கைக்குள்ள நோயை மறைத்துத் திருமணம் செய்து வைக்குமாறு நீயும் உனது தந்தையும் கூற நான் என்ன சொன்னனான்? உண்மையை மறைத்து நான் எதையும் செய்வதில்லை. எல்லாவற்றையும் ஆராய்ந்த பின்பு தான் நான் செயற்படுவேன். என்னில் நம்பிக்கை இல்லாவிட்டால் நீ மகாலட்சுமியைத் திருமணம் செய்ய வேண்டாம்” என்றார். கந்தராசா”

“நான் உங்களைப் பற்றிச் சொன்னனான். நீங்கள் உத்தமர் ; பொய் சொல்லாதவர் ; ஒழுக்கம் மிக்கவர். அதனால் அவர் தீய செயல்களைச் செய்ய மாட்டார் என்று சொன்னேன். மாதவன் தான் கேட்கவில்லை. எனக்கு உங்கள் மீது நம்பிக்கை உள்ளது” என்றார் வாதவூரன்.”

“கந்தராசா எதுவும் பேசவில்லை. சில நிமிடங்கள் கழிந்தன. மாதவன் சொன்னான் ; “நான் உங்களை நம்புறன். நாகநாதனின் மைத்துனன் ஏகாம்பரம் தான் சொன்னவர். அவன் ஒரு குடிகாரன் என்பதை அந்த நேரம் நான் உணர்ந்து கொள்ளவில்லை” என்றான்”.

“ஏகாம்பரம் கெட்டவன் ; குடிகாரன் ; காசுக்காக எதையுஞ் செய்பவன். யாராவது பகையுள்ளவர்கள் பணம் கொடுத்துச் சொல்லியிருப்பார்கள்” என்றார் கந்தராசா”

“மாதவனுக்கும் மகாலட்சுமிக்கும் திருமணம் மிகவும் விமர்சையாக நடைபெற்றது. அன்பானவர்களே, ஒழுக்க சீலரான கந்தராசா ஓர் உண்மையை மறைக்க விரும்பவில்லை. இன்னோர் உண்மையை மறைத்தார். இது ஏன்..? நல்லவற்றைச் செய்யும் போது சில தவறுகளைச் செய்ய வேண்டி வரும். ஆனால் அவை பாவம் அல்ல. வலிப்பு நோய் திருமணமானபின் வந்தால் மறைக்கப்பட்டதென்று தெரியும். மற்றது அப்படியல்ல. கந்தராசா இருவேறு முறையில் நடந்து கொண்டாலும் அவரின் தன்மை

மாறவில்லை என்பதைப் புரிந்து கொள்ளுங்கள். ஒவ்வொருவரும் பெரியார் கந்தராசாவைப் போலவே வாழ வேண்டும் என்றார்." நமசிவாயம் சுவாமிகள்.

***மெய்ந்நீர ராகி விரியப் புகுவார்க்கும்***
***பொய்ந்நீர ராகிப் பொருளை முடிப்பார்க்கும்***
***எந்நீர ராயினும் ஆக; அவரவர்***
***தந்நீர ராதல் தலை.***

ஒருநல்ல செயலை முடிப்பதற்காக ஒருவர் உண்மையானவராகவோ, ஏமாற்றுக்காரராகவோ நடந்து கொண்டாலும் கூட அவரது இயல்பான குணம் மாறாது. '**தந்நீர ராதல் தலை**' என்பது பழமொழி.

**12** "அன்பானவர்களே, எதற்கும் பிறரின் உதவியை நாடக் கூடாது. இச்செயல் செய்ய முடியாது என்றும் நினைக்கக் கூடாது. அதைச் செய்து முடிக்க முயற்சிக்க வேண்டும். முயற்சிதான் தெய்வம் என்று பெரியவர்கள் சொல்வார்கள். தெய்வத்தின் உதவி இல்லாவிட்டாலும், தொடர்ந்து முயற்சிப்பவன் கட்டாயம் வெற்றியடைவான் என்று பழந்தமிழ் நூல்கள் கூறுகின்றன. பிறர் ஒரு போதும் பலனின்றி உதவ மாட்டார்கள். அப்படி உதவுவதானாலும் ஓரிரு முறை மட்டும் உதவுவார்கள். வாழ்க்கை என்பது துன்பமான நீண்ட பயணம். அந்தத் துன்பமான நீண்ட பயணத்தில் பல தடைகளும் தாமதங்களும் எதிர்பாராத வகையில் வந்து சேரும். அப்படி வரும் போது உதவிக்கு யாரும் வரமாட்டார்கள். அதனால் தனக்குத்தானே உதவப் பழகிக்

கொள்ளல் வேண்டும். தனக்கு நோய் வந்தால் தான் மருந்து குடித்தல் வேண்டும். அழுதாலும் அவளே பிள்ளையைப் பெறல் வேண்டுமே தவிர எமக்குத் துணையாக யாராவது வருவார்களா என்று நினைத்து முயன்று தேடிக் கொண்டிருக்கக் கூடாது.”

“காரையூரில் சின்னத்தம்பி என்றொருவர் வாழ்ந்து வந்தார். அவருக்கு எட்டுப் பிள்ளைகள். அவர் விவசாயம் செய்து வந்தார். அவரது பிள்ளைகள் வெவ்வேறு தொழில் செய்து வந்த போதும் விவசாயமும் செய்து வந்தனர். மூத்தவன் சிவநாதன். அவன் எப்பொழுதும் தனது வேலையைப் பிறரைக் கொண்டே செய்விப்பான். வெங்காயம் நட்டபின் நீர்பாய்ச்சுவதைத் தனது தந்தையின் பொறுப்பில் விட்டு விடுவான். அத்துடன் அவன் விளைந்த வெண்காயம் முழுவதையும் விற்று விட்டு நடும்போது விதை காயைத் தந்தையிடம் கேட்பான். ஓரிரு முறையென்றால் கொடுக்கலாம். ஒவ்வொரு முறையும் விதை காய் கொடுக்கவும், நீர் பாய்ச்சவும் சின்னத்தம்பியால் முடியவில்லை.”

“அந்த வருடம் நடுகையின் போது சிவநாதன் தந்தையிடம் விதை வெண்காயம் பெறவந்தான். அப்போது அவர் சொன்னார் ; “மகனே, சென்ற வருடம் விதை காயைச் சேமித்து வை என்று சொன்னேன். நீ ஏன் சேமித்து வைக்கவில்லை? விதை வெண்காயத்தை நீ வைத்திருப்பாய் என்று நினைத்து நான் விற்று விட்டேன். எனக்குச் செலவுக்குப் பணம் தேவை. இன்னும் ஒரு பெண் திருமணமாகாது இருக்கிறாள். பிள்ளைகளைப் பெற்றால்

கல்வி கற்பித்து அவர்களின் நல்வாழ்விற்கு உதவி செய்வது தான் பெற்றோரின் கடமை. உனக்கு எல்லாம் செய்து விட்டேன். நீ இனி உனது வாழ்க்கையைப் பார்' என்றார்".

"அவன் எதுவும் பேசவில்லை. மறு நாள் வந்து சொன்னான் ; "அப்பா, எனக்கு அலுவலகத்தில் கொஞ்சம் வேலை உள்ளது. வாழைத்தோட்டத்திற்கு நீர் பாய்ச்சி விடுங்கள்" என்று கூறிவிட்டு அவரது பதிலை எதிர்பாராது அவசரமாகச் சென்று விட்டான். நான்கு நாட்கள் கழிந்த பின் அவன் வந்த போது தாயார் சொன்னார் ; "அப்பா தோட்டத்தில் இடறி விழுந்து விட்டார். மருந்தெடுத்தவர். அதனால் உனது வாழைத் தோட்டத்திற்கு நீர் பாய்ச்சவில்லை"

"பெருமூச்சு விட்டான் சிவநாதன்; "யாரையும் நம்ப இயலாது. கூலிக்காரனிடஞ் சொன்னால் அவன் சரியான முறையில் செய்வதில்லை. அத்துடன் கூலியை அதிகமாகக் கொடுப்போரினது வேலைகளையே செய்வான். அத்துடன் அவனைக் கண்காணிக்கா விட்டால் வேலையை ஒழுங்காகச் செய்ய மாட்டான். தான் தான் முன்னேற வேண்டுமானால் தான் தான் முயல வேண்டும்" என்று நினைத்தான்."

"உனக்கு வேலை செய்ய நேரமில்லா விட்டால் மற்றவர்களை நம்பி வேலையைத் தொடங்காதே. கூலிக்காரரை வைத்து வேலைசெய்வதாயின் அவர்களைக் கண்காணிக்க முடியாவிட்டால் செய்யக்கூடாது. இம்முறை நீ வெங்காயமும்

நடவில்லை. அவர் வைத்திருந்த வெங்காயத்தை விற்றுத்தான் தங்கச்சிக்குச் சங்கிலி வாங்கினவர். அவளுக்கும் திருமண வயதாகி விட்டது. ஏதாவது சேமித்தால் தானே செய்து கொடுக்கலாம்" என்றார் தாய்".

"அதனால் அன்பானவர்களே, உங்களுக்கு உதவி செய்ய யாரும் வரமாட்டார்கள். உங்கள் நோய் தீர நீங்களே மருந்து குடிப்பது போல, உங்களின் துன்பந்தீர நீங்களே செயற்பட வேண்டும். யாரும் துணைக்கு வரமாட்டார்கள்" என்றார். நமசிவாயம் சுவாமிகள்.

***எமக்குத் துணையாவார் வேண்டுமென் றெண்ணித்***
***தமக்குத் துணையாவார்த் தாந்தெரிதல் வேண்டா***
***பிறர்க்குப் பிறர்செய்வ துண்டோ, மற்றில்லை***
***தமக்கு மருத்துவர் தாம்.***

தனது நோய் தீரத்தானே மருந்து குடிப்பது போலத் தன் காரியத்தைத் தானே செய்து முடித்தல் வேண்டும். '**தமக்கு மருத்துவர் தாம்**' என்பது பழமொழி.

**13** "அன்பானவர்களே,ஒருவர் தனது உற்றார் உறவினர்களை விட்டுப் பிரிந்து நகரத்திற்குச் சென்று ஆடம்பரமாக வாழ்ந்தாலும் அது நரக வாழ்வேயாகும். மனைவி, பிள்ளைகள், பெற்றோருடன் சேர்ந்திருந்து வாழ்வதே சொர்க்க வாழ்வு. அது போலவே கற்றவர்கள் தாம் கற்ற நுட்பமான பொருளைக் கற்ற ஒருவனுக்குக்

கூறினால் தான் அது விளங்கும். அதனால் சொல்பவனுக்கும் மகிழ்ச்சியுண்டாகும். இதை விடுத்துக் கல்வியறிவில்லாத மூடனுக்குத் தான் கற்ற நுட்பமானவற்றைக் கூறுவதால் என்ன பயன் உண்டாகும்.”

“காவலூரில் தில்லையம்பலம் என்றொரு வணிகன் இருந்தார். அவர் தனது தொழிலை விரிவாக்க விரும்பினார். இது வரை காலமும் உணவுப் பொருட்களையும் விவசாய உற்பத்திக்குப் பயன்படும் பொருட்களையும் விற்று வந்த அவர் மின்சார உபகரணங்களையும் விற்பனை செய்ய விரும்பினார். அதற்குப் பெருந்தொகையாகப் பணம் தேவைப்பட்டது. அவரது தங்கையின் கணவன் பெரும் விவசாயி. அவனிடம் பெருந்தொகையான பணம் வங்கியிலிருந்தது. அதனால் தில்லையம்பலம் மைத்துணரிடம் சென்று தனது அபிப்பிராயத்தைக் கூறித் தன்னுடன் வியாபாரத்தில் பங்கு கொள்ளுமாறு கேட்டார். அவருக்கு வர்த்தகத்தைப் பற்றி எதுவும் தெரியாது. அதனால் அவர் சொன்னார் ; “வியாபாரத்தில் முதலிடும் பணத்தை விவசாயத்தில் முதலீடு செய்யலாம். நான் இன்னும் நூறு ஏக்கர் நிலத்தில் நெல் விதைக்கப் போகிறேன்” என்றார்”.

“தில்லையம்பலம் எதுவும் பேசவில்லை. சென்ற வருடம் மழை பெய்யாததால் குளத்தில் நின்ற நீரும் வற்றிவிட்டது. அதனால் பயிர் அழிந்து விட்டது. பல இலட்ச ரூபா எனக்கு நட்டம்” என்று அவரது மைத்துனன் அழுததால் தான் அவர் அவனிடஞ் சென்று

கேட்டார். 'பொருட் கொள்வனவில் ஒருபோதும் நட்டமேற்படாது. விலை கூடுமே தவிரக் குறையாது" என்று சொல்லியும் அவர் கேட்கவில்லை."

"மறு நாள் அவரது மனைவியின் சகோதரன் அவரைச் சந்தித்ததாகச் சொன்னான் ; "மச்சான் நீங்கள் உங்கள் மைத்துனரை வியாபாரத்தில் பங்காளியாகும்படி கேட்டீர்களாம். அவனுக்கு வர்த்தகத்தைப் பற்றி என்ன தெரியும்? தோட்டத்தைப் பற்றிக் கூறினால் சொல்வான். நானும் ஒரு வர்த்தகன். அதனால் உங்களுடன் பங்காக வியாபாரஞ் செய்யச் சம்மதிக்கிறேன்". என்றான்".

அடுத்தவாரம் தில்லையம்பலம் மின்சார உபகரணங்கள் அனைத்தும் விற்பனை செய்யும் பெரியதொரு நிறுவனத்தைத் திறந்தார். ஆகவே அன்பானவர்களே, ஒரு விடயத்தை பற்றித் தெரியாதவர்களுடன் அவ்விடயத்தைப் பற்றிப் பேசினால், நீங்கள் தான் அவமானமடைவீர்கள். கற்றவர்களுடன் தான் கல்வியைப் பற்றிப் பேசுவேண்டும் ; வர்த்தகருடன் தான் வியாபாரத்தைப் பற்றிப் பேச வேண்டும் ; வைத்தியனிடம் தான் நோயைப் பற்றிப் பேச வேண்டும். இல்லாவிட்டால் அதனால் பயன் ஏற்படாது விடுவது போலத் தீமையும் வந்து சேரும்" என்றார் நமசிவாயம் சுவாமிகள்.

*கல்வியான் ஆக கழிநுட்பம் கல்லார் முன்*
*சொல்லிய நல்லவும் தீயவாம் - எல்லாம்*
*இவர்வரை நாட! தமரையில் லார்க்கு*
*நகரமும் காடுபோன் றாங்கு.*

சம்பந்தப்பட்டவர்களிடம் தான் அதுபற்றிப் பேசுதல் வேண்டும். அப்போது தான் பேசியவை மதிக்கப்படும் ; பலனும் உண்டாகும். **'தமரை இல்லார்க்கு நகரமும் காடு போன்றாங்கு'** என்பது பழமொழி.

14 "அன்பானவர்களே, பிறப்பு, பிறவாமை என்ற இரண்டு நிலைகளையும் ஆராய்ந்து துறவு மேற்கொண்டவரின் பெருமையே உலகத்தில் உயர்வானது. எல்லா உயிர்களிடத்தும் உண்மையான அன்பு செலுத்தும் மனிதனாக வாழ்ந்தால், வாழ்பவர்களின் பிறப்பை அது அறுக்கும் வாளாகச் செயற்படும். தனக்கு வரும் துன்பங்களைப் பொறுத்துக் கொள்வதும், பிற உயிர்களுக்குத் தீங்கு செய்யாமல் இருப்பதும் தான் அறவாழ்க்கை ஆகும். தவ வடிவமும், ஒழுக்க வாழ்க்கையும் அதற்கு ஏற்ற ஒழுக்கம் உடையவர்களுக்குத் தான் பொருந்தும். அந்த ஒழுக்கத்தைப் பிறர் மேற்கொண்டால் அதனால் இம்மையிலும் மறுமையிலும் துன்பங்கள் பல உண்டாகும். விரும்பியதை விரும்பியபடி அடைய வேண்டுமானால் தூய்மையான அறவாழ்க்கை மேற் கொள்ளல் வேண்டும். இல்லாவிட்டால் வாழுங் காலத்தில் உண்டாகும் பழி உயிர் உடலை விட்டு நீங்கிய பின்பும் வாழும்."

"ஒருவன் எந்தெந்தப் பொருட்களில் இருந்து ஆசையை நீக்கிக் கொள்கிறானோ, அவனுக்கு அந்தந்தப் பொருட்களால் துன்பம் வருவதில்லை. சிலர் சில பொருட்களின் மீது ஆசை கொண்டுவிட்டு அப்பொருட்களின் மீது ஆசையில்லாதவர்களாகக்

காட்டிக் கொள்வார்கள். சிறுத்தொண்டன் அப்படியானவர். அவர் திருமணம் செய்யவில்லை. ஊர்ச் சிவன் கோயில் மடத்தில் தங்கியிருந்து கோயிலின் புனருத்தாரண வேலைகளில் ஈடுபடுவார். மக்கள் அவரின் மீது மிகுந்த நம்பிக்கை கொண்டிருந்தமையால் அவரிடம் கோயிலின் சகல பொறுப்புக்களையும் விட்டு விட்டனர். மக்கள் பொருட்களைக் கொடுப்பார்கள். அவர் கோயில் வேலைகளைச் செய்வார். கோயிலில் கிடைக்கும் பிரசாதமும், மக்கள் கொடுக்கும் பொருட்களுமே அவரது உணவுத் தேவையைப் பூர்த்தி செய்யும். அவர் ஒரு போதும் உலை வைத்தது கிடையாது. அவர் தங்கும் அறைக்குப் பெண்கள் பயமில்லாது சென்று வந்தனர். ஒரு நாள் ஒரு அழகான கன்னிப் பெண் அலறியபடி ஓடிவந்து சிறுத்தொண்டன் தன்னுடன் தவறாக நடக்க முற்ப்பட்டார் என்று சொன்னாள். ஊரவர்களில் பெரும்பான்மையானவர்கள் அதை நம்பவில்லை.”

“அவ்வூரில் வாழும் கதிர்காமநாதன் என்ற இளைஞன் சிறுத்தொண்டனைப் பற்றி அறிய விரும்பித் தனது நண்பர்களுடன் கோவிலில் மறைந்திருந்தான். இரவு பன்னிரண்டு மணியளவில் இருபெண்கள் கோயில் பக்கம் வந்தனர். ஒருத்தி உள்ளே சென்றாள். மற்றவள் மறைந்திருந்தாள். கதிர்காமநாதன் மெதுவாகச் சென்று அப்பெண்ணை அழைத்து வந்தான். அப்பெண் கோயில் தலைவரின் மனைவி. அவள் இன்னொரு பெண்ணைச் சிறுத்தொண்டனின் அறைக்கு அனுப்பியிருந்தாள். அவளை விசாரித்த போது திடுக்கிடும் தகவல்கள் வெளியாயின. கோயில்

தலைவரும் சிறுத்தொண்டனும் சேர்ந்து கோயிலுக்குக் கொடுக்கப்படும் பணத்தையும், பொருட்களையும். நகைகளையும், சூறையாடியிருந்தனர்”

“ஊர் மக்கள் ஒன்று திரண்டு கோயில் தலைவரையும் சிறுத்தொண்டனைம் ஊரைவிட்டுத் துரத்தினர். வஞ்சகமான எண்ணத்துடன் தவக்கோலம் பூண்டு மக்களை ஏமாற்றுவோர் இம்மையிலும் மறுமையிலும் துன்பப்படுவர்” என்றார் நமசிவாயம் சுவாமிகள்.

***இம்மைத் தவமும் அறமும் எனவிரண்டும்***
***தம்மை யுடையார் அவற்றைச் சலமொழுகல்***
***இம்மை பழியேயும் மறுமையும்***
***தம்மைத்தாம் ஆர்க்குங் கயிறு.***

வஞ்சகமான முறையில் தவமும் அறமும் புரிபவர்கள் மக்களால் ஒதுக்கப்படுவர். ‘**தம்மைத் தாம் ஆர்க்குங் கயிறு** என்பது பழமொழி.

15 “அன்பானவர்களே, பணம், பொருள், பதவி, அந்தஸ்து என்பன ஒருவரின் இன்ப வாழ்க்கைக்குத் துணை செய்யாது. தம்மை உணர்ந்து, பிறரையும் தன்னைப் போல மதித்து வாழ்கின்ற அமைதியான வாழ்க்கை தான் இன்பமானது. பொருள் இன்று வரும் நாளை இல்லாமற் போய்விடும். பதவி நிலையானதல்ல. உரிய வயது வந்ததும், அது கைமாறி விடும். மெய்யானவற்றையெல்லாம்

பொய்யானவை என்றும், பொய்யானவற்றை எல்லாம் மெய்யானவை என்றும் மயங்குவதால் தான் பிறப்புத் தன் உயர்வை இழக்கிறது. எல்லாவற்றிற்கும் மேலான செம்பொருளான தெய்வத்தை உணர்ந்து பொருட்கள் மீத பற்றுக் கொள்ளாது வாழ்ந்தால், சாருவதற்குரிய துன்பங்கள் எவையும் ஒருவனைச் சாராது.”

“சிவசுந்தரமூர்த்தி அரசின் பெரிய துறையொன்றின் அதிகாரி. அவருக்குக் கீழ்ப் பலர் வேலை செய்தனர். பல வாகனங்களை அவருக்கு அரசு கொடுத்திருந்தது. அவர் உயர்ந்த ரக வாகனத்தில் ஊருக்கு வந்தால் பிரமுகர்களும், அவருக்குக் கீழோரும் குடும்பம் குடும்பமாக வந்து சந்தித்துச் செல்வர். அரசில் வேலை பெறுவோருக்கு நேர்முகப் பரீட்சையை அவர் வைப்பதால் , இளைஞர்களும் யுவதிகளும் அவரது வீட்டில் எவ்வேளையிலும் நிற்பார்கள். அவரது வீட்டு வேலைகள் அனைத்தையும் செய்து கொடுப்பார்கள். அமைச்சர்கள் அவரின் வீட்டுக்கு வந்து செல்வார்கள்.”

“அந்த ஊர் வைரவர் கோயிலில் நடராசா என்றொரு பக்தர் இருந்தார். அவர் காலையில் எழுந்து வைரவருக்குப் பூசை செய்து விட்டுத் தனது கமத்திற்குச் செல்வார். மாலையானதும் கோயிலிருந்து திரும்பி வந்த கோயிற் கடமைகளைச் செய்வார். மக்களுக்கு உதவி செய்வார் ; சோதிடம் பார்த்து எதிர் காலத்தைப் பற்றிச் சொல்வார் ; கிரகதோஷம் இருந்தால் நீக்குவார்.

இதற்கெல்லாம் பணம் பெற மாட்டார். மக்களுடன் அதிகம் பேசமாட்டார். தானுண்டு தனது வேலையுண்டு என்றிருப்பார். வேலைக்கு விண்ணப்பிப்பவர்கள், திருமணமாகாதவர்கள், நினைத்த காரியம் நடக்குமா நடக்காதா என அறிய விரும்புபவர்களெனக் கோயிலில் எந்நேரமும் நூற்றுக்கு மேற்பட்ட மக்கள் கூடியிருப்பர்."

சிவசுந்தரமூர்த்தி கோயிலுக்கு வந்தால் ஒரு பட்டாளமே கூட வரும். நடராசா அவர் வந்ததைக் கவனிக்க மாட்டார். சிவசுந்தர மூர்த்தியும் அவரைக் கண்டதாகக் காட்டிக் கொள்ள மாட்டார். அவருடன் கூட வருவோர் நடராசா வின் பாதங்களைத் தொட்டு வணங்கிச் செல்வர்."

"சிவசுந்தரமூர்த்தியின் நாய் விபத்தில் சிக்கி இறந்து விட்டது. அதற்கு ஊரே அன்று சிவசுந்தரமூர்த்தியின் வீட்டில் திரண்டிருந்தது."

"சில காலஞ்செல்லச் சிவசுந்தர மூர்த்தி வயது வந்து ஓய்வு எடுத்து விட்டார். அவர் ஓய்வெடுத்த பின்பு அவரின் வீட்டிற்கு யாருஞ் செல்வதில்லை. அவர் ஓய்வெடுத்து இரண்டு வருடங்களின் பின் அவரது மனைவி காலமானாள். மரணவீட்டிற்கு இரத்த உறவினர்களைத் தவிர வேறு எவரும் வரவில்லை."

“நடராசாவுக்கு எழுபது வயது. நடக்கச் சிரமப்பட்டார். பக்தர்கள் அவரைத் தூக்கிச் சென்றனர். வாகனம் வைத்திருப்போர் அவர் தமது வாகனத்தில் ஏறினால் அதிஷ்டம் என்று நினைத்தனர். நடராசாவைக் கேளாமல் அந்தக் கிராமத்தில் எதுவும் நடக்காது. கிரகதோஷம் செய்வோர் நடராசாவை வீழ்ந்து வணங்கி அவரை வீட்டுக்கு வருமாறு இரந்து வேண்டி அழைத்துச் சென்றனர். சிவசுந்தர மூர்த்தியின் மகன் திருமணம் செய்து பத்து வருடங்கள் கழிந்தும் பிள்ளைப் பாக்கியம் கிடைக்காததால் வைரவரே தஞ்சமென நினைத்து நடராசாவின் வைரவர் கோயிலில் இருந்தான். அன்பானவர்களே, பணம் பதவி யாவும் இருக்கும் வரை தான் மதிப்பிருக்கும். ஆனால் மனதை ஒடுக்கி ஒழுக்க நெறியில் வாழ்கின்றவரகளின் புகழ் அவர்கள் இல்லாத காலத்திலும் இருக்கும். ஆதலால் பணத்தையும் பதவியையும் மதிக்காது மனிதனை மதியுங்கள். ஒழுக்க சீலராக வாழுங்கள்” என்றார் நமசிவாயம் சுவாமிகள்.

***எண்ணக் குறைபடாச் செல்வமும் இற்பிறப்பும்***
***மன்னர் உடைய உடைமையும் - மன்னரால்***
***இன்னர் எனல்வேண்டா இம்மைக்கும் உம்மைக்கும்***
***தம்மை உடைமை தலை.***

தம்மைக் கட்டுப்படுத்தி வாழும் ஒழுக்க நெறியே இம்மைக்கும் மறுமைக்கும் உதவும். **‘இம்மைக்கும் உம்மைக்கும் தம்மை உடைமை தலை’** என்பது பழமொழி.

16 “அன்பானவர்களே, பொருள் என்ற செல்வம் இழிந்தவர்களிடங் கூட இருக்கிறது. ஆனால் அருள் என்ற சிறந்த செல்வம் உயர்ந்தவர்களிடம் மட்டும் தான் உள்ளது. உயிர்களுக்கு நினைவாற்கூடத் துன்பம் செய்யாமையே அருளாகும். உலகத்தில் வாழும் உயிர்களைக் காப்பாற்றி வாழுகின்ற அருளாளனுக்குத் தன்னுயிரைப் பற்றிய அச்சம் ஒரு போதும் வராது. தன்னுயிரைப் பெருக்கவும், நாவின் சுவைக்காகவும் மற்றோர் உயிரைக் கொன்று அதன் உடம்பை உண்கின்றவர்களுக்கு அருள் சிறிதும் இராது. நெய் முதலிய பொருட்களைத் தீயிலிட்டு ஆயிரம் யாகங்களைச் செய்வதை விட, ஓர் உயிரைக் கொன்று தின்னாமல் இருப்பதே உயர்ந்தது. அதனால் எந்த உயிரையும் கொல்லாமல் வாழ்வதே உயர்ந்த அறமென்று பெரியவர்கள் கூறியுள்ளார்கள்.”

“உடலின் நன்மை கருதுவோர் தயிரைத் தயிராவே உண்பர். நாவின் ருசியை விரும்புவோர் தயிரைக் கடைந்து நெய்யெடுத்து அதையே விரும்பி உண்பர். அது போல உள்ளத்தில் அறியாமை உடையோர் உயிர்களைப் பலி கொடுத்துத் தம் மறுமை இன்பத்தை விரும்புவர். பலி கொடுத்தலும், பலி கொடுக்கப்பட்ட உடலைப் புனிதமானதென்று நினைத்துண்பதும், உடலின்பத்திற்காக உயிர்களைக் கொன்று தின்பதும் எப்பொழுதும் நீங்காத துன்பத்தையே தரும். அதனால் இம்மையிலும் மறுமையிலும் துன்பமேற்பட்டுப் பிறவிகள் தொடரும்.”

“நாவலூரில் சிவசேனன் என்றொரு பக்தர் இருந்தார். அவர் அவ்வூரில் ஆச்சிரமம் அமைத்து வாழ்ந்த விபுலானந்த சுவாமிகளின் பெரும் பக்தர். விபுலானந்த சுவாமிகள் மறுமை வாழ்வு சிறப்பதற்காக யாகம் செய்வார். அந்த யாகத்தில் உயிர்களைப் பலி கொடுப்பார். சிவசேனன் சைவக் குடும்பத்தில் பிறந்தவர். ஊன் உண்ணாதவர். விபுலானந்த சுவாமியாரின் பக்தரான பின்பு அவர் செய்யும் யாகத்தில் பலியிடப்படும் மிருகங்களினதும் பறவைகளினதும் உடலைப் புனிதமான பிரசாதமெனச் சுவாமியார் கொடுக்க அதை உண்பார். அதன் சுவையால் அவர் நித்தமும் ஊனை விரும்பி உண்டு வந்தார். சிவசேனன் தனது குடும்பத்தின் நலத்திற்காக ஒரு யாகம் செய்ய விரும்பினார். அதற்கு எட்டுச் சேவல்களும், ஏழு ஆட்டுக் கடாக்களும் பலியிட வேண்டுமென விபுலானந்த சுவாமிகள் சொன்னார்.”

“சிவசேனன் யாகம் செய்ய ஆயத்தம் செய்தார். ஆனால் குடும்பத்தினர் அதை விரும்பவில்லை. இருப்பினும் சுவாமியாரின் வேண்டுதலின் பேரில் அவர் தனியே யாகம் செய்தார். யாகம் முடிந்து ஒரு வாரம் சென்ற பின் அவரது குடும்பத்தினர் ஒரு பஸ் வண்டியில் தூரத்திலுள்ள கோயில் ஒன்றுக்குச் சென்றனர். வழியில் அவர்கள் சென்ற பேரூந்து விபத்துக்குள்ளாகிக் குடை சாய்ந்தது. பேரூந்தில் சென்ற சிவசேனனுக்குப் பலத்த காயம் உண்டானது. மற்றவர்களுக்குச் சிறு சிறு காயங்கள் உண்டாயின. அனைவரும் வைத்தியசாலைக்குச்சென்றனர். சிவசேனன் மயக்கமடைந்திரு ந்தார். அவரது வலது கால் முறிவடைந்திருந்தது. அதனால் அக்கால்

முழங்காலுடன் அகற்றப்பட்டது. குடும்பத்தினருக்குண்டான சிறு காயங்களுக்கு மருந்து கட்டிய வைத்தியர் சிவசேனனை வைத்தியசாலையில் ஒரு மாத காலம் தங்கிச் சிகிச்சை பெறுமாறு கூறி மற்றவர்களை வீட்டுக்கு அனுப்பினார்."

"அதனால் அன்பானவர்களே உயிர்களைப் பலி கொடுத் - தால் தான் இம்மை வாழ்வும், மறுமை வாழ்வும் சிறக்கும் என்று நினைக்காதீர்கள். உயிர்களைப் பலி கொடுத்து யாகம் செய்த சிவசேனன் பொல்லூன்றி நடக்கிறார். அவரது குடும்பத்தினர் ஊன் உண்ணாமலும் பலி கொடுத்து யாகம் செய்யாமலும் இருந்த போதும் எவருக்கும் ஆபத்தான காயங்கள் வரவில்லை. ஒருவன் உயிர்கள் மீது அன்பு கொண்டவனாகவும், அவற்றிற்குத் தீங்கு செய்யாதவனாகவும் வாழ்ந்தால், அவன் இம்மையிலும் மறுமையிலும் இன்பமாக வாழ்வான். இது தான் உண்மை" என்றார் நமசிவாயம் சுவாமிகள்.

***செறலிற் கொலைபுரிந்து சேணுவப்பார் ஆகி***
***அறிவின் அருள்புரிந்து செல்லார் - பிறிதன்***
***உயிர்செகுத்து ஊன்றுய்த் தொழுகுதல் ; ஓம்பார்***
***தயிர்சிதைத்து மற்றொன் றடல்***

உயிர்கள் மீது அருளுடையவர்கள் தான் எப்போதும் இன்பமாக வாழ்வர். மறுவுலக இன்பத்திற்காக உயிர்ப்பலி கொடுப்போரும், ஊன் உண்போரும் துன்பத்தையே அடைவார்கள். **'தயிர் சிதைத்து மற்றொன் றடல்'** என்பது பழமொழி.

17 “அன்பானவர்களே, நட்பென்பது ஒருவருக்கொருவர் சிரித்து விளையாடவோ, தேவை கருதியோ ஏற்படுவதல்ல. ஆலோனைகள் சொல்லவும், உதவி செய்யவும், பிரச்சினைகளைத் தீர்த்து வைக்கவும் உதவுவது நட்பு உரிமை காரணமாக நண்பர் செய்யும் தகாத செயல்களையும் தாம் செய்ததாகக் கருதி ஏற்றுக் கொள்வதே சிறந்த நட்பு. அதற்குக் காரணம் அறியாமை மட்டுமல்ல, தன்னிடம் அவருக்குள்ள உரிமையும் காரணமாகும் என்பதைச் சிறந்தவரக்ள் தான் ஒப்புக்கொள்வார்கள்.”

‘நாவலூரில் வாழ்ந்த நாவலனும் கரிகாலனும் நண்பர்கள். அவர்கள் எப்பொழுதும் ஒன்றாகவே எங்குஞ் செல்வார்கள். ஒரு செயலைச் செய்வதனால் இருவரும் சேர்ந்தே செய்வார்கள். கரிகாலன் வர்த்தகன். கிராமத்திலும் பட்டணத்திலும் பெரிய வர்த்தக நிறுவனத்தை வைத்து நடத்திப் பெரும் இலாபஞ் சம்பாதிப்பதிப்பவன். நாவலன் ஆசிரியன். தனது கடமைகளை ஒழுங்காகச் செய்பவன். நாவலனின் நண்பன் சரவணன். சரவணன் ஊரில் ஒரு சிறுவர்த்தக நிலையம் வைத்து நடத்தி வந்தான். எப்பொழுதும் அவன் நல்ல தரமான பொருட்களையே விற்பனை செய்வான் ; நிறை குறைத்து விற்பனை செய்ய மாட்டான். அதனால் அவனது வியாபார நிலையத்திலேயே மக்கள் பொருட்களைக் கொள்வனவு செய்தனர். கரிகாலன் பொருட்களில் கலப்படம் செய்து மலிவாக விற்பான். ஒழுக்கமுள்ளவர்கள், சான்றோர்கள், உயர்ந்த பதவிகளில் உள்ளோர் யாரும் கரிகாலனிடம் பொருட்கள் வாங்குவதில்லை. அத்துடன் சரவணனைப் பற்றி ஊரில் உயர்வாகப்

பேசிக் கொள்வார்கள். இது கரிகாலனுக்குப் பிடிக்காது. அதனால் அவர்கள் இடைக்கிடை பிரச்சினைப்படுவர். திடீரென்று ஒருநாள் சரவணனின் வர்த்தக நிலையம் தீக்கிரையானது. ஊரவர்கள் சேர்ந்து தீயை அணைத்தனர். அதனால் பெரும் நட்டம் சரவணனுக்கு ஏற்படவில்லை.”

“சரவணன் , தனது வர்த்தக நிலையத்தைக் கரிகாலன் தான் தீவைத்துக் கொழுத்தினான் என்று ஊர் முழுவதும் சொல்லிக் கொண்டு திரிந்தான். அதனால் நாவலன் சரவணனிடஞ் சென்று சொன்னான் ; “நண்பா, நீயும் எனது நண்பன். கரிகாலன் நல்லவன். தீய செயல்களைச் செய்ய மாட்டான்” என்று கூறும் போது சரவணன் குறுக்கிட்டுச் சொன்னான் ; “ நீ எனது நண்பன் என்பதை நான் ஏற்க மாட்டேன். நீ என்னோடு கதைப்பதைப் போலக் கதைத்து எனது இரகசியங்களை அறிந்து கரிகாலனுக்குச் சொல்கிறாய். அதனால் நீ இனிமேல் இங்கு வரவேண்டாம்” என்றான்”.

“சரவணனுக்கு அதிர்ச்சியாக இருந்தது. அவனால் எதுவும் பேசமுடியவில்லை. இருவரையும் சமாதானஞ் செய்ய முயன்ற அவன், சரவணின் சினத்திற்கு அஞ்சிச் சென்று விட்டான். கரிகாலன் தான் நினைப்பவை தான் சரியென்று வாதிடுபவன். அவனுக்கும் நல்லது கெட்டது சொல்ல முடியாதென்று நாவலனுக்குத் தெரியும். இருப்பினும் அவனைச் சந்தித்துச் சொன்னான் ; “நண்பா, வீணாகப் பகையை வளர்க்காதே. பகைவனையும் மன்னிக்கப்ப பழகுதல் வேண்டும்….” என்று நாவலன் சொல்லிக் கொண்டிருக்கும் போது

கோபத்துடன் குறுக்கிட்டுச் சொன்னான் கரிகாலன் ; "நீ என்னிலும் பார்க்க அவனின் மீது தான் அன்பு அதிகமாக வைத்துள்ளாய். இல்லாவிட்டால் யாரோ அவனின் கடைக்குத் தீ வைக்க, அதை நான் வைத்ததாக அவன் சொல்ல, அதை நம்பி எனக்குப் புத்தி மதிகள் சொல்கிறாய். நான் தீவைப்பதானால் எப்பவோ வைத்திருப்பேன். நான் தீய செயல்களைச் செய்வதில்லை என்று உனக்குத் தெரியாதா..? தீ வைத்த பின்பு பலமுறை நீ அவனைச் சந்தித்துக் கதைத்திருக்கிறாய். அப்படியிருந்தும் அது பற்றி நான் உன்னிடம் ஏதாவது கேட்டேனா..? அப்படிப்பட்ட என்னிடம் பகையை வளர்க்கக் கூடாது என்கிறாய். நானா பகையை வளர்க்கிறேன். நீ அவனுக்காக என்னைக் குறை காண்கிறாய். அதனால் இனிமேல் என்னுடன் நீ கதைக்க வேண்டாம்" என்று கூறிவிட்டுச் சென்றான் கரிகாலன்."

"சில நாட்களின் பின் நாவலனை நாலைந்து பேர் மிக மோசமாகத் தாக்கினர். வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட அவனை நண்பர்கள் இருவரும் சென்று பார்க்கவில்லை. ஆகையால் அன்பானவர்களே, இருவரும் உண்மையை உணராது சினங்கொண்டு தாக்க முனைந்தால், இருவருக்கும் நட்புடையவனான ஒருவன் அவர்களைச் சமாதானஞ் செய்ய முயல்வான் அவர்கள் அவனின் சொல்லைக் கேட்டால் பிரச்சினை வராது. கேட்காது சினங் கொண்டால் அது சமாதானம் செய்யச் சென்றவனுக்கு ஆபத்தாக முடியும்" என்றார் நமசிவாயம் சுவாமிகள்.

***ஒருவன் உணராது உடன்றெழுந்த போருள்***
***இருவரிடை நட்பான் புக்கால் - பெரிய***
***வெறுப்பினால் பேர்த்துச் செறுப்பின் தலையும்***
***குறக்கண்ணி யாகி விடும்.***

தன் நண்பரான இருவருக்கிடையே ஏற்பட்ட பகையை நீக்க நண்பன் ஒருவன் முன் வந்தால், அவனின் நியாயமான பேச்சை அவர்களிருவரும் கேட்க வேண்டும். கேட்காவிட்டால் அவர்கள் இருவரும் சமாதானஞ் செய்யச் சென்ற நண்பனுக்குத் துன்பம் செய்வர் '**தலையும் குறக்கண்ணி யாகி விடும்"** என்பது பழமொழி.

**18** "அன்பானவர்களே, நீங்கள் ஒருவருக்குத் துன்பம் செய்ய நினைக்கும் போது, அத்துன்பத்தைப் பிறர் உங்களுக்குச் செய்தால் உங்கள் மனம் எவ்வளவு பாதிப்படையும் என்று எண்ணிப்பாருங்கள். அப்படி எண்ணிப் பார்த்தீர்களானால் எத்தகையை துன்பத்தையும் உங்களாற் பிறருக்குச் செய்ய முடியாது. உங்களுக்குத் துன்பந்தரும் ஒரு செயல் பிறருக்கு இன்பத்தைக் கொடுக்க மாட்டாது. துன்பத்தைத் தான் கொடுக்கும் என்பதை நினைவில் வைத்திருங்கள்."

"பார்வதி மிகவும் ஏழை. அவளது கணவன் விபத்தொன்றில் சிக்கி மரணமடைந்த பின்பு தனது பிள்ளைகள் மூவரையும் கூலி வேலை செய்து காப்பாற்றி வந்தாள். அவளது மூத்தமகள் தாட்சாயணி. மிகுந்த கெட்டிக்காரி. க.பொ.த. உயர்தர வகுப்பில் கற்றுக் கொண்டிருக்கும் அவளுக்கு ஒரு தங்கச் சங்கிலி வாங்கிக்

கொடுக்க வேண்டும் என்பதற்காக மிகவும் கஷ்டப்பட்டுச் சீட்டுக் கட்டி ஒரு தங்கச் சங்கிலியை வாங்கிக் கொடுத்தாள். தாட்சாயினி ஒரு நாள் பாடசாலை விட்டு வரும் போது வழியில் திருடனொருவன் அவளது சங்கிலியை அறுத்துச் சென்று விட்டான். இருபத்தையாயிரம் ரூபா பெறுமதியான அச்சங்கிலி களவு போனது பார்வதியை மிகவும் வாட்டியது. அதனால் அவள் இரண்டு தினங்களாக உணவை உண்ணாதிருந்தாள். பார்வதியின் பக்கத்து வீட்டுக்காரி சிவகாமி வந்து சொன்னாள் ; " நீ சாப்பிடாமல் விட்டால் சங்கிலி வந்து விடுமா? கஷ்டப்பட்டுத் தேடிய பொருளானாலும் பொசிப்பு இருந்தால் தான் கையில் தங்கும். வீணாகக் கவலைப்படாதே எழுந்து சாப்பிடு" என்று கூறிவிட்டுச் சென்றாள்".

"சிவகாமியின் கணவன் குடிகாரன். அவன் குடும்பத்தைக் கவனிக்காததால் சிவகாமி இருபத்தையாயிரம் ரூபாவுக்கு ஒரு பசுவையும் கன்றையும் வாங்கிப் பால் கறந்து விற்றுச் சீவியம் நடத்தி வந்தாள் பாலில் இருந்து வரும் வருமானம் அவளது குடும்பச் செலவுக்குப் போதுமானதாக இருந்தது. திடீரென்று நோய் வாய்ப்பட்ட பசு எதிர்பாராத வகையில் இறந்து விட்டது. அந்த இழப்பைச் சிவகாமியால் தாங்கிக் கொள்ள முடியவில்லை. அவள் உண்ணாமல் உறங்காமல் விசர்பிடித்தவளைப் போலப் பிதற்றிக் கொண்டிருந்தாள். ஊரவர்கள் வந்து பார்த்து ஆறுதல் வார்த்தைகள் கூறிவிட்டுச் சென்றனர். பார்வதி வந்து பார்த்து விட்டு அழுதாள். அவளுடன் சேர்ந்து சில நிமிடங்கள் அழுத சிவகாமி சொன்னாள் ; "பார்வதி, ஒவ்வொருவரும் வந்து எனது இழப்பிற்கு ஆறுதல்

வார்த்தைகளைக் கூறி விட்டுச் செல்கின்றனர். உனது மகளின் சங்கிலியைத் திருடன் அறுத்த போது நான் வந்து ஆறுதல் வார்த்தைகள் கூறிவிட்டு வந்தேன். அப்பொழுது உனது துயரம் எனக்குப் புரியவில்லை. இப்பொழுது எனக்கு இழப்பு ஏற்பட்ட போது தான் அதன் தாக்கம் புரிகிறது” என்று அழுதாள். அதனால் அன்பானவர்களே, ஒருவருக்கு இழப்பு வரும்போது அவ்விழப்பு உங்களுக்கு வந்தால் எப்படியிருக்கும் என்று நினையங்கள். பிறர் துன்பமடையும் போது ஒப்புக்கு ஆறுதல் கூறாதீர்கள். இழப்பளவு உதவி செய்ய முடியாவிட்டாலும், சிறு தொகையாவது உதவுங்கள்” என்றார் நமசிவாயம் சுவாமிகள்.

***வினைப்பயன் ஒன்றின்றி வேற்றுமை கொண்டு***
***நினைத்துப் பிறர்பணிப்பச் செய்யாமை வேண்டும்***
***புனப்பொன் அவிர்சுணங்கின் பூங்கொம்பர் அன்னாய்!***
***தனக்கின்னா இன்னா பிறர்க்கு***

தனக்குத் துன்பம் தரும் ஒன்று பிறருக்கும் துன்பம் தரும் என்பதை உணர்ந்து, பிறருக்குத் துன்பஞ் செய்யக் கூடாது. “**தனக்கின்னா இன்னா பிறர்க்கு**” என்பது பழமொழி.

**19** “அன்பானவர்களே, பகை கொள்ளல் கூடாது. ஆனால் பகையைச் சந்திக்காது விட முடியாது. பிரச்சினைகள். சிக்கல்கள், முரண்பாடுகள் வாழ்க்கையில் அடிக்கடி வரத்தான் செய்கின்றன. எல்லோருக்கும் நன்மைகளைச் செய்யும் கடவுளிடம் வரம் பெற்ற அசுரர்கள் கடவுளுடன் காரணமின்றிப் பகை கொண்டு அழிந்தனர்.

பகை நாளைப் போன்று வாழ்வை அழிக்கும் வாளாகச் செயற்படும் தன்மை வாய்ந்தது. அது அனுமானின் வாலைப் போல மிக விரைவாக வளரக்கூடியது. அதனால் பகையை ஆரம்பத்திரேலயே களைந்து விட வேண்டும். அப்படிக் களைந்தால் அது முதிராது. அத்துடன் பகைவரின் நண்பர்களைப் பிரித்துத் தன் வசப்படுத்துவதாலும் பகையின் தன்மை குறையும்; சக்தியற்றதாகி விடும்"

"சேனையூரில் விருத்தாசலம் என்றொரு பெரியவர் இருந்தார். அவர் அனைவருக்கும் நன்மை செய்பவர். சிலர் எதிர்பார்ப்புகளுடன் வந்தால், செய்ய முடியாததாயின் அவர் அதை ஏற்க மாட்டார். முகத்திற்கு நேரே சொல்லி விடுவார். அவ்வூரில் கந்தபாலன் என்றொரு தீயவன் இருந்தான். அவனுடன் ஊரில் யாரும் சேர்வதில்லை. அவன் பெருந்தனவந்தன். அவனது மகளுக்கு அவ்வூரில் உள்ள பெரியவர் ஒருவரின் மகனுக்குத் திருமணம் பேசிச் செய்யுமாறு கந்தபாலன் வந்து கேட்டான். கந்தபாலனின் மகளை ஊரில் உள்ள எவரும் திருமணம் செய்ய விரும்ப மாட்டார்கள் என்று விருத்தாசலத்திற்குத் தெரியும். அதனால் அவர் தன்னால் முடியாது என்று சொல்லி விட்டார். அதனால் கோபம் கொண்ட கந்தபாலன் விருத்தாசலததின் வாழைத் தோட்டத்தை அழித்தான். பசுக்களைத் திருடி விற்றான். ஊரவர்கள் விருத்தாசலத்திடம் வந்து கந்தபாலனைப் பற்றிக் காவல்துறையில் முறையிடுமாறு கூறினர். கண்ணால் கண்ட சாட்சிகள் இல்லாமையால் விருத்தாசலம் காவல்துறைக்குச் செல்லவில்லை".

கந்தபாலன் தனது மகளின் பிறந்ததின விழாவை மிகவும் விமரிசையாகக் கொண்டாடினான். அதற்கு விருத்தாசலம் சென்றார். விருத்தாசலத்தை எதிர்பாராத கந்தபாலன் அவரை அமர்களமாக வரவேற்றான். விழா முடிந்து அவர் செல்லும் போது சொன்னார் ; "கந்தபாலா, நான் நீ கேட்ட திருமணத்தைச் செய்து தந்திருப்பேன். அவன் இன்னொரு பெண்ணைக் காதலித்தான். இரு பகுதியினரும் அதற்கு ஒப்புக் கொண்டு விட்டனர். வேறொரு நல்ல இடத்தில் செய்து வைக்கிறேன்" என்றார்"

"கந்தபாலன் உருகிப் போனான். தான் செய்த தவறுக்காக மனதுள் வருத்தப்பட்டான்."

"கந்தபாலனின் நெருங்கிய உறவினன் விசுவநாதன். விசுவநாதன் பேரோடும் புகழோடும் வாழ்வதால் தான் கந்தபாலன் உருக்கொண்டு ஆடுகிறான் என்று நினைத்த விருத்தாசலம் அவரின் மகளைக் கந்தபாலன் விரும்பிய மாப்பிள்ளைக்குத் திருமணம் செய்து வைத்தார்."

"தனது உறவினனின் மகள் தான் மகனுக்காகத் தேர்ந்தெடுத்த மாப்பிள்ளையை விரும்பியிருந்தாள் என்று விருத்தாசலம் சொன்னதை நினைத்த கந்தபாலன் தீய காரியங்கள் செய்யப் பயப்பட்டான். அதனால் விருத்தாசலத்தை மிகவும் நேசித்தான். விருத்தாசலம் தன்னைப் பற்றித் தனது உறவினருக்குச் சொன்னால் அவர் தனக்கு உதவி செய்ய மாட்டாரெனப் பயந்தான்.

ஒரு நாள் மாலை அவன் விருத்தாசலத்தின் வீட்டுக்குச் சென்று தான் கோப மிகுதியால் வாழைத் தோடத்தை அழித்ததையும், பசுக்களைத் திருடியதையும் ஒப்புக் கொண்டு மன்னிப்புக் கோரினான். அது பற்றித் தனது உறவினருக்குச் சொல்ல வேண்டாம் என்றும் கேட்டுக் கொண்டான். அதனால் அன்பானவர்களே, பகையைப் பகையால் வெல்ல முயலாதீகள். பகையைத் தந்திரத்தால் வெல்லுங்கள். அதுவும் கால தாமதஞ் செய்யாது உடனே பகையை அழித்து விடுங்கள். அத்துடன் பகை கொண்டவனின் நெருங்கிய உறவினர்களையும் நண்பர்களையும் பிரித்து விடுங்கள்" என்றார் நமசிவாயம் சுவாமிகள்.

***எதிர்த்த பகையை இளைதாய போழ்தே***
***கதித்துக் களையின் முதிராதே ; தீர்த்து***
***நனிநயப்பச் செய்தவரர் நண்பெல்லாம் தீரத்***
***தனிமரம் காடாதல் இல்.***

பகையை ஆரம்பத்திலேயே களைந்து விடல் வேண்டும். அத்துடன் பகைவனுக்கு நெருங்கியவர்களைத் தந்திரமாகப் பிரித்தும் விடல் வேண்டும். அப்படிப் பிரித்தால் பகையால் எந்தத் தீமையும் நேராது. **'தனி மரம் காடாதல் இல்'** என்பது பழமொழி. **"தனிமரம் தோப்பாகாது'** என்பதும் பழமொழி.

**20** "அன்பானவர்களே, தன் பெற்றோர், மனைவி மக்கள், துறவிகள், ஏழைகள், ஆதரவில்லாதவர்கள், பிதிர்கள், தெய்வம், விருந்தினர், சுற்றத்தவர், அந்தணர் ஆகியோரின் தேவைகளைப்

பூர்த்தி செய்வது இல்வாழ்வானது கடமையாகும். இல்வாழ்வான் இல்லத்தில் இருந்து மனைவியோடு வாழ்வதென்பது மேற்கூறிவர்களை உபசரிப்பதற்கேயாகும். ஆசைகாரணமாகப் பிறர்க்கு எதுவும் ஈயாது வாழ்பவர்கள் பின் எடுக்கும் பிறப்புக்களில் துன்பப்படுவார்கள். பிறருக்கு உதவி வாழ்வோர் என்றும் எவ்விதமான குறைகளும் இல்லாமல் வாழ்வர். ஆசை என்பது கொடியது. கூர்மையான அம்பைப் போன்றது. இலக்கு வைத்து எய்யப்படும் கூரிய அம்பு குறித்த இலக்கைத் தாக்கி அழிப்பது போல, ஆசையும் தான் விரும்பும்பியவற்றை அழிக்கும் தன்மை வாய்ந்தது".

"நாவலூரில் உள்ள அம்மன் கோயில் தர்மகர்த்தா முருகேசு. அவர் ஒழுக்கமானவர், பிறரின் பொருளில் ஆசைப்படாதவர், தர்மவான் என்று அந்த ஊர் மக்கள் பேசிக் கொள்வார்கள். அதனால் அம்மனுக்குக் கொடுக்கும் ஆபரணங்களை முருகேசுவிடம் கொடுப்பார்கள். அவர் மக்களுக்குக் காட்டி விட்டு அம்மனுக்குச் சாத்துவார். அன்று வெளிநாட்டில் வசிக்கும் அருணன் என்ற தனவந்தன் மிகவும் பெறுமதி வாய்ந்த தங்கச் சங்கிலி ஒன்றையும், அலங்கார வேலைப்பாடமைந்த பதக்கம் ஒன்றையும் முருகேசுவின் வீட்டிற்குச் சென்று அவரிடம் கொடுத்தான்".

"முருகேசு அந்தப் பதக்கத்தைப் பார்த்தார். அதன் அழகு அவரைக் கொள்ளை கொண்டது. அந்நாட்டில் அப்படிச் சிற்பவேலை

செய்த பதக்கத்தை அவர் காணவில்லை. அதனால் அதன் மீது அவருக்கு ஆசை உண்டானது. அந்த ஆசை கூரிய அம்பைப் போல அவரது மனத்தைத் தைத்துக் குழப்பியது. அதனால் அவர் அப்பதக்கத்தைத் தான் அணிவதற்காக வைத்துக் கொண்டு, அதே பெறுமதியுள்ள ஒரு பதக்கத்தைச் செய்து சங்கிலியில் கோர்த்து அம்மனுக்குச் சாத்தினார். எதற்கும் ஆசைப்படாத அவர், அந்தப் பதக்கத்தில் செய்யப்பட்டிருந்த அங்கார வேலையில் ஆசைப்பட்டுத் தவறு செய்தார். ஆகையால் அன்பானவர்களே, ஆசை ஏற்பட்டால் மனம் சமாதானமடைய மாட்டாது. மனம் ஆசைப்படும் விடயங்களை உடனே பூர்த்தி செய்யவே விரும்பும். அது பழி பாவங்களையோ, தர்மத்தையோ சிந்திக்காது. அதனால் எந்நாளும் துன்பமில்லாமல் வாழ விரும்புகின்றவர்கள் ஆசையை நீக்குதல் வேண்டும். ஆசையை நீக்கா விட்டால் அது துன்பத்தைப் பெருக்கித் தீய செயல்களைச் செய்யுமாறு தூண்டும். அதனால் ஆசைப்படாது வாழப் பழகிக் கொள்ளுங்கள்" என்றார் நமசிவாயம் சுவாமிகள்.

***கொண்டொழுகும் மூன்றற்கு உதவாப் பசித்தோற்றம்***
***பண்டொழுகி வந்த வளமைத்தங் - குண்டது***
***கும்பியிலுந் திச்சென் றெறிதலால் தன்னாசை***
***அம்பாயுள் புக்கு விடும்.***

ஆசை கூரிய அம்பு போல இலக்கை அடைய வைக்கும். அதனால் ஆசை கொள்ளாதிருத்தல் வேண்டும். **'தன்னாசை அம்பாய் உள்புக்கு விடும்"** என்பது பழமொழி. அதனால் ஆசைப்படக் கூடாது.

## 21

"அன்பானவர்களே, தாமாகவே நாடி வந்து இனத்தவர் என்று உரிமை பாராட்டி அவரோடு இருந்து, அவரால் நன்மை பெற்றவர், வளர்ந்த பின் அவருக்கு எதிரானவருடன் சேர்ந்து அவருக்குக் கேடு செய்ய நினைப்பது மிகவும் கேவலமான செயலாகும். கொலை செய்தவனுக்கும் மன்னிப்புண்டு. ஆனால் நன்றி மறந்தவனுக்கு அவன் எடுக்கும் எப்பிறவியிலும் மன்னிப்புக் கிடையாது. அவன் உலகத்திலுள்ள துன்பங்கள் அனைத்தையும் பெற்று நிர்க்கதியாகி உணவுக்கே அல்லற்படுவான். இப்படிச் செய்பவர்கள் தாம் ஏறி இருக்கும் மரக்கொப்பினைத் தனக்கு வரும் ஆபத்தை உணராது வெட்டிவிடுவது போன்றதாகும். ஒருவர் கைம்மாறு கருதாது செய்யும் உதவிக்கு ஈடாக உதவி பெறுபவர் உலகில் உள்ள எதனையும் கொடுத்துத் திருப்திப்பட முடியாது. பயன்கருதாது செய்யப்படும் உதவி கடலைவிடப் பெரியது. துன்பந் தோன்றும் போது எமக்கு உதவி செய்தவர்களை நாம் உயிருள்ள வரை மறக்கக் கூடாது. அப்படி உதவி செய்தவர் பின்னர் கொல்வதைப் போன்ற துன்பத்தைச் செய்தாலும், அவர் முன்பு செய்த நன்மையை நினைத்து அவரை மன்னித்தல் வேண்டும்."

"நாவலூரிலே சிவச்செல்வம் என்றொருவன் இருந்தான். அவன் பிறந்தவுடன் தாய் இறந்து விட்டாள். அவனுக்கு ஐந்து வயதாக இருக்கும் போது அவனது தந்தை பாம்பு தீண்டி இறந்து விட்டார். மரணவீட்டிற்குக் கூட அவனது உறவினர்கள் வரவில்லை. ஊரவர் இரண்டொருவர் ஒப்புக்கு வந்தனர். அவனது பிரேதம் அரச செலவில் அடக்கம் செய்யப்பட்டது. இரவானதும், சிவச்செல்வம்

பசியால் வாடினான். அவனுக்கு தனியப் படுக்கப் பயமாக இருந்தது. அயலில் இருந்த தாயின் சகோதரரான அருணாசலத்தின் வீட்டுக்குச் சென்றான். அவர் அவனைத் துரத்தினார் ; "மகனே, தற்செயலாக நான் இறந்தால் உன்னை எமது இனத்தவர்கள் யாரும் கவனிக்க மாட்டார்கள். அதனால் நான் இறந்தால் நீ இவ்வூரில் வாழும் சின்னத்தம்பியிடம் போ. அவர் உனக்கு உதவி செய்வார்" என்று தகப்பன் கூறிய வார்த்தைகள் சிவச்செல்வத்திற்கு ஞாபகம் வந்தன. அதனால் அவன் சின்னத்தம்பியின் வீட்டிற்குச் சென்றான். சின்னத்தம்பி முதல் நாள் வெளியூர் சென்றிருந்தார். இன்னும் திரும்பவில்லை. சின்னத்தம்பியின் மனைவி மீனாட்சி அவனை அழைத்துச் சென்று குளிப்பாட்டி, அவன் அணிய உடை கொடுத்தாள். பின்பு அவனுக்கு உணவு கொடுத்தாள். மறு நாட்காலை சின்னத்தம்பி வந்து விஷயத்தைக் கேள்விப்பட்டு வருந்தினார். பின்பு அவனைத் தன்னுடன் தங்கும்படி கூறினார். அவன் அவரது பிள்ளைகளுடன் பாடசாலைக்குச் சென்று வந்தான்."

"சிவச்செல்வம் கல்வி கற்றுப் பெரியதொரு தொழிலைப் பெற்றான். அவன் தொழிலைப் பெற்றதும் அருணாசலம் அடிக்கடி அவனைச் சந்தித்துக் கதைத்தார். சின்னத்தம்பி ஏழை. அதனால் அவர் தனது மகளுக்கு உன்னைத் திருமணம் செய்து வைக்கவே உன்னைக் கற்பித்தார். அதனால் நீ கவனமாக இரு. உன்னை ஏமாற்றச் சின்னத்தம்பி முயல்வார். அதற்கு இடங்கொடாதே. நீ அவருடன் வாழும் போது அவரின் கமத்தில் வேலை செய்தாய். அந்தக் கூலி உணவுக்கும், உடைக்கும் போதுமானது.

வேண்டுமானால் கொஞ்சப் பணத்தைக் கொடு. ஆனால் சின்னத்தம்பியின் மகளைத் திருமணம் செய்து விடாதே. உனக்கு நல்ல இடத்தில் நான் திருமணம் செய்து வைக்கிறேன்" என்றார். அதற்குச் சிவச்செல்வம் ஒப்புக் கொண்டான்."

"சிலவருடங்களின் பின் சிவச்செல்வம் சின்னத்தம்பிக்குச் சொல்லாது அருணாசலத்தின் மகளைத் திருமணம் செய்தான். திருமணத்திற்கு வந்த சின்னத்தம்பி, மணமக்களை ஆசீர்வதித்து விட்டுச் சென்றார். அருணாசலம் பெரும் வர்த்தகன். அவன் தனது மருமகன் வேலைக்குச் சென்று வர விலையுயர்ந்த மோட்டார் வண்டியொன்றை வாங்கிக் கொடுத்தான். விடுமுறை தினங்களில் சிவச்செல்வமும் மனைவியும் அம்மோட்டார் வண்டியில் சுற்றுலாச் செல்வர். அன்று அவர்கள் தூரத்திலுள் பூங்கா ஒன்றிற்குச் சென்று வந்தபோது, அவர்கள் பிரயாணம் செய்த மோட்டார் வண்டி விபத்துக்குள்ளானது. அதனால் அருணாச்சலம் காலமானார். சிவச்செல்வத்தின் இரண்டு கால்களும் செயலிழந்தன. அதனால் அன்பானவர்களே, உதவி செய்தவர்களை கடவுளாக மதியுங்கள். அன்று சின்னத்தம்பியில்லா விட்டால் சிவச்செல்வம் அந்த நிலையை அடைந்திருக்க முடியாது. கற்றவர்கள் கற்றபடி நடத்தல் வேண்டும். நன்றாகக் கற்ற சிவச்செல்வம், தீயவரான அருணாசலத்தின் சொல்லைக் கேட்டு ஆராயாமல் நடந்துள்ளான். எந்த அறத்தை அழித்தவருக்கும் தப்பிப் பிழைக்க வழியுண்டு. ஒருவர் செய்த உதவிகளை மறந்தவர்களுக்கு மன்னிப்பே இல்லை" என்றார் நமசிவாயம் சுவாமிகள்."

***நாடி நமரென்று நன்குபுறந் தந்தாரைக்***
***கேடு பிறறோடு சூழ்தல் - கிளர்மணி***
***நீடுகல் வெற்ப! நினைப்பின்றித் தாமிருந்த***
***கோடு குறைத்து விடல்.***

இருக்க உதவிய கிளையை வெட்டும் மூடன், அதன் அழிவோடு தானும் அழிவான். இது போல உதவி செய்பவர்களுக்குத் துரோகஞ் செய்வோரும் அழிவர். '**தாமிருந்த கோடு குறைத்து விடல்**' என்பது பழமொழி.

22 "அன்பானவர்களே, தவறான வழியில் செல்லும் தீயவர்களைச் சான்றோர் கண்டித்துத் திருத்துதல் வேண்டும். உலகில் தீமைகள் அறியாமையால் தான் செய்யப்படுகின்றன. அறிவென்பது அழிவு வராமற் காக்கும் கருவியாகும். அதனால் அறிவில்லாதவர்கள் அறியாமையால் செய்கின்ற தீயசெயல்களை அறிவுள்ளவர்கள் கட்டுப்படுத்தா விட்டால், அவர்கள் பெற்ற அறிவால் என்ன பயன்? மனதை அது போன போக்கில் விடாமல் தீமையிலிருந்து விலகி நல்ல வழியில் வாழச் செய்வதே அறிவாகும். இத்தகைய அறிவுள்ளவர்கள் மற்றவர்களது மனங்களையும் தீய வழியில் செல்ல விடாது தடுத்தல் வேண்டும்".

"காரையூரில் பெரிய தம்பி என்றொரு ஆசிரியர் இருந்தார். அவருக்கு எண்பத்தைந்து வயது. இருப்பினும் இளைஞர்களைப் போலச் சுறுசுறுப்பாகக் காரியங்களாற்றுவார். ஊரில் பலர் அவரின் மாணவர்கள். அவர் ஓய்வு பெற்ற பின்பும் அக்கிராமத்தவர்கள்

அவரை மதித்து நடந்து வந்தனர். அவரின் மாணவன் நடனசிகாமணி. மிகவும் ஒழுக்கமுள்ளவன். ஆனால் அவனது மகன் சிவலோகநாதன் குடிகாரன். களவு எடுப்பவன். அதனால் கவலைப்பட்ட நடன சிகாமணி தனது ஆசிரியரான பெரியதம்பியிடம் தனது மகனைப் பற்றிக் குறைப்படுவார். அதனால் ஒரு நாள் பெரிய தம்பி நடனசிகாமணியின் வீட்டுக்கு வந்தார். அப்பொழுது சிவலோகநாதன் வீட்டில் இருந்தான். அவரைக் கண்டதும் அவன் மிகவும் மரியாதையாக அவரை வரவேற்று ஆசனத்தில் இருத்தி விட்டு; "அப்பா வெளியே சென்று விட்டார்" என்றான்."

"மகனே, நான் அப்பாவைச் சந்திக்க வரவில்லை. உன்னைத் தான் சந்திக்கவந்தேன். உனது தந்தையார் எனது மாணவன். மிகவும் சிறந்த மாணவன். அவனது பிள்ளையான நீ செய்யக் கூடாத காரியங்களையெல்லாம் செய்வதால், அவர் வேதனைப்படுகிறார். மகனே, பெற்றோரை வருத்தக்கூடாது. அவர்கள் மனம் வருந்தினால் பிள்ளைகளின் வாழ்வு சிறக்காது. தாயானாவள் குழந்தையின் நலன்கருதி அதனை வருத்தி உணவு கொடுக்கிறாள். குழந்தைகள் உணவை விரும்பி உண்ணவில்லை என்பதற்காகத் தாய் உணவைக் கொடுக்காது விட முடியுமா? மாணவன் என்பவன் ஆசிரியனின் பிள்ளை. அந்தப் பிள்ளையின் நல்வாழ்வுக்காகப் பெற்றோரான ஆசிரியர் தவறுகள் செய்யும் போது கண்டித்துத் திருத்துதல் வேண்டும். அறிவுள்ள பெரியவர்கள் அதைத் தான் செய்வார்கள். நீ என்னிடம் படிக்காவிட்டாலும் எனது மாணவனின் மகன். அதனால் உன்னைத் தண்டிக்கவும் எனக்கு

உரிமை இருக்கிறது". என்று அவர் சொல்லும் போது குறுக்கிட்டுச் சிவலோகநாதன் சொன்னான் ; "ஐயா, நீங்கள் பெரியவர். அத்துடன் சிறந்த ஆசிரியர். உங்களைப் பற்றி வாயோயாமல் தினமும் அப்பா சொல்வார். அதுபோல ஊரில் உள்ள பலரும் சொல்வார்கள். ஊரில் உள்ள பெரியவரான நீங்கள் ஊர் மக்கள் அனைவரும் நன்றாக வாழ வேண்டும் என்று விரும்புகிறீர்கள்".

"ஐயா, அப்பாவிற்கு வாய்த்த உங்களைப் போன்ற ஒரு பெரியவர் எனக்கு ஆசிரியராகக் கிடைக்கவில்லை. எமது அதிபரும் ஆசிரியர் சிலரும் சேர்ந்து பாடசாலைப் பொருட்களைத் திருடுவர். திருடிய பொருட்களை என்னைப் போன்ற மாணவர்களிடம் கொடுத்துத் தமது வீட்டில் கொண்டு போய்க் கொடுக்கச் சொல்லுவர். அதற்குக் கூலியாக இனிப்பு வகைகளைத் தருவர். சிலர் மது அருந்துவார்கள். அவர்கள் பாடசாலையில் மது அருந்துவது வழக்கம். நாம் தான் மதுபான வகைகளை வாங்கிக் கொடுப்போம். அப்போது நாமும் குடித்துப் பார்ப்போம். பின் ஆசிரியர்களே மது வகைகளை எமக்குத் தந்தனர். அதனால் தான் நானும் எனது நண்பர்களும் திருடர்களாகவும், குடிகாரர்களாகவும் மாறினோம். உங்களைப் போலக் கண்டித்துத் திருத்தி நல்வழிப்படுத்தும் ஆசிரியர் ஒருவர் எமக்கு ஆசிரியராகக் கிடைத்திருந்தால், நானும் நண்பர்களும் இன்று இந்த நிலையை அடைந்திருக்க மாட்டோம்" என்றான் சிவலோகநாதன்."

“பெரியதம்பி திகைத்துப் போனார். அவர் அதை எதிர்பார்க்க வில்லை. அவர் பேசாததால் சிவலோகநாதன் சொன்னான் ; “ஐயா, அப்பாவும் ஊரில் உள்ள உங்கள் மாணவர்களும் உங்களுக்குத் தரும் மதிப்பைக் கண்டு நான் வியப்படைவதுண்டு. நானும் எனது நண்பர்களும் எம்மைக் கற்பித்த ஆசிரியர்களுடன் நண்பர்களைப் போலப் பழகுவோம். இதற்குக் காரணம் அவர்களின் நடத்தை தான். பெரியவர்கள், தீயசெயல்களைச் செய்பவர்களைக் கண்டித்துத் திருத்துதல் வேண்டும். அதுதான் தர்மம். ஆனால் தற்போதைய ஆசிரியர் பலர் அப்படி நடப்பதில்லை. அவர்கள் தமது நலனுக்காக மாணவர்களின் கல்வியைச் சீரழிக்கின்றார்கள்” என்றான் சிவலோகநாதன். அதனால் அன்பானவர்களே, சமூகத்திற்கு வழிகாட்டும் பெரியவர்களான ஆசிரியர்கள் பொறுப்புடன் நடந்து கொள்ளல் வேண்டும்” என்றார் நமசிவாயம் சுவாமிகள்.

***உலப்பில் உலகத்து உறுதியை நோக்கிக்***
***குலைத்தடக்கி நல்லறம் கொள்ளார்க் கொளுத்தல்***
***மலைத்தழுது உண்ணாக் குழவியைத் தாயர்***
***அலைத்துப்பால் பெய்து விடல்.***

குழந்தையின் நலன் கருதித் தாய் அதனை வருத்தி உணவூட்டுவது போல சமூகத்தின் நன்மை கருதி தீய செயல்களைச் செய்பவர்களைப் பெரியவர்ககள் தண்டித்துத் திருத்துதல் வேண்டும். **‘தாயர் அலைத்துப் பால் பெய்து விடல்’** என்பது பழமொழி.

23 “அன்பானவர்களே,தகுதியைப் பொறுத்ததல்ல வாழ்க்கை. அவரவரின் மனத்தைப் பொறுத்தது தான் வாழ்க்கை. மிகவும் உத்தமராக இருந்து உதவிகள் பலவும் செய்பவரையும் சிலருக்குப் பிடிக்காதிருக்கும்.தீயசெயல்களைச் செய்து குழப்பம் விளைவிப்பவர் –களையும் சிலருக்குப் பிடிக்கும். ஒரு தாயை எடுத்துக் கொண்டால், அவளது பிள்ளைகள் எல்லோரும் நல்ல நிலையில் இருந்தாலும் அவள் அவர்கள் மீது ஒரே மாதிரியான அன்பு செலுத்த மாட்டாள். அந்த அன்பு பிள்ளைக்குப் பிள்ளை வேறுபாடு உடையதாக இருக்கும். இதுதான் உலக இயல்பு”.

“நாவலூரில் சிவபாலசிங்கம் என்றொருவர் இருந்தார். அவர் வேலைக்குச் சென்று வரும் போது விபத்தில் சிக்கித் தன் கால்கள் இரண்டையும் இழந்து விட்டார். அவருக்கு மூன்று சிறிய பிள்ளைகள் இருந்தனர். அவரும் பிள்ளைகளும் நாவலூர்ச் சந்தியில் இருந்து பிச்சை எடுத்து வாழ்ந்து வந்தனர். நாவலூருக்கு அருகில் உள்ள ஊர் அடிச்சேரி. அடிச்சேரியில் பாண்டியன், வரகுணன் என்று இரு நண்பர்கள் இருந்தனர். அவர்கள் இருவரும் ஒரு நாள் நாவலூர்ச் சந்திக்கு வந்த போது கந்தல் உடையுடன் ஒட்டி உலர்ந்த மூன்று சிறுவர்கள் பிச்சை எடுப்பதைக் கண்டனர். இருவரும் அவர்களை இரக்கத்துடன் அணுகி விசாரித்து அவர்களின் நிலையை அறிந்தனர். கற்க வேண்டிய வயதில் மூன்று பிள்ளைகளும் பிச்சை எடுப்பதை விரும்பாத அவர்கள் அம்மூன்று பிள்ளைகளையும் பாடசாலையில் சேர்த்தனர். அம்மூன்று

பிள்ளைகளுக்கும் தாய்க்கும் தகப்பனுக்கும் வேண்டிய உதவிகளைச் செய்தனர்."

"பத்து வருடங்களின்பின் சிவபாலசிங்கத்தின் மூத்த மகன் படிப்பை முடித்துவிட்டு நல்லதோர் உத்தியோகத்தில் அமர்ந்தான். இருப்பினும் பாண்டியனும் வரகுணனும் அவர்களுக்குத் தொடர்ந்தும் உதவிகள் செய்தனர். அதனால் சிவபாலசிங்கத்தின் குடும்ப நிலை உயர்ந்தது".

"சிவபாலசிங்கத்தின் மூத்த மகன் அடிக்கடி பாண்டியனின் வீட்டுக்குப் போவான். ஆனால் வரகுணனின் வீட்டுக்குச் செல்ல மாட்டான். அது வரகுணனுக்குக் கவலையைக் கொடுத்தது. தானும் பாண்டியனும் ஒரே மாதிரியான உதவிகள் செய்தும் சிவபாலசிங்கத்தின் மூத்த மகன், பாண்டியன் மீது அதிக அன்பு கொண்டிருப்பதை நினைக்க அவனுக்கு ஆச்சரியமாக இருந்தது. ஆனால் சிவபாலசிங்கம் வரகுணனின் வீட்டுக்குத் தினமும் செல்வான். ஆனால் பாண்டியனின் வீட்டுக்கு மாதத்தில் ஓரிரு தடவைகள் மாத்திரம் செல்வான். இதுவும் வரகுணனுக்கு ஆச்சரியமாக இருந்தது. அதனால் அவன் அவ்விஷயத்தைத் தனது ஆசிரியரான வல்லிபுரத்திடம் சொன்னான். அதற்கு அவர் சொன்னார்; "மகனே நாம் சாப்பிடுகிறோம். அச்சாப்பாடு உடலில் உள்ள உறுப்புக்கள் எல்லாவற்றிற்கும் சமமாகச் செல்கிறது. அப்படியாயின் கைவிரல்கள், கால்விரல்கள், கண் காது போன்ற உறுப்புக்கள் ஒரு மாதிரியாக இருத்தல் வேண்டும். ஆனால் அப்படி இருப்பதில்லையே அது போலத்தான் மனமும். ஒருவன் பல்லாயிரம்

பெண்களைப் பார்க்கிறான். ஒருத்தி தான் அவனுக்குப் பேரழகியாகத் தெரிகிறாள். அவனுக்குப் பேரழகியாகத் தெரிந்தவள், இன்னொருவனுக்கு அசிங்கமானவளாகத் தெரிகிறாள். இது மனத்தின் வேறுபாடு. எனக்குத் தெரிந்த ஒரு தாய்க்கு ஏழு பிள்ளைகள். அத்தாய் தனது மூன்றாவது மகனையே அதிகம் விரும்புவாள். தாய்ப் பாசம் என்பது பிள்ளைகளின் சிறப்பு, செல்வம், பதவிகளைப் பொறுத்து அமைவதல்ல. அது தாயுள்ளத்தின் தனித்த இயல்பாய் அமைவது. அதற்குக் காரணம் கூறமுடியாது. அது உலக இயல்பு. அதுபோலத் தான் சிவபாலசிங்கமும் அவரது பிள்ளைகளும் நடந்து கொள்கின்றனர். ஒருவரது நடத்தையைக் கொண்டு அவரின் மனநிலையை ஒரு போதும் அறிந்து கொள்ள முடியாது. சிவபாலசிங்கத்திற்கும் அவனது பிள்ளைகளுக்கும் ஏதோ ஓர் இனந்தெரியாத விருப்பு உங்களிடம் உள்ளது. அது உங்களாற் செய்யப்படும் உதவிகளுக்கு அப்பாற்பட்டது" என்றார் ஆசிரியர். ஆகவே, அன்பானவர்களே, ஒவ்வொருவரின் விருப்பு வெறுப்புகள் அவரவரின் மனதைப் பொறுத்தது. அன்பு வேறு விருப்பு வேறு" என்றார் நமசிவாயம் சுவாமிகள்.

***ஒக்கும் வகையான் உடன்பொரும் சூதின்கண்***
***பக்கத் தொருவன் ஒருவன்பாற் பட்டிருக்கும்***
***மிக்க சிறப்பின ராயினும் தாயார்க்கு***
***மக்களுள் பக்கமோ வேறு.***

தாய்ப்பாசம் என்பது பிள்ளைகளின் சிறப்பு, செல்வம், தகுதி ஆகியவற்றைப் பொறுத்து அமைவதில்லை. அது தாயுள்ளத்தின்

தனித்த இயல்பாய் அமைவது. **‘தாயர்க்கு மக்களுள் பக்கமோ வேறு’** என்பது பழமொழி.

24

“அன்பானவர்களே, ஒருவன்வறியவனாகி விட்டானென்றா – லும் சுற்றத்தவர்கள் அவனுக்காக இரங்குவார்கள். அது போல ஒருவன் கூடாத நடத்தையுடையவனாக இருந்தாலும் அவனது இனத்தவர்கள் வெறுத்து ஒதுக்கினாலும் ஆபத்திற்கு உதவி செய்வார்கள். பிறர் செய்யமாட்டார்கள். சுற்றத்தோடு வெறுப்புக் கொண்டு அவர்கள் மீது பகை கொள்வதென்பது கரையில்லாத குளத்தில் நீர் நிறைந்து நிற்பதைப் போன்ற செயலாகும். எவ்வளவு தான் பெருமையுள்ளவனானாலும், அவனைச் சுற்றத்தினர் மதிக்கா விட்டால் அப்பெருமையால் எந்தவிதமான பயனும் கிடைக்காது. உறவினர்கள் ஏதோ ஒரு காரணத்தால் பிரிந்து சென்றாலும், ஆபத்தான வேளைகளில் அவர்கள் எதையும் பாராது சேர்த்துக் கொள்வார்கள். இது உலக இயற்கை. உடை அவிழும்போது உடனே அதைத் தடுத்துப் பிடிக்க விரைந்து உதவும் கையைப் போல, துன்பம் வரும் போது உறவினர்கள் வந்து உதவி செய்வார்கள். மற்றவர்கள் தமக்குப் பயனுள்ள போது உயிரைக் கொடுப்பது போல இருப்பார்கள். பயனில்லாத போது மெல்ல விலகி விடுவார்கள். அதனால் உறவினர் கோபப்பட்டாலும் ஆபத்து நேரும் வேளையில் வெட்கத்தைப் பாராது, அவர்களிடத்துச் செல்லுதல் வேண்டும்.”

“நாவலூரில் நடராசா என்றொருவன் இருந்தான். அவனுக்கு ஐந்து சகோதரர்கள். தகப்பனுடன் சொத்து விடயத்தில்

பிரச்சினைப்பட்டு அவன் தகப்பனையும் சகோதரர்களையும் விட்டுப் பிரிந்து விட்டான். ஊரில் அவன் குடியிருந்த காணியை விற்க விரும்பினான். அதையறிந்து அவனது தந்தையார் அவனிடம் வந்து சொன்னார் ; "மகனே, நான் நீதியின்படி தான் எனது சொத்துக்களைப் பங்கீடு செய்தேன். உனக்கு அதில் மாறுபாடு இருக்கிறது. நன்றாக யோசித்துப் பார். எனது ஐந்து பிள்ளைகளுக்கும் கொடுத்த பெறுமதி சரி. உனக்குப் பணமும், மூத்தவனுக்குக் காணியும், இளையவனுக்கு நகையும் கொடுத்தேன். அதில் நீ முரண்படுகிறாய். உனக்குப் பணம் தேவையில்லா விட்டால் காணியை அல்லது நகையைப் பெறு. ஆனால் வீட்டை விற்று விட்டு வேற்றூருக்குச் செல்லாதே. அவ்வூரில் உன்னை யாரும் கவனிக்க மாட்டார்கள். அத்துடன் எமது குடும்பக் காணியைப் பிறருக்கு விற்காதே" என்றார். ஆனால் நடராசா அதைக் கேளாது அக்காணியைப் பிறருக்கு விற்று விட்டு நண்பனின் உதவியுடன் வேறூரில் குடியேறினான்."

"நண்பனின் வீட்டுக்கு அருகில் குடியேறிய போதும், நண்பனால் அவர்களுக்குத் தொந்தரவுகள் தான் உண்டானது. அவன் தேவையில்லாது முரண்பட்டான். நடராசாவின் மனைவியுடன் தகாத முறையில் நடக்க முற்பட்டான். அதனால் நடராசா அவ்வூரில் உள்ளவர்களிடம் முறையிட்ட போதும் அவர்கள் அதைக் கவனத்தில் எடுக்கவில்லை"

“திடீரென்று நடராசாவுக்கு நெஞ்சுவலி ஏற்பட்டு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டான். அவனுக்கு உணவு கொண்டு சென்று கொடுக்கவோ, பார்க்கவோ அவ்வூரில் யாரும் இருக்கவில்லை. வைத்தியர் சத்திர சிகிச்சை செய்ய வேண்டுமென்றும் அதற்குப் பல இலட்ச ரூபா தேவையென்றும் சொன்னார். அவனிடம் அவ்வளவு பணம் இல்லை. அதனால் அவன் தனது மனைவிக்குச் சொன்னான் ; “நான் இறந்தால் நீயும் பிள்ளைகளும் அனாதைகளாகி விடுவீர்கள். நான் இறந்தால் நீ உனது பெற்றோரிடம் சென்று விடு. எனது பெற்றோரையும் சகோதரங்களையும் நம்பாதே” என்றான்”.

“அவனது மனைவி அழுதழுது சொன்னாள் ; “நீங்கள் நினைப்பது தவறு. மாமா தனது சொத்தை நீதியாகத்தான் பங்கீடு செய்தார். அதை நீங்கள் தவறாகப் புரிந்ததால் தான் இவ்வளவு விபரீதங்களும் நடந்தன. உங்கள் நண்பனை நம்பி வந்தீர்கள். இப்போ, அவன் எம்மை எதிரியாக நினைக்கிறான். நீங்கள் நோயுற்ற போதும் அவன் வந்து பார்க்கவில்லை. நீங்கள் வைத்தியசாலையில் இருக்கும் போது உங்கள் தந்தையும் தாயும் சகோதரர்களும் பலமுறை வீட்டுக்கு வந்து உதவி செய்துள்ளனர். உங்களைப் பார்க்க விரும்புகிறார்கள். சத்திரசிகிச்சைக்கான பணத்தையும் தர விரும்புகிறார்கள். நீங்கள் தம்மை ஏற்க மாட்டீர்கள் என்று துன்பப்படுகிறார்கள். நீங்கள் செய்தது பிழை. அவர்களுடன் பிரச்சினையென்றால் ஏன் காணியை விற்பான்..? இப்போது உங்கள் உறவினர்கள் பலர் வைத்தியசாலைக்கு வந்து

உங்களைப் பார்த்து உதவிசெய்து விட்டுச் செல்கிறார்கள். நீங்கள் நம்பி வந்த நண்பனும், இந்த ஊரவர்களும் ஒரு நாளென்றாலும் வந்து பார்த்தார்களா...? உங்களுக்கு பணம் வேண்டாமென்றால் காணி அல்லது நகையைப் பெறும்படி உங்கள் தந்தை கூறினார். அவற்றின் பெறுமதி சரியாகவே இருந்தது. நீங்கள் தான் அதை உணர்ந்து கொள்ளவில்லை. முரட்டுத்தன்மையும், பிடிவாதமும் கொண்ட நீங்கள் அவர்களுக்கு எவ்வளவு தொல்லைகள் கொடுத்தும், அவர்கள் அதை மன்னித்து இன்று வந்து உதவி செய்கிறார்கள். இதை நீங்கள் இப்போதாவது உணருதல் வேண்டும். கோழி மிதித்துக் குஞ்சு முடமாகாது என்பார்கள். நீங்கள் செய்த எதையும் அவர்கள் பெரிதாக எடுக்கவில்லை" என்றாள்."

"அப்போது தான் நடராசாவுக்கு தனது தவறு தெரிந்தது. மனைவியையும் பிள்ளைகளையும் அழைத்துக் கொண்டு தனது தந்தையின் வீட்டுக்குச் சென்றான். தந்தையும் தாயும் அவனைக் கட்டிப்பிடித்து அழுதனர். சகோதர்களும் அவர்களது மனைவிமாரும் பிள்ளைகளும் வந்து அன்புடன் கதைத்தனர். அதனால் அவனது அரைவாசி நோய் மாறிவிட்டது. பின் நடராசாவுக்குச் சத்திரசிகிச்சை செய்யப்பட்டது. அதற்கான செலவை அவர்கள் கொடுத்தனர். இப்போது நடராசா சுகதேகியாவிட்டான். ஆதலால் அன்பானவர்களே, உறவினர்கள் கடிந்து விட்டினர். தாக்கி விட்டனர் அவமானப்படுத்தி விட்டனர். என்றெண்ணாது ஆபத்து வரும் போது தயக்கமில்லாமல் அவர்களிடம் செல்லுங்கள்" என்றார் நமசிவாயம் சுவாமிகள்.

***உளைய உரைத்து விடினும் உறுதி***
***கிளைகள் வாய்க் கேட்பதே நன்றாம் - விளை வயலுள்***
***பூமிதித்துப் புட்கலாம் கொய்கைப் புனலூர!***
***தாய்மிதித்து ஆகா முடம்.***

உறவினர்கள் எந்தக் கொடுமை செய்தாலும் அதனால் பாதிப்பு உண்டாக மாட்டாது. அதனால் அவர்களிடம் உதவி கோருவது அவமானமல்ல. "**தாய் மிதித்து ஆகாமுடம்**" என்பது பழமொழி.

25 "அன்பானவர்களே. பழிக்கு அஞ்சுகின்ற பெருமக்கள், சிறிய குற்றங்கள் செய்தாலும் அதைப் பெரியதாக எண்ணி மறுபடியும் அக்குற்றத்தைச் செய்யமாட்டார்.தாம் செய்த குற்றத்திற்காக மிகவும் வருந்துவார்கள். அதனால் குடிப்பிறப்பிலே மிகவும் சிறந்தவராகிய ஒரு சிலர் தமது வறுமை காரணமாக குடிப்பிறப்பிலே மிகவும் தாழ்ந்தவர்களைச் சென்றடைந்து அடிமையாக வாழ்கிறார்கள். இது மிகவும் இழிவானது என்று அவர்கள் கருதுவதில்லை. இது மிகப் பெரிய தவறாகும். நல்ல குடியில் பிறந்தவர்கள் தமது உயிரே போவதாக இருந்தாலும் தாழ்ந்த குடிமக்கள் இருக்கும் தெருப்பக்கம் கூடச் செல்ல மாட்டார்கள். வறுமை மிகுதியால் உயிரை விட்டாலும் விடுவார்களே தவிர தம் குடிப்பிறப்பிற்கு இழிவு ஏற்படவிட மாட்டார்கள்"

"மாதவன் நடுவு நிலைமையும் நாணமும் ஒருசேர அமைந்தவர். ஒழுக்கம் மிக்கவர் ; உண்மை பேசுபவர்

முகமலர்ச்சியும், கொடுத்து உதவும் தன்மையும் இனிய சொல்லும், பிறரை இழிவாக எண்ணாத தன்மையும் கொண்டவர். எனினும் மிகுந்த ஏழை. அவருக்கு மூன்று பிள்ளைகள். மூத்தவன் ஆதவன். வறுமை காரணமாக அவ்வூரில் வாழும் தாழ்ந்த குடியானவனான சின்னத்துரையின் நெருங்கிய நண்பன். சின்னத்துரை ஆடு, மாடுகளை வெட்டி அதன் இறைச்சியை விற்பனை செய்பவன். பெருக்குடிகாரன். அத்துடன் மதுபான வகைகளை விற்பவன்".

"தனது மூத்த மகன் சின்னத்துரையோடு சேர்ந்து தீயசெயல்களைச் செய்வதை விரும்பாத மாதவன் தனது மகனுக்கு வேண்டியளவு அறிவுரைகளைக் கூறிப்பார்த்தார். அவன் திருந்தவில்லை. ஆதவன் திருமணமானவன். அவனுக்கு இரண்டு பிள்ளைகள். அந்தப் பிள்ளைகளும் சின்னத்துரையின் பிள்ளைகளோடு சேர்ந்து தீய செயல்களைச் செய்து வந்தனர். அதனால் மாதவன், ஆதவனின் வீட்டுக்குச் செல்வதை நிறுத்தினார். அவனது இன்ப துன்பங்களில் கலந்து கொள்வதில்லை என்றும் முடிவெடுத்தார். அவர் தனது மகளின் திருமணத்திற்கு ஆதவனுக்குச் சொல்லவில்லை. அதனால் ஆதவனும் சின்னத்துரையும் நன்றாகக் குடித்து விட்டு மாதவனின் வீட்டுக்கு வந்து சண்டையிட்டனர்."

"மாதவனுக்கு அது பெரும் துன்பத்தைக் கொடுத்தது. அதனால் அவர் நோய் வாய்ப்பட்டார். அவரைப் பார்க்க வந்த அவரது நண்பனான மணியம் சொன்னார் ; "மாதவா, நல்ல குடியிற்

பிறந்தவர்களில் சிலர் பெரும் வறுமை காரணமாகக் கீழான குடியிற் பிறந்தவர்களுடன் சேர்ந்து தீய செயல்களைச் செய்வது இயல்பு. அதனால் அவர்களது குடும்ப மானம் மரியாதை யாவும் போய்விடும் என்று அவர்கள் நினைப்பதில்லை. குற்றமற்ற குடிப்பண்புடன் வாழவேண்டும் என்று உறுதியாக இருப்பவன், எத்தகைய சூழ்நிலை வந்தாலும் மாறமாட்டான். அற்ப மனம் படைத்தோரும், உழைக்க விரும்பாத சோம்பேறிகளும் தான் அவ்வாறு நடப்பார்கள். அவர்களுக்கு எப்படி உணர்த்தினாலும் அது ஏறாது. தமது நலனுக்காகக் குடும்பத்தின் உயர்வை அவர்கள் அடைவு வைப்பார்கள். அடைவு வைத்த நிலம் தனது பெருமையை இழந்து பூரிப்பற்ற இருப்பது போல, அவர்களது குடும்பமும் ஒளியிழந்து இருக்கும். இதை அவர்கள் உணர்ந்தால் தான் திருந்துவார்கள். தீய குடிப்பிறந்தவர்களின் செயல்கள் எப்பொழுதும் செய்பவர்களுக்கு இன்பத்தையே கொடுக்கும். கள்ளுண்டு மயங்கியிருப்பனை அது தவறானது என்று அவனைத் திருத்த மேற்கொள்ளும் முயற்சி நீருக்குள் மூழ்கியவனைத் தீப்பந்தம் கொண்டு தேடுவது போன்றது என்று நீ அறியவில்லையா..? கள்ளும் இறைச்சியும் அவனை மாறவிடாது. அதனால் நீ கவலைப்பட்டு உனது உடம்பைக் கெடுத்துக் கொள்ளாதே” என்றார்”.

“ அதன் பின்பும் மாதவனால் அதை மறக்க முடியவில்லை. எந்நேரமும் புலம்பிக் கொண்டிருந்தவர் ஒரு நாள் திடீரென்று இறந்து விட்டார். ஆகையால் அன்பானவர்களே, எந்தக் குடியில் பிறந்தாலும் நல்லவர்களாக வாழ்ந்து தமது குடிப்பெருமையை

உயர்த்துதல் வேண்டும். ஒருவர் தீயவற்றைச் செய்யும் குடியில் பிறந்தாலும் அத்தீய செயல்களை ஒதுக்கி நல்ல செயல்களைச் செய்து வந்தால், அவர் உயர்ந்த குடிக்குரியவராவார்.” என்றார் நமசிவாயம் சுவாமிகள்”

***இறப்ப எமக்கீ திழிவரவென்று எண்ணார்,***
***பிறப்பிற் சிறியாரைச் சென்று – பிறப்பினால்***
***சாலவும் மிக்கவர் சார்ந்தடைந்து வாழ்பவே***
***தால வடைக்கலமே போன்று.***

அடைமானம் வைத்த நிலம் தனது பெருமைகளை இழந்து விடும். அதுபோலச் சான்றோர், கீழானவர்களுடன் சேர்ந்து வாழ்ந்தால் அவர்களது குடிப்பண்பு ஒளியிழந்த விடும். **“தால அடைக்கலமே போன்று”** என்பது பழமொழி.

26 “அன்பானவர்களே, அழுக்குப்பட்ட மாணிக்கம் தனது பெறுமதியை ஒரு போதும் இழக்காது. அதுபோலச் சான்றோர்கள் கீழ் மக்களோடு கூடிப்பழகினாலும் அவர்களது கீழான குணங்கள் அவர்கள் மீது படியாது. சான்றோரின் சிறப்பு என்று கூறப்படுவது அவர்களின் குணங்களின் சிறப்பே தவிர அவர்களது செல்வச் செழிப்பல்ல. அத்துடன் சான்றோரது பெரும் ஆற்றல் அடக்கமே ஆகும். அவர்கள் எந்தவொரு நிலையிலும் தன்நிலை இழக்க மாட்டார்கள். பகைவரையும் நண்பராகக் கருதுவர் ; எளியவர்களை இகழாது தன்னைப் போல நேசிப்பர் ; கீழோரையும் வெறுக்காது

தன்னோடு சேர்த்துக் கொள்வர்; தமக்குத் துன்பம் செய்தவரையும் தண்டிக்காது அவர்களது அறியாமையை எண்ணி வருந்துவர்.”

“பூங்காவனத்தில் ஒரு யானை வாழ்ந்து வந்தது. அது பெரும் தன்மை வாய்ந்தது. எந்தப் பிராணிகளுக்கும் தீமை செய்யாதது. அதனால் அக்காட்டில் வாழும் மிருகங்கள் பல அதனுடன் நட்புப் பூண்டிருந்தன. யானையுடன் ஒரு பன்றி சேர்ந்திருந்தது. அது தினமும் சேற்றுள் மூழ்கிக் குளித்து விட்டு சேறு பூசியபடி வரும். அதைக் கண்டதும் மற்றைய மிருகங்களெல்லாம் மூக்கைப் பிடித்துக் கொண்டு காட்டின் மற்றப் பகுதிக்குச் சென்று விடும். எனினும் யானை அதை அன்புடன் வரவேற்கும். பன்றி சில சமயம் தனது உடலை உலுப்பும். அப்பொழுது அதன் உடலில் படிந்திருக்கும் சேறுகள் சிதறி யானையின் மீது படும். அதைக் கண்ட பன்றி ஓடி வந்து யானையின் உடலில் உள்ள சேற்றைத் துடைக்கும். அப்பொழுது பன்றியில் படிந்திருக்கும் சேறு யானையின் உடலில் பூசப்படும். எனினும் யானை கோபம் கொள்ளாது, குளத்திற்குச் சென்று குளிக்கும்.”

“அன்று பன்றி இறந்து அழுகிய ஒரு விலங்கின் உடலை வயிறாற உண்டு விட்டு யானையிடம் வந்தது. அப்பொழுது யானையின் அருகே மான், மரை, குதிரை, பசு, முயல் போன்ற மிருகங்கள் நின்றன. பன்றி வந்ததும் சகிக்க முடியாத நாற்றம் அதிலிருந்து வீசியது. பன்றியின் செயல்களைப் பொறுக்கும் யானைக்குப் பன்றியில் இருந்து வீசிய நாற்றம் வயிற்றைப்

புரட்டியது. அதனால் யானை சொன்னது ; "பன்றியாரே, நீர் இங்கே ஓய்வெடும் நான் குளித்து விட்டு வருகிறேன்" என்று கூறிவிட்டு அப்பாற் சென்றது".

"நாலைந்து தினங்களுக்கு முன் காட்டெருமை ஒன்று இறந்து விட்டது. அதன் அழுகிய உடலைப் பன்றி தின்றதை நான் கண்டேன்" என்று கூறியது முயல்".

"யானை நண்பா, உங்கள் செயல் எமக்குப் பிடிப்பதில்லை. அசிங்கமான பிராணியான பன்றியை நீங்கள் சேர்த்து வைத்திருப்பது ஏன்..? அதனால் உங்களுக்கேதாவது இலாபம் இருக்கிறதா..? எங்களால் அதைப் பார்க்கச் சகிக்க முடியவில்லை. உங்களுக்குப் பழக்கமாகி விட்டது. சிலகாலம் செல்ல நீங்களும் பன்றியாகி விடுவீர்கள்" என்றது மான்."

"யானை மானைப் பார்த்துச் சொன்னது ; "மானே, நீ தவறாக நினைக்கிறாய். கடவுளின் படைப்பில் பல்வேறு குணாம்சமுள்ள பிராணிகள் உண்டு. சில குறைபாடுள்ளவை. அதற்காக அவற்றை நாம் கேவலப்படுத்தக் கூடாது. இழிந்தவர்ளைப் பரிகசித்து ஒதுக்குவது சான்றோரது குணமல்ல. அவர்களைத் திருத்துதல் வேண்டும். பன்றி திருந்தாது. அதன் குணம் அது. அதற்காக எனது குணத்தை நான் மாற்றலாமா..? பாவம் பன்றி. நீங்கள் எல்லோரும் வெறுப்பதால் என்னை வந்து தஞ்சமடைந்திருக்கிறது. அதற்காக அதை நான் ஏற்று

வைத்துள்ளேன். அதை விலகிச் செல்லுமாறு உங்களைப் போல் என்னால் சொல்ல முடியவில்லை. அதற்காக நான் அதன் குறைகளைப் பின்பற்ற மாட்டேன். மாணிக்கக்கல் அழுக்கடைந்தால் கழுவியதும் அழுக்குப் போய்விடும். குப்பைக்குள் இருந்தாலும் குண்டுமணி குறைவடையாது. பன்றி என்னுடலில் சேறு பூசினால்; குளித்து அதைத் துப்பரவாக்குவேனே தவிர என்னை நாடி வந்தவர்களை அவமதிக்க மாட்டேன்." என்றது. ஆகையால் அன்பானவர்களே, பெரியவர்களைப் போலக் கீழ்மக்களோடு நட்பு வைத்திருங்கள். ஒரு போதும் அவர்களின் பலவீனங்களைச் சுட்டிக் காட்டாதீர்கள்" என்றார் நமசிவாயம் சுவாமிகள்.

***நீறூர்ந்தும் ஒட்டா நிகரில் மணியேபோல்***
***வேறாகத் தோன்றும் விளக்கம் உடைத்தாகித்***
***தாறாப் படினும் தலைமகன் தன்னொளி***
***நூறா யிரவர்க்கு நேர்.***

அழுக்குப் படிந்தாலும் மாணிக்கம் பெறுமதி குறைவதில்லை. அழுக்கு அதன் மேல் படியாது. படிந்தால் தட்டியதும் போய்விடும். அதுபோலச் சான்றோர் கீழ்மக்களோடு சேர்ந்திருருந்தாலும் தம் பெருமையை இழக்க மாட்டார். **"தாறாப் படினும் தலைமகன் தன்னொளி நூறாயிரவர்க்கு நேர்"** என்பது பழமொழி.

**27** "அன்பானவர்களே, கொடுமைகள் செய்பவர்களைப் பொறுத்துக் கொள்வதைச் சால்பு என்று சொல்லப்படும். ஒருவர் எமக்குத் தீமை செய்தால், பதிலுக்குத் தீமை செய்வது நன்மை

பயக்காது. அது பகையைத் தான் வளர்க்கும். தமக்குத் துன்பம் செய்பவர்களுக்கும் நன்மை செய்வதே சான்றோரின் குணம். அதனால் தீமை ஒழியும். பகை அற்றுப்போம். பெருமைக்குரிய குணங்களைக் கொண்ட சான்றோரின் மனதில் பகை, பழிவாங்கும் நோக்கம், சினம் ஆகியவை இருக்க மாட்டாது. வாழ்க்கை என்பது துன்பமானது என்பதை உணர்ந்த சான்றோர் தம் உடலுக்கு ஏற்படும் துன்பத்தை ஒரு போதும் துன்பமாகக் கருத மாட்டார்கள்"

"பூங்காவனத்தில் வாழ்ந்த பன்றி சேற்றில் குளித்து விட்டுப் புற்றரையில் உருளும். அதனால் புற்களில் துர்நாற்றம் வீசும்.அதனால் மற்றைய மிருகங்கள் அப்புல்லை மேய முடியாது அல்லற்படும். இது பற்றி மிருகங்கள் பன்றிக்கும் யானைக்கும் கூறின. யானையாலும் பன்றி உருண்ட இடத்தில் உள்ள புல்லை உண்ண முடியவில்லை. அதனால் அது இலை, குழைகளைப் பறித்து உண்ணும். பன்றிக்குப் பலமுறை எடுத்துச் சொல்லியும் அது தனது பழக்கத்தை மாற்ற முடியாது கஷ்டப்பட்டது. புல்லை மேய முடியாத மிருகங்கள் மானின் தலைமையில் சென்று சிங்கத்திடம் முறையிட்டன. யானை தான் பன்றியை அவ்வாறு செய்யுமாறு தூண்டுகிறது" என்றும் சொன்னன."

"சிங்கம் யானையை அழைத்து விசாரித்தது. யானை சொன்னது; "மகாராசா, நான் அப்படிப் பன்றிக்குச் சொல்லவில்லை. அது பன்றியின் குணம். பன்றி மற்றைய மிருகங்களைப் போல

என்னுடன் நட்பாக இருக்கிறதே தவிர பன்றிக்கும் எனக்கும் தொடர்பில்லை” என்றது”.

“அது தான் உண்மை என்று சிங்கம் உணர்ந்த போதும் மற்றைய மிருகங்கள் சென்றபின் மான் தனித்து நின்று சொன்ன வார்த்தைகள் அதன் காதில் ஒலித்தன; “இராசாவே, உங்களை யானை மதிப்பதில்லை. தான் தான் பலசாலி என்கிறது. அதற்குக் காட்டுக்கு ராசாவாகத் தான் வரவேண்டும் என்ற எண்ணம் உள்ளது” சிங்கம் சந்தேகப் பிராணி. அதனால் அது மானின் பேச்சை நம்பியது; “உனக்குத் திமிர் அதிகம். இனி இப்படி ஒரு புகார் வந்தால் உன்னைக் கொன்று தின்றுவிடுவேன். உனக்குப் பாடம் கற்பிக்க வேண்டும். நீ செய்த குற்றத்திற்கு ஐந்து நாள்ச் சிறைத்தண்டனை விதிக்கிறேன். ஐந்து நாட்களும் உனக்கு உணவு வழக்கப்பட மாட்டாது” என்றது”

“பாவம் யானை. ஐந்து நாட்கள் சிறைத்தண்டனை அனுபவித்து விட்டு வந்தது. பன்றி வந்து அதைப் பார்த்து அழுதது ; “ என்னால் தான் நீங்கள் தண்டனை அனுபவித்தீர்கள். இனிமேல் நான் சேற்றில் குளித்து விட்டுப் புற்தரையில் உருளமாட்டேன்” என்று கூறியது. அதன் பின் முயல் வந்து மானின் போக்குப் பற்றிக் கூறிக் கவலைப்பட்டது.”

‘சில தினங்களுக்குப் பின் மான் மேய்ந்து கொண்டிருக்கும் போது ஐந்து ஓநாய்கள் அதைச் சுற்றிவளைத்தன. மான் தான்

கொல்லப்படுவேன் என நினைத்து மனங் கலங்கியது. அப்பொழுது அவ்வழியால் வந்த யானை ஓநாய்களைத் தனது தும்பிக்கையால் தூக்கி வீசியது. ஓநாய்களெல்லாம் தப்பினால் போதும் என்று நினைத்து ஓடி விட்டன. யானை தன்போக்கில் நடந்து சென்றது. அப்போது அங்கே மிருகங்கள் யாவும் கூடி விட்டன.

"மானுக்கு அவமானமாக இருந்தது. பன்றி சேற்றில் குளித்து விட்டு உருள்வதை எல்லா மிருகங்களும் கண்டித்தும் அது திருந்தவில்லை. அதற்காக நான் யானையைக் குறை கூறியதால் அது ஐந்து தினங்கள் சிறைவாகசம் அனுபவித்தது. அதை நினைக்க மானுக்கு வெட்கமாக இருந்தது. அது யானையின் அருகே வந்து கண்கலங்கியபடி நின்றது."

"யானை சொன்னது; உடலெடுத்த உயிர்கள் அனைத்துக்கும் உதவிகள் செய்தல் வேண்டும். அது பகைவராக இருந்தாலென்ன, நண்பராக இருந்தாலென்ன. மான் ஓநாய்களிடம் சிக்கித்தவித்தது. நானில்லாவிட்டால் ஓநாய்கள் மானைக் கொன்று தின்றிருக்கும். கடவுள் புண்ணியத்தால் தற்செயலாக நான் அவ்விடம் வந்தேன். அதனால் காப்பாற்றினேன். இது ஒவ்வொரு உயிர்களினதும் கடமை. அதைத்தான் நான் செய்தேன்" என்றது. ஆகையால் அன்பானவர்களே, தீமை செய்பவர்களுக்கும் நன்மை செய்யுங்கள். அது தான் நீங்கள் பிறந்ததற்கான காரணம்" என்றார் நமசிவாயம் சுவாமிகள்.

***கறுத்தாற்றித் தம்மைக் கடிய செய்தாரைப்***
***பொறுத்தாற்றிச் சேறல் புகழால் - ஒறுத்தாற்றின்,***
***வானோங்கு மால்வரை வெற்ப! பயனின்றே***
***தானோன் றிடவரும் சால்பு.***

தீமை செய்பவர்களுக்கும் நன்மை செய்வதே சால்பு. அது புகழைத் தரும். “**தான் தோன்றிட வரும் சால்பு”** என்பது பழமொழி.

**28** “அன்பானவர்களே, சான்றோர்கள் தகாத செயல்களைச் செய்ய வெட்கப்படுவார்கள். இவ்வியல்பு சான்றோருக்கு மட்டுமேயுள்ள தனித்தன்மையாகும். பரந்துபட்ட இவ்வுலகம் முழுவதும் கிடைத்தாலும் சான்றோர் பழியான செயல்களைச் செய்ய நாணப்படுவர். இத்தகைய பெரியவர்களது ஒழுக்கத்தை உணர்ந்து கொள்ளாமல் எந்தவித குறையுமில்லாத சிறியவர்கள், தமக்கு அவர் இணையானவர் என்று எண்ணி அவர்களைப் பற்றித் தரக்குறைவாகப் பேசினாலும் சான்றோரின் புகழில் களங்கம் ஏற்படமாட்டாது. அது சந்திரனைப் பார்த்து அறியாமையால் நாய் குரைப்பதைப் போன்றதொரு செயலாகவே பெரியோரால் கணிக்கப்படும்.”

“பூங்காவனத்தில் வாழ்ந்த யானை எல்லா மிருகங்களுக்கும் உதவி செய்யும். தனக்குத் தீங்கிழைத்த மானின் உயிரைக் காப்பாற்றியதால் மானின் விரோதிகளான எருமையும், முயலும் காட்டெருதும் யானையைத் தமக்கிணையான தென்றெண்ணி வாய்க்கு வந்தபடியெலலாம் பேசித்திரிந்தன.”

“தன்னைக் கொல்ல நினைத்துச் சிங்கத்திடம் இல்லாது பொல்லாததுகளை எல்லாம் கூறிச் சதி செய்த மானை ஏன் யானை காப்பாற்ற வேண்டும். யானைக்குப் புகழில் ஆசை. அதனால் தான் பெரியவன் என்று எல்லோருக்கும் காட்டுவதற்காகவே மானைக் காப்பாற்றியது.” என்றது எருமை”

“யானைக்குத் தான் அரசனாக வேண்டுமென்று ஆசை. அதற்கு மான் இடைஞ்சலாக இருந்தது. இங்கு நடைபெறும் விடயங்களை அது சிங்கதிற்குச் சொல்வதால், மானுடன் நட்புக் கொள்ளவே யானை மானைக் காப்பாற்றியது. தனக்கு இலாபமில்லாமல் தனக்குத் துரோகம், அதுவும் மரணம் வரும் படியான துரோகம் செய்த மானைக் காப்பாற்றியதில் தந்திரம் உள்ளது” என்றது முயல்”

“நீ சொல்வது சரி. மானின் சொல்லைக் கேட்டுச் சிங்கம், யானையை ஐந்து நாட்கள் சிறையில் அடைத்து உணவின்றி வைத்திருந்தது. அதை யாராவது மறப்பார்களா? எல்லாம் போலி வேஷம். உள்நோக்கம் இல்லாமல் எதுவும் நடக்காது. யானையின் நோக்கம் நாட்செல்ல விளங்கும்” என்றது காட்டுமாடு.”

“இவற்றைக் கேட்ட பன்றி, மனவருத்தத்துடன் அவற்றை யானைக்குச் சொன்னது. யானை அதை ஒரு பொருட்டாக மதிக்காமல் சொன்னது ; “நண்பா, சிலர் எதைச் செய்தாலும் குறை சொல்வார்கள். ஒவ்வொருவரும் தம்மைப் போலவே மற்றவர்களும்

இருப்பார்கள் என்று எண்ணுவார்கள். இது அவர்களின் தவறல்ல அவர்களது குடிப்பிறப்பிற்குரிய குணம். சந்திரனைப் பார்த்து நாய் குரைத்துக் கொண்டிருந்ததால், நாயை வளர்ப்பவன் தன்னைக் குழப்புவதாக எண்ணி அதைத் தண்டிப்பான்.இது நாயின் அறியாமையைக் குறிக்குமே தவிர சந்திரனுக்கு எந்தப் பாதிப்பையும் ஏற்படுத்தாது. எனது குணம் உனக்குத் தெரியும். ஒருவன் கொள்கை தவறினால், அவனது குலப் பெருமை கெடும். ஆனால் நாணம் தவறினால் அது அவர்களுக்கு வரவிருக்கும் நன்மைகள் அனைத்தையும் கெடுக்கும். தகாத செயல்களைச் செய்ய வெட்கப்படுவதே நாணம். அந்த நாணத்தை உயிர்களெல்லாம் தம் உயிரைப் போலப் போற்ற வேண்டும். நாணத்தைத் தமக்குரிய பண்பாகக் கொண்டவர்கள், நாணத்தைக்காக்க உயிரை விடுவார்களே தவிர உயிரைக் காப்பதற்காக நாணத்தைக் கைவிடமாட்டார்கள்." என்றது யானை."

"யானை அப்படிச் சொன்ன பின்பும் பன்றியின் மனம் ஆறுதலடையவில்லை.அதனால்அன்பானவர்களே,
சான்றோர்களைப் பற்றிக் கதைக்கும் போது மிகவும் எச்சரிக்கையாக இருங்கள். அவர்களைப் பற்றித் தவறாகக் கதைத்தால் உங்களுக்குத் தான் தீமை வரும்" என்றார் நமசிவாயம் சுவாமிகள்.

***நெறியால் உணராது நீர்மையும் இன்றிச்***
***சிறியார், எளியரால் என்று – பெரியாரைத்***
***தங்கள் நேர் வைத்துத் தகவல்ல கூறுதல்,***
***திங்களை நாய்குறைத் தற்று.***

நாய் குரைப்பதால் சந்திரனது பெருமை ஒரு போதும் குறைவடைய மாட்டாது. அது போலப் பெரியவர்களைப் பழிக்கும் சிறியவர்களே அவமானமடைவர். **“திங்களை நாய் குறைத்தற்று”** என்பது பழமொழி.

29 “அன்பானவர்களே, செல்வம் உலகில் உள்ள எல்லோரிடமும் உள்ளது. குறிப்பாக எத்தனையோ தீயவர்களிடம் செல்வம் குவிந்திருக்கிறது. ஒருவர் புண்ணியமுடையவரானால் அரிய விலை மதிப்பில்லாப் பொருட்கள் யாவும் அவரைத் தேடி வரும். அவர் இடம் மாறி இருந்தாலும் சரி, கொலை முதலிய பஞ்சமா பாதகங்களைச் செய்தாலும் சரி ஊழின் காரணத்தால் வரவேண்டிய பொருட்களெல்லாம் வந்து சேரும். அதைத் தடுக்க யாராலும் இயலாது. இது போல நல்ல சான்றோராக இருந்து தான தர்மங்கள் செய்தாலும் கூட ஊழில்லாவிட்டால் அவரிடம் செல்வம் வந்து சேராது. ஆனால் குணம் அப்படியானதல்ல. குணம் விதிப்பயனால் வந்தமையாது. அது குடிப்பிறப்பால் வருவது. நல்ல குணங்களும், பொருள் சேரவேண்டும் என்ற ஊழும் இருந்தால் அவன் சகல சௌபாக்கியங்களும் பெற்றவனாகி ஊருக்கு நல்லவற்றைச் செய்வான்.”

“நாவலூரில் சிவசுந்தரம் என்றொரு தீயவன் இருந்தான். அவன் மிருகங்களைக் கொன்று அதன் மாமிசத்தை விற்பவன். அத்துடன் மதுபான வகைகளையும் விற்பவன். அவனிடம் அளவுக்கதிகமான செல்வம் இருந்தது. ஒரு நாள் அவன்

பட்டணத்திற்குச் சென்று வரும்போது ஓர் அதிஷ்ட இலாபச் சீட்டை வாங்கினான். சில தினங்களில் அவனுக்குப் பல இலட்ச ரூபா பரிசாகக் கிடைத்தது. அவன் தான தர்மம் செய்ய மாட்டான். வட்டிக்குப் பணம் கொடுக்கும் போது அறா வட்டிக்கே பணம் கொடுப்பான். பொருள் தேவைப்படும் வறியவர்கள் அவனிடம் ஆபரணங்களையும் நிலங்களையும் அடைமானமாகக் கொடுத்துப் பணம் பெறுவர்".

"அவனிடம் பணம் பெறுபவர்களுள் பலர் பொருட்களை மீட்பதில்லை. அந்த ஊரில் வாழ்ந்த மூர்த்தி என்பவரின் மகளுக்குத் திருமணம் நிட்சயமானது. அப்போது மூர்த்தியிடம் பணம் இருக்கவில்லை. அவர் சிவசுந்தரத்திடம் தனது நிலத்தை அடமானம் வைத்து இரண்டு இலட்சரூபா பணம் பெற்றார். இரண்டு மாதங்களின் பின் அவர் வாங்கிய பணத்தையும் வட்டிக்காசையும் கொண்டு சென்றார். சிவசுந்தரம் அவர் இரண்டரை இலட்ச ரூபாபெற்றதாகக் கையொப்பம் வாங்கியிருந்தான். மூர்த்தி பதறிப் போனானர். இருப்பினும் தான் வாங்காத பணத்தையும் அதன் வட்டிக் காசையும் கொடுத்து விட்டுக் காணி உறுதியைப் பெற்றுக் கொண்டார். அன்பானவர்களே, செல்வம் தீயவரிடத்திலும் செல்லும். ஆனால் குணம் நல்லவரிடத்தில் தான் இருக்கும். செல்வந்தர்கள் நல்ல மனதுடன் நடத்தல் வேண்டும். இல்லாவிட்டால் வந்த பணம் வந்தது போலச் சென்று விட்டால், அதனால் வந்த தீமைகளைத் தாங்க முடியாது. அயலவர்களும் உதவி செய்ய மாட்டார்கள். உறவினர்களும் உதவி செய்ய மாட்டார்கள். நல்ல

குணமுள்ளவர்கள் வறியவர்களானாலும் பலரும் உதவி செய்வார்கள். அதனால் அன்பானவர்களே, தீயவர்களிடம் இருக்கும் செல்வத்தைப் பெரிதென மதித்து நடவாதீர்கள்." என்றார் நமசிவாயம் சுவாமிகள்.

*அருவிலை மாண்கலனும் ஆன்ற பொருளும்*
*திருவுடைய ராயின் திரிந்தும் வருமால்*
*பெருவரை நாட! பிரிவின் றதனால்*
*திருவினும் திட்பம் பெறும்.*

செல்வம் ஊழ்வினைப் பயன்படி தீயவரிடமும் செல்லும். ஆகையால் செல்வமுள்ளோர் தீய செயல்களைச் செய்யாது நல்லவற்றைச் செய்தல் வேண்டும். **"திருவினும் திட்பம் பெறும்"** என்பது பழமொழி.

**30** "அன்பானவர்களே, ஒரு பொருளாய் மதிக்கத்தகாதவர் – களையும் மதிப்பு மிக்கவராக்குவது செல்வம். எல்லா நன்மைகளும் இருந்தாலும் பொருள் இல்லாதவரை யாரும் மதிக்க மாட்டார்கள். பெற்ற தாய் கூடப் பொருள் இல்லாத பிள்ளையை மதிக்க மாட்டாள் என்று பெரியவர்கள் கூறியிருக்கிறார்கள். பொருள் என்ற செல்வம் எண்ணியவற்றை எல்லாம் எண்ணியவாறு செய்விக்கும் வல்லமை உடையது. அத்துடன் பகைவரின் செருக்கையும் அடக்கும் வல்லமை செல்வத்திற்கே உண்டு. ஒருவரிடம் அளவுக்கதிகமாகச் செல்வம் இருந்தால், அது எல்லோரையும் மதிக்கப் பண்ணும் ; போற்றப் பண்ணும் ; புகழப்பண்ணும். பொருளுள்ளவன் தீயவனானாலும்

பொருளில் உள்ள பற்று அத்தீமைகளையெல்லாம் மறைத்து அவனைப் பெரியவனாக்கும்.

“நாவலூரில் சின்னமணி என்றொரு பெரியவர் இருந்தார். அவர் கல்வி அறிவில்லாதவர். தனக்குப் புகழ்வர வேண்டும் என்பதற்காக அவர் பொருட்களைக் கொடுப்பார். அவரது பலவீனத்தைப் புரிந்து கொண்டவர்கள் அவரிடம் சென்று அவரை வணங்கி அவரைப் புகழ்வார்கள். அந்தப் புகழுக்காக அவர் இரப்பவர்கள் கேட்கும் பொருட்களை எல்லாம் கொடுப்பார். புகழாதவர்களுக்கு எதுவும் கொடுக்க மாட்டார். அவரது இயல்பை உணர்ந்த அவ்வூர்ப் பாடசாலையின் அதிபர், அவரை அணுகி அவரைப் புகழ்ந்து பேசி அவரைத் தனது பாடசாலையின் பரிசளிப்பு விழாவுக்கு விருந்தினராக வரும்படி கேட்டார். நகரத்தில் பெரிய பாடசாலையான அப்பாடசாலைக்குச் செல்வதைப் பெரும்பேறாகக் கருதிய சின்னமணி ஒப்புக் கொண்டார்”

“பரிசளிப்புவிழாவன்று சின்னமணிபட்டுப் பீதாம்பரமணிந்து பாடசாலைக்குச் சென்றார். பாடசாலைக்கு முன்பு ஒரு பிள்ளையார் ஆலயம் இருந்தது. அதில் அவரின் பெயருக்கு அர்ச்சனை செய்து, பொன்னாடை போர்த்தி, மாலைகள் அணிவித்து மேள தாளங்களுடன் பாடசாலைக்கு அவரை அழைத்துச் சென்றனர். பாடசாலையில் அமைக்கப்பட்ட மேடையில் அவரை அமர்த்தி ஊர்ப் பிரமுகர்களும் மாணவர்களும் அவருக்கு மாலைகள் அணிவித்தனர். பின் ஊர்ப்பிரமுகர்கள் அவரைப் புகழ்ந்து பேசினர்.

அதன் பின் அவருக்கு அணியப்பட்ட பொன்னாடை ஒன்று ஏலத்தில் விடப்பட்டது. அதை வாங்கப் பலர் போட்டிபோட்டனர்."

"இறுதியாக அவரைப் பேசுமாறு அதிபர் அழைத்தார். தனக்கு மேடையில் பேசிப் பழக்கமில்லையென்றும், பாடசாலைக்கு ஒரு கட்டிடம் கட்டித் தருவதாகவும் அவர் அறிவித்தார். பின் அவரால் கட்டப்பட்ட கட்டிடத்திற்கு அவரின் நாமம் சூட்டப்பட்டது. ஊரில் அவரைப் புகழாதவர்கள் எவரும் இல்லை. அதைப் பார்த்து விட்டுப் புகழில் ஆசைகொண்ட சிவசுந்தரம் என்ற பெரும் பணக்காரன் அப்பாடசாலை அதிபரிடம் சென்று தானும் ஒரு கட்டிடம் கட்டித் தருவதாகச் சொன்னான். சிவசுந்தரம் பணக்காரனே தவிர நல்லவனல்ல. அவன் மிருகங்களை அறுத்து அதன் மாமிசத்தை விற்பவன். மதுபானம் விற்பவன். அத்துடன் அறா வட்டிக்குப் பணம் கொடுப்பவன். வாங்கிய பணத்தை விடக் கூடுதலான பணம் வாங்கியதாகச் சொல்லி மிரட்டி வாங்குபவன்."

"சிவசுந்தரம் அப்பாடசாலைக்குக் கட்டிடம் ஒன்று கட்டிக் கொடுத்ததும், அப்படபாடசாலை அதிபர் சின்ன மணிக்கு எடுத்த விழாவை விடப் பெரியதொரு விழா எடுத்தார். ஊரவர்கள் எல்லோரும் இது நாள் வரை அவனது தீயகுணங்களைப் பற்றியே ஊரில் உள்ள சந்திகளில் இருந்து பேசினர். அவன் கட்டிடம் கட்டிக் கொடுத்த பின் எடுத்த விழாவில் பேசிய எல்லோரும் அவனை மிகவும் புகழ்ந்து பேசினர். அப்பாடசாலை அதிபர் அவனைக் 'கர்னன்' என்றார். ஆகவே அன்பானவர்களே, ஒருவன் பொருளைத்

தேட வேண்டும். அதுவும் விரைந்து தேட வேண்டும். ஒருவன் தனது செல்வத்தை வைத்துக் கொண்டு செயலாற்றினால் அவன் பல வழிகளில் நன்மையடைவான்; "ஒருவன் தனது செல்வத்தை வைத்துக் கொண்டு செயலாற்றுவதென்பது மலையின் மேலே ஏறி நின்று கொண்டு கீழே நடக்கும் யானைப் போரைப் பார்ப்பது போன்றது" என்று வள்ளுவர் கூறியுள்ளார். ஆகையால் அன்பானவர்களே, பொருளை மிகுதியாக அறவழியில் தேடுங்கள்" என்றார் நமசிவாயம் சுவாமிகள்.

***அருள் உடையாரும் மற்று அல்லாதவரும்***
***பொருள் உடையாரைப் புகழாதவர் இல்லை;***
***பொருபடைக் கண்ணாய், அதுவே திருவுடையார்***
***பண்டம் இருவர் கொளல்.***

செல்வம் நல்லூழால் வந்தமையும். அதனை உடையவர் பெரும் புகழடைவார். அவரின் தன்மை பற்றி கருத்திற் கொள்ள மாட்டார்கள். அவரின் பொருளையே கருத்திற் கொள்வார்கள். அவர் பொருளால் ஒரு நேரத்தில் இரண்டுக்கும் மேற்பட்ட நன்மை அடைவார். "**திருவுடையார் பண்டம் இருவர் கொளல்**" என்பது பழமொழி.

**31** அன்பானவர்களே, அழகிய செந்தாமரை மேல் அமர்ந்திருப்பவரான திருமகளோடாயினும் கூட நெடுநாள் கூடியிருப்பது துன்பத்தையே தரும். ஆகையால் ஒரு தாய் வயிற்றில் பிறந்த சகோதரர்களானாலும் கூட ஒரே இடத்தில் பல நாட்கள் கூடியிருந்தால் பெரும் பெரும் பிரச்சினைகளுக்கு முகங்கொடுக்க

வேண்டி வரும். ஆகையால் ஒரே வீட்டில் இருக்காது வெவ்வேறு வீடுகளில் சிறிது தூரம் விலகியிருத்தல் வேண்டும். விலகி இருப்பதன் மூலம் அன்னியோன்னியம் ஏற்படும். அன்பு அதிகரிக்கும். பாசம் பெருகும் என்று பெரியவர்கள் சொல்லியிருக்கிறார்கள்."

"நாவலூரில் வாழ்ந்த நடேசன் என்பவருக்கு எட்டுப் பிள்ளைகள். அவர்கள் எல்லோரும் திருமணமானவர்கள். அவர்களில் மூவர் நடேசனின் வீட்டுக்குச் சற்றுத் தூரத்தில் தனித்தனி வீட்டில் வாழ்ந்து வந்தனர். மற்ற ஐந்து பிள்ளைகளும் தாயுடனும் தகப்பனுடம் ஒன்றாக வாழ்ந்து வந்தனர். அதனால் குடும்பத்தில் எந்நாளும் பிரச்சினைகள் வந்து கொண்டிருந்தன".

"மூத்த மகனின் மனைவி சுத்த சைவம். அவள் மாமிச வகைகள் உண்பதில்லை. இளைய மகனும் மனைவியும் பிள்ளைகளும் மாமிசக் கறிகள் இல்லாமல் உண்ண மாட்டார்கள். அதனால் இரண்டு குடும்பங்களுக்கிடையிலும் தினமும் பல பிரச்சினைகள் வரும். மாமிச வகை மணத்தால் மூத்த மகனின் மனைவி உணவு உண்ண மாட்டாள். மாமிச வகைகள் மணக்கா விட்டால் இளைய மகனும் மனைவி பிள்ளைகளும் உணவு உண்ண மாட்டார்கள்."

"இரண்டாவது மகனின் மூத்த மகள் க.பொ.த. உயர்தர வகுப்பில் படிக்கிறாள். அவள் பரீட்சைக்காகப் படிக்க உட்கார்ந்தால்

மூத்த மகளின் மகன் தொலைக் காட்சிப் பெட்டியைப் போட்டுப் படம் பார்ப்பான். இளைய மகனின் மகன் அப்படத்தை மாற்றும்படி கேட்பான். அதனால் சண்டை வந்து பரீட்சை எழுதும் பிள்ளை படிக்க முடியாது போய்விடும்.”

“அன்று மூத்த மகன் கடையில் தின்பண்டங்களை வாங்கி வந்து அடுப்படியில் வைத்தான். அதை இளைய மகனின் மனைவியும் மகளும் எடுத்து உண்டு விட்டனர். அதனால் பிரச்சினை உருவானது. இன்னொரு நாள் இளைய மகன் தனது மகளுக்கு அழகான சட்டை ஒன்று வாங்கி வந்தான். அச்சட்டையை இளைய மகன் தனது மகளுக்குப் போட்டு அழகு பார்த்தான். அதைக் கண்ட மூன்றாவது மகனின் மகள் அந்தச் சட்டை தனக்கு வேணும் என்று அடம் பிடித்தாள். அதனால் பெரும் பிரச்சினை உருவானது. ஐந்து பிள்ளைகளும் ஒருவரோடொருவர் பேசுவதில்லை. அவர்களின் சண்டையைப் பார்த்துப் பார்த்து நடேசன் களைத்துப் போனார். தன்னை விட்டுப் பிரிந்திருக்கும் மூன்று பிள்ளைகளாலும் அவருக்கு எந்தவிதமான தொந்தரவுகளும் ஏற்பட்டதில்லை. அவர்கள் மாதத்தில் ஓரிரு தடவைகள் வந்து மிகவும் மகிழ்வுடன் கதைத்து விட்டுச் செல்வார்கள். அவர்கள் மூவரும் அனைவருடனும் ஒற்றுமையாக இருந்தனர். அதைக் கண்ட நடேசன் தன்னுடன் கூட இருக்கும் ஐந்து பிள்ளைகளையும் அழைத்துச் சொன்னார் ; “அன்பு நீங்காமல் இருக்க வேண்டும் என்பதற்காகத் தான் நான் எனது பிள்ளைகள் எல்லோரும் ஓர் இடத்தில் இருக்க வேண்டுமென்று விரும்பினேன். ஆனால் உங்களது போக்கால் இன்று எனது

விருப்பம் நிறைவேறாது போனது. நீங்கள் எல்லோரும் உங்கள் நன்மை கருதிச் சண்டை பிடிக்கிறீர்கள். அதனால் சகோதர ஒற்றுமை நாளுக்கு நாள் குறைந்து வருகிறது. ஒருவன் வறியவனானாலும், அவனுடன் உறவை வைத்திருக்கும் தன்மை சகோதர்களித்தில் இருக்க வேண்டும். அதனால் நீங்கள் பிரிந்து சென்று தனித்தனியாக வாழும் உங்களது மூன்று சகோதரர்களையும் போல வாழுங்கள். கிட்ட இருந்தால் முட்டப் பகை வரும் என்பார்கள். தனித்தனியாக வாழ விரும்பிய உங்களை நான் தான் சேர்ந்து வாழும் படிவற்புறுத்தினேன். இப்போது நீங்கள் பிரிந்து சென்று தனித்தனியே வாழுங்கள்" என்றார்."

"தகப்பனின் விருப்பப்படி ஐந்து பிள்ளைகளும் பிரிந்து சென்று தனித்தனியே வாழத்தொடங்கினர். அதன் பின்பு அவர்களிடையே பிரச்சினைகள், சண்டை சச்சரவுகள் வரவில்லை. ஆகையால் அன்பானவர்களே, நீங்கள் அன்புள்ளவர்களாகவும் ஒற்றுமையுள்ளவர்களாகவும் வாழ வேண்டுமென்று விரும்பினால் தனித்தனியாக வாழுங்கள்" என்றார் நமசிவாயம் சுவாமிகள்.

***கருவினுட் கொண்டு கலந்தாரும் தம்முள்***
***ஒருவழி நீடும் உறைதலோ துன்பம்;***
***பொருகடல் தண்சேர்ப்ப! பூந்தா மரைமேல்***
***திருவோடும் இன்னாது துச்சு***

மிகவும் நெருங்கி நெடுநாள் இருந்தால், சண்டை சச்சரவுகள் அடிக்கடி வரும். அதனால் தள்ளியிருந்து உறவாடுவதே மேலானது. **"திருவோடும் இன்னாது துச்சு"** என்பது பழமொழி.

32 “அன்பானவர்களே, கடலில் குளிக்க விரும்புபவன் கடலில் அடிக்கும் அலைகள் ஓய்ந்த பின் குளிக்கலாம் என்று நினைத்தானேயானால், அவன் வாழ்நாளில் கடலில் குளிக்க முடியாது. கடல் அலை எப்பொழுதும் பொங்கியெழுந்து கொண்டேயிருக்கும். இது போலப் பகையுள்ளவன், பகைவன் பலவீனப்படட்டும் அப்போது தாக்கலாம் என்று நினைத்தால் அவனைத் தாக்கியழிக்க முடியாது. பகைவனைத் தந்திரத்தால் வெல்ல முயல வேண்டும். பகைவனது பலவீனத்தை அறிந்து தந்திரமாக அவனை வெல்ல வேண்டுமே தவிர அவன் பலவீனப்பட்ட பின் வெல்லலாமென்று நினைப்பவன் பலவீனமாகி விடுவான். பகை இருவருக்கிடையில் இருந்தால் போர்க்களத்திற்குச் செல்லாமலே தந்திரத்தால் அவனை வெல்வதுதான் சிறப்பானது.”

“முல்லை வனத்திலே நரி ஒன்று வாழ்ந்து வந்தது. அது மிகவும் செருக்குள்ளது. அதனால் அக்காட்டிலுள்ள மிருகங்கள் யாவும் அதை வெறுத்தன. எதுவும் செய்யா விட்டாலும், நரி பிற மிருகங்களைப் பற்றிச் சிங்கத்திடம் குறை கூறித் தண்டனையைப் பெற்றுக் கொடுத்து வந்தது. அதனால் ஏனைய மிருகங்கள் நரியைக் கண்டாலே பயப்பட்டன. சில மிருகங்கள் பயத்தின் காரணமாக நரியின் பக்கம் சார்ந்து இருந்து நரி செய்யும் கொடுமைகளைத் தாங்கிக் கொண்டிருந்தன.”

“அன்று இரகசியமான ஓர் இடத்தில் எல்லா மிருகங்களம் கூடி நரியைக் கொல்வதெப்படி என்று ஆராய்ந்தன; “நரியைக்

கொல்ல முடியாது. கொன்றால் சிங்கத்தின் தண்டனையைப் பெறவேண்டி வரும்" என்றது ஆடு".

"அதற்காக விட முடியாது. நரி பலவீனமடையும். அப்போது கொல்லலாம்" என்றது பன்றி".

"ஒருவர் பலவீனமடையும் வரை காத்திருந்தால் எமது இனம் அழிந்து விடும். ஏதாவது தந்திரத்தை உபயோகித்தே நரியைக் கொல்ல வேண்டும்" என்றது முயல்".

"நரி தான் தந்திரமுள்ள மிருகம். அப்படியிருக்க நரியை எப்படித் தந்திரமாகக் கொல்வது" என்று கேட்டது எருமை"

" வல்லவனுக்கு வல்லவன் வையகத்தில் உண்டு. யோசித்துப் பாருங்கள்" என்றது முயல்"

"எனக்கென்றால் நரியைக் கொல்ல முடியும் போலத் தோன்றவில்லை. இங்குள்ள யாராவது நரிக்கு நாம் நினைப்பதைச் சொன்னால், நரி சிங்கத்திற்குச் சொல்லி எமக்குத் தண்டனை வாங்கித் தந்து விடும். நான் போகிறேன்" என்று கூறிவிட்டுச் சென்றது எருமை."

"எருமை சென்றதும் ஒவ்வொரு மிருகங்களும் செல்லத் தொடங்கின. அப்போது முயல் கூறியது; "நான் பயப்படவில்லை.

என்னுடன் ஒருவர் உதவிக்கு வந்தால் நான் நரியைக் கொல்வேன்” என்றது”

“பன்றியும் குதிரையும் அதற்குச் சம்மதித்தன. மற்றைய மிருகங்கள் யாவும் பெரு மூச்சு விட்டு விட்டுச் சென்று விட்டன. நீ எப்படிக் கொல்லப் போகிறாய்? திட்டத்தைச் சொல்” என்றது பன்றி”

“எமது காட்டில் வேடனொருவன் மிருகங்களையும் பறவைகளையும் பிடிக்கப் பொறி வைப்பான். நாங்கள் அவதானமாக அதை எடுத்து வந்து நரி உலாவும் இடத்தில் மறைத்து வைப்போம்” என்றது முயல்”

“பன்றியும் முயலும் வேடன் வைத்த பொறியைக் கவனமாகத் தூக்கி வந்து திராட்சைக் கொடிக்கு அருகே மறைத்து வைத்தன. அதன்பின் முயல் நரியிடம் சென்று கூறியது ; “ நண்பா இன்று உன்னைக் கொல்வதற்காக மிருகங்கள் கூட்டம் போட்டன. அவதானமாக இரு.” என்றது”

“அதைக் கேட்ட நரிக்கு பயமாக இருந்தது. அதைக் கண்ட முயல் சொன்னது; “பயப்படாதீர்கள். குதிரையும் பன்றியும் தான் உங்களைக் கொல்ல வேண்டும்” என்றன. ஆனால் மற்றைய மிருகங்கள் உங்களுக்குப் பயந்து சென்று விட்டன. பன்றி தான் மிச்சமாக இருக்கிறது. அதைக் கொன்றால் பிரச்சினை தீர்ந்து விடும். அதற்குத் திராட்சைப் பழமென்றால் உயிர். கொஞ்சம் பறித்துத் தந்தீர்களானால் அலரி விதையுடன் கலந்து பன்றிக்குக்

கொடுக்கிறேன். பன்றி கண்டவற்றையெல்லாம் தின்னும் இயல்புடையது. அது ஆராயாமல் தின்று விடும்” என்றது முயல்”

“நீதான் எனது நண்பன். நான் உனக்குச் சிங்கத்திடம் சொல்லி ஒரு பதவி வாங்கித் தருகிறேன். என்று கூறிவிட்டுத் திராட்சைப் பழம் பறிப்பதற்காகத் திராட்சைக் கொடிக்கருகே சென்றது. அப்போது அது முயல் வைத்த பொறிக்குள் அகப்பட்டுக் கொண்டது. சில மணிநேரத்தின் பின் அது இறந்து விட்டது. ஆகையால் அன்பானவர்களே, பகைவர்களைத் தந்திரத்தால் வெல்லப் பழகிக் கொள்ளங்கள்” என்றார் நமசிவாயம் சுவாமிகள்.”

***வரைபுரை வேழத்த வன்பகையென் றஞ்சா***
***உரையுடை மன்னருள் புக்காங்கு அவையுள்***
***நிரையுரைத்துப் போகாதொன் றாற்த் துணிக***
***திரையவித்து ஆடார் கடல்.***

பகைவர்கள் பலவீனப்பட்ட பின்ப வெல்வோம் என்று இராது தந்திரத்தால் வெல்வதே சிறப்பானது. **“திரையவியத்து ஆடார் கடல்”** என்பது பழமொழி.

**33** “அன்பானவர்களே, சான்றோரோடு கீழ் மக்கள் சேர்ந்திருந்தாலும், யாரும் கீழ்மக்களை மதிக்க மாட்டார்கள். குணங்கள் மதிக்கப்படுகின்றனவே தவிர சேர்ந்திருப்பவர்களின் தன்மை மதிக்கப்படுவதில்லை. தங்க ஆபரணங்களைப் பாதுகாப்பாகச் சேர்த்து வைத்திருக்கத் துணியாலான பை பாவிக்கப்படுகிறது. ஆபரணங்களின் பெறுமதிக்குத் துணிப்பையை

விற்க முடியாது. அது போல ஆபரணங்களின் மதிப்புத் துணிப்பைக்குக் கொடுக்கப்படுவதில்லை. எம்மிற் பலர் உயர்ந்தவர்களுடன் சேர்ந்திருந்தால், தாமும் மதிக்கப்படுவோம் என நினைக்கிறார்கள். அது தவறு. சர்கரையைச் சேர்த்தாலும் மணலை யாரும் உண்ண மாட்டார்கள். பெரியோருடன் சேர்ந்தாலும் சிறியோர் சிறுமையுள்ளவராகவே இருப்பர். சர்க்கரையோடு சேர்ந்த மணலையும், அரிசியோடு சேர்ந்த உமியையும், நெல்லையும் கல்லையும் நீக்கி விட்டுத்தான் உண்பர். இதை ஞாபகத்தில் வைத்திருங்கள்.”

“முருகவனத்திலே ஒரு யானை வசித்து வந்தது. அது மற்றைய மிருகங்கின் மீது அன்பு செலுத்தி வந்தது. மான் மிருகங்களுக்குத் தேவையான உதவிகளைச் செய்து வந்தது. இரக்கத் தன்மை வாய்ந்தது. அதனால் அது மற்றைய மிருகங்கள் பாதிக்கப்பட்டால் உதவிவந்தது. அது காலையில் கங்கையில் நீராடி விட்டு தாமரை, அல்லி, முல்லை, மல்லிகை போன்ற பூக்களைப் பறித்து வந்து காட்டில் உள்ள சிவன் கோயிற் குருக்களிடம் கொடுக்கும். குருக்கள் யானைக்குத் திருநீறு பூசி சந்தணப் பொட்டும் வைத்து விடுவார். இது தினமும் நடைபெறும் நிகழ்வு.”

“காட்டில் எந்த மிருகங்களும் பன்றியை அண்டுவதில்லை. ஆனால் யானை அதன் மீது அன்பு வைத்திருந்தது. யானை குளிக்கப் போகும். யானை கங்கை நதியில் குளிக்கும். பன்றி நீர் தேங்கியுள்ள குட்டைகளைக் கலக்கிக் குளிக்கும். பின் யானையைப்

போல பூக்களைப் பறித்துக் கொண்டு வரும். சிவன்கோயிற் குருக்கள் பன்றியைக் கண்டதும். மூக்கைப் பொத்திக் கொள்வார். யானையிடமிருந்து பூக்களைப் பெறும் அவர் பன்றியை விரட்டுவார்."

"காட்டில் வாழும் மானின் கன்றுக்கு மிகவும் விமர்சையாக யானையின் தலைமயில் திருமணம் நடந்தது. மிருகங்களெல்லாம் கூடி நின்றன. வாசலில் வரவேற்பாளராக நின்ற இன்னொரு மான் பன்றியைக் கண்டதும் சொன்னது ; "உனக்கு நாம் அழைப்பிதழ் தரவில்லை. அதனால் பிறபக்கமாகச் சென்று சாப்பிட்டு விட்டுப் போ" என்றது. பன்றி அவமானத்துடன் திரும்பிச் சென்றது. ஆதலால் அன்பானவர்களே, உயர்ந்தவர்களுடன் நட்புக் கொண்டோர் உயர்ந்தவரைப் போலக் குணமுடையவராக இல்லாவிட்டால், அவர்கள் மதிக்கப்பட மாட்டார்கள். எனவே உயர்ந்த குணங்களைக் கற்றுக் கொள்ளுங்கள்" என்றார் நமசிவாயம் சுவாமிகள்.

***தக்காரோ ஒன்றித் தமராய் ஒழுகினார்***
***மிக்காரா லென்று சிறியாரைத் தாம்தேறார்***
***கொக்கார் வளவய லூரர! தினலாமோ***
***அக்காரம் சேர்ந்த மணல்.***

பெரியவர்களோடு தொடர்புடையவர்களானாலும், சிறியோர் சிறுமை உடையவர்களாவே இருப்பர். அவரை யாரும் மதிக்க மாட்டார்கள். "**தினலாமோ அக்காரம் சேர்ந்த மணல்**" என்பது பழமொழி.

34

"அன்பானவர்களே, துன்பம் வந்த காலத்திலும் தமது தகுதியைப் பாராது உதவி செய்வோரைப் பழிக்கும் குணம் மக்களுக்கு உண்டு. காத்தற் கடவுளான கிருஷ்ணர் பசுக் கூட்டங்கள் மழையால் துன்பப்பட்ட போது கோவர்த்தன கிரி என்ற மலையைத் தூக்கிக் குடையாகப் பிடித்துப் பசுக் கூட்டத்தைக் காப்பாற்றினார். அதற்காக அவரையும் மாடு மேய்க்கும் இடையன் என்று மக்கள் இழிவாகச் சொல்வார்கள், தேவர்கள், மக்கள் என்று கருதாது எவரையும் இழிவாகப் பேசும் குணம் நாவிற்கு உண்டு."

"முல்லை வனத்தில் சான்றோனாக வாழ்ந்த யானையைக் காட்டில் உள்ள மிருகங்களெல்லாம் மதித்து வந்தன. எனினும் அது பன்றியுடன் கொண்ட நட்புக் காரணமாகக் கேவலமாகவும் கதைத்தன. இருந்த போதும் யானை அவற்றின் கதைகளைப் பொருட்படுத்தாது பன்றியுடன் பழகி வந்தது. பன்றி நிலத்தை உழுது கிடைக்கும் அரிய மூலிகை வகைக் கிழங்குகளைக் கொண்டு வந்து யானைக்குக் கொடுக்கும். அதை யானை வாங்கி வைக்குமே தவிர உண்ணாது. பன்றி மலம் தின்பதால் அதன் உடலெங்கும் மலமும் சேறும் பூசப்பட்டிருக்கும். அந்த நிலையில் பன்றி கொண்டு வரும் கிழங்கு வகைகளை யானை உண்கிறது என்று நினைத்து மற்றைய மிருகங்கள் கேலி செய்யும்."

"அன்று யானை குளித்து விட்டுப் பூக்களைப் பறித்து வந்தது. அதன் பின்னால் பன்றி வந்தது. அதைக் கண்ட குருக்கள் சொன்னார் ; "ஆனைமுகனே, நீ பிள்ளையாரின் வாரிசு. அதனால்

மலம் தின்னும் இப்பன்றியுடன் சேராதே. யானை அதை எதிர்பார்க்க வில்லை. அது பன்றியின் மனம் நோகக் கூடாதென்பதற்காகவே பன்றி கொடுக்கும் கிழங்கு வகைகளைப் பெற்று வந்தது ; அத்துடன் பன்றியுடன் நட்புப் பூண்டு இருந்தது."

"ஒரு நாள் பன்றி வந்து யானைக்குச் சொன்னது ; "நண்பா, நாளைக்கு எனது மகனுக்குத் திருமணம் செய்யவுள்ளேன். உனது தலைமையில் தான் திருமணம் நடக்க வேண்டுமென விரும்புகிறேன்" என்றது. யானைக்குத் தர்ம சங்கடமாக இருந்தது. இருப்பினும் பன்றியின் மனம் நோகக் கூடாதென்பதற்காக ஒத்துக் கொண்டது."

"திருமணத்திற்குப் பன்றியின் வீட்டுக்கு யானை சென்றது. வீடு அலங்கரிக்கப்பட்டிருந்த போதும் அங்கு துர்நாற்றம் வீசியது. திருமணம் நடைபெற்று முடிந்த பின்பு கொடுக்கப்பட்ட உணவைப் பார்க்க யானைக்கு வயிற்றைப் புரட்டியது. அதை உணர்ந்த பன்றி யானைக்குப் பழங்களைக் கொடுத்தது. அப்பழங்களிலும் துர்நாற்றம் வீசியதால் யானை பழங்களைச் சாப்பிடவில்லை."

"யானை திருமணத்திற்குச் சென்றதை மிருகங்கள் பலவாறு கதைத்தன; "பன்றியுடன் சேர்ந்து சேர்ந்து யானையும் பன்றியின் குணத்தைப் பெற்று விட்டது" என்றது முயல்."

‘பன்றியைக் கண்டாலே நாற்றம் சகிக்க முடியவில்லை. யானை எப்படி அதன் வீட்டுக்குச் சென்றது. அத்துடன் அங்கு பன்றி கொடுத்த உணவையும் உண்டு மகிழ்ந்ததாம்” என்றது குதிரை.”

“நாலைந்து நாட்களுக்குத் தான் பிரச்சினை. பழகிவிட்டால் எல்லாம் சரி. இப்ப யானை பன்றியாகிவிட்டது” என்றது எருமை”

‘கோயிற்குருக்களும் யானையைப் பன்றியுடன் சேரவேண்டாம் என்றவராம். அப்படியிருந்தும் யானை ஏன் பன்றியுடன் திரிகிறது. இதில் ஏதோ உள்நோக்கம் இருக்கும்” என்றது மான்.”

“யானை நல்ல குணங்களையுடையது. அதனால் இரக்கப்பட்டு பன்றிக்குதவி செய்கிறது. பன்றியை எல்லோரும் வெறுத்து ஒதுக்குவது சரியில்லை. நல்லவர்களானாலென்ன காடையராய் இருந்தாலென்ன அவர்களைப் பற்றி எலும்பில்லாத நாக்கால் ஒவ்வொருவரும் பலவாறு கதைப்பர். இது உலக இயல்பு. “கண்ணனை இடையனென்றும், நெய் திருடுபவனென்றும் கதைக்கும் மக்கள் யானையைப் பற்றிக் கதைப்பது பெரிதல்ல” என்றது நரி. ஆகவே அன்பானவர்களே, தீங்கானவற்றையே எந்நாளும் பேசி மகிழும் நாவைக் கட்டுப்படுத்துங்கள்” என்றார் நமசிவாயம் சுவாமிகள்.”

***ஆவிற்கு அரும்பணி தாங்கிய மாலையும்***
***கோவிற்குக் கோவலன் என்றுலகம் கூறுமால்;***
***தேவர்க்கு மக்கட்கு எனல் வேண்டா; தீங்குரைக்கும்***
***நாவிற்கு நல்குரவு இல்.***

நாக்கு தேவராயிருந்தாலென்ன மனிதராயிருந்தாலென்ன கூசாது பழிக்கும் தன்மை வாய்ந்தது. **“தீங்குரைக்கும் நாவிற்கு நல்குரவு இல்”** என்பது பழமொழி.

**35** “ அன்பானவர்களே, அறம் உணர்ந்தவராய்த் தன்மை விட மூத்தவராய் உள்ள சான்றோரின் நட்பை அடைதலைப் பெரும் பாக்கியமாகக் கொள்ளல் வேண்டும். சான்றோர்கள் வந்துள்ள துன்பத்தைப் போக்கி, இனித் துன்பம் வராத வண்ணம் தம்மையும், தம்மைச் சேர்ந்தவர்களையும் காப்பார்கள். அப்படியான பெரியவர்களைத் துணையாக்கிக் கொள்பவர்களுக்குத் துன்பம் வந்தால், அதைத் துணையாகக் கொண்ட பெரியவர்கள் தாங்கிக் கொள்வார்கள். இத்தகையவர்களுக்குப் பகைவர்களால் தீமைகளைச் செய்ய முடியாது.”

“முல்லை வனத்தில் வாழ்ந்த யானையைப் பன்றி தனக்குத் துணையென நினைத்துச் சேர்ந்திருந்தது. பன்றி கீழ்த்தரமான முறையில் நடக்கின்ற போது, யானை கண்டித்துத்துத் திருத்தும். அதனால் பன்றி தனது தீயகுணங்களைப் படிப்படியாகக் குறைத்து வந்தது. அது சுத்தமான நீரில் குளித்தது. அசுத்தமான துர்நாற்றம்

வீசும் உணவுகளைத் தின்னாமல் விட்டது. அதனால் அதன் உடலில் இருந்து துர்நாற்றம் வீசுவதில்லை. காட்டில் இருந்த சந்தண மரத்தூள்களை அரைத்து அது உடலெங்கும் பூசியதால் அதன் உடலில் இருந்து நறுமணம் வீசத் தொடங்கியது. அதனால் யானை மகிழ்ந்து அதைத் தனது நண்பனாக ஏற்றுக் கொண்டது".

"யானையும் பன்றியும் நண்பர்களாக இருப்பது மற்றைய மிருகங்களுக்குப் பொறாமையாக இருந்தது. எனினும் யனைக்குப் பயந்து அவை அதை வெளிக்காட்டிக் கொள்வதில்லை. ஆனால் முரட்டுத் தன்மை வாய்ந்த காட்டெருது ஒன்று தேவையில்லாமல் அடிக்கடி பன்றியுடன் முரண்படும். பன்றி எதுவும் பேசாமல் நடந்த சம்பவங்களைப் பற்றி யானைக்குச் சொல்லும். யானை பொறுமை மிக்கது. எல்லா மிருகங்களிலும் அன்புள்ளது. அதனால் அது காட்டெருதுக்குச் சொன்னது ; "நண்பரே, தேவையில்லாது சண்டைக்கிழுக்கும் எதிரியையும் மன்னித்தல் வேண்டும். அவனது பலம் தனக்குச் சமமாக இருந்தால் அல்லதுதனது பலததிலும் பார்க்க அதிகமாக இருந்தால் தான் போரிட வேண்டும். போரிட விரும்பாது விலகிப் போபவனைப் போருக்கு அழைக்கக் கூடாது. பன்றி பாவம். அது பலவீனமான மிருகம். அதனால் அது உன்னைக் கண்டால் விலகிச் செல்கிறது. அதை நீ வாய்ப்பாகக் கருதி அதை மீண்டும் மீண்டும் துன்புறுத்துவது சரியில்லை" என்று கூறியது".

“யானை கோபம் கொள்ளாது புத்திமதிகள் தான் கூறும் என்று நினைத்த காட்டெருது பன்றியைக் கண்டதும் அதைக் கேலி செய்தது. பன்றி எதுவும் பேசாது தனது வழியே சென்றது. அதைக்க ண்ட காட்டெருதுவுக்கு உற்சாகம் பிறந்தது. தனது கொம்புகளால் அதைத் தூக்கி வீசியது. நிலத்தில் விழுந்த பன்றியின் முன்னங்கால் முறிந்து விட்டது. பன்றி நொண்டி நொண்டி நடந்து வருவதைக் கண்ட யானை என்ன நடந்ததென்று விசாரித்தது. பன்றி நடந்த சம்பவத்தை விரிவாகச் சொன்னது. அதைக் கேட்டதும் யானைக்குக் கோபம் வந்தது. யானை காட்டெருதைத் தேடிச் சென்றது. காட்டெருது நன்றாக மேய்ந்து விட்டு உற்சாகத்துடன் ஓடி விளையாடிது. அது யானை வந்ததைக் கவனிகாதது போல விளையாடியது. காட்டெருதின் திமிரைக் கண்ட யானைக்குக் கோபம் அதிகரித்தது. தனது தும்பிக்கையால் காட்டெருதைத் தூக்கி நிலத்தில் அடித்தது. அடியின் வலியால் காட்டெருது மயங்கியது. யானை தன் பாட்டில் சென்று விட்டது.”

“மயங்கிக் கிடந்த காட்டெருதைக் கண்ட மானும், முயலும் அதற்குத் தண்ணீர் தெளித்தன. மயக்கம் தீர்ந்த காட்டெருது வலியால் முனகியது. அதைக் கண்ட முயல் சொன்னது ; “நண்பா, பலமுள்ளவர்களின் நண்பர்களோடும் நாம் அவதானமாகத் தான் பழகுதல் வேண்டும். பன்றி யானையின் நண்பன் என்று தெரிந்தும் நீ அதனுடன் பலமுறை பிரச்சினைப்பட்டாய். யானை உனக்குப் புத்திமதிகள் சொன்னது. அதை நீ கேட்கவில்லை. நீ உறங்கிக் கொண்டிருந்த கரடியை விளையாட்டாக எழுப்பிய தீய நாயின்

கதியை அடைந்துள்ளாய். யானை பலமுள்ளது. அத்துடன் நீதி நியாயம் உள்ளது. அது தெரிந்தும் நீ உனது விசமத் தனத்தால் தண்டனை பெற்றுள்ளாய் . இனியாவது திருந்தி நட" என்றது. ஆகையால் அன்பானவர்களே, பலமுள்ளவனோடு சேர்ந்த பலவீனனும் பலமுள்ளவனாவான் என்பதைத் தெரிந்து கொள்ளுங்கள்" என்றார் நமசிவாயம் சுவாமிகள்."

***பெரியாரைச் சார்ந்தார்மேல் பேதைமை கந்தாச்***
***சிறியார் முரண்டு கொண்டு ஒழுகல் - வெறியொலி***
***கோனாய் இனம்வெரூஉம் வெற்ப! புலம்புகின்***
***தீநாய் எழுப்புமாம் எண்கு.***

தூங்கும் கரடியை எழும்பும் தீய நாய் அழிவது போல, பெரியவரைச் சார்ந்தவர்களைத் தாக்கும் கீழோரும் அழிவர். "**தீ நாய் எழுப்பு மாம் எண்கு**" என்பது பழமொழி.

**36** " அன்பானவர்களே, பிறர் தீமை வரும் என்று செய்ய விரும்பாத காரியங்களும், செல்வமும் நல்வினை உள்ளவர்களுக்கு நன்மையையே தரும். நல்ல ஊழ் உள்ளவனுக்கு நாளும் கிழமையும் இல்லை. அவன் எப்போது எதைச் செய்தாலும், அவன் செய்பவை யாவும் நன்மை தருவனவாகவே இருக்கும். நல்வினை இல்லாதவன் நல்ல நாள்ப் பார்த்து நேரம், பார்த்து கடவுளை வணங்கிக் காரியத்தைத் தொடங்கினாலும், ஊழ்வினை காரணமாக அது நடவாமல் போகலாம். நல்வினை உள்ளவனுக்குத் தொட்டதெல்லாம் பொன்னாகும்".

“கதிரேசன் பெரும் வணிகர். அவரிடம் ஏராளமான கப்பல்கள் நின்றன. திடீரென்று அன்று அவரது முகாமையாளர் நோய்வாய்ப்பட்டார். அதனால் கதிரேசனது வர்த்தக நடவடிக்கைகள் பாதிக்கப்பட்டன. அன்று முகாமையாளர் வியாபார நிமிர்த்தமாக வெளி நாடொன்றுக்குக் கப்பலில் செல்ல வேண்டும். செல்லா விட்டால் பெருந்தொகையான இழப்பீடு வரும். அதனால் உதவி முகாமையாளராக இருந்த அரவிந்தனைச் செல்லுமாறு சொன்னார். அன்று அட்டமி. வியாழக்கிழமை. சோதிடர் எந்த நல்ல காரியங்களையும் வியாழக்கிழமையில் செய்யக் கூடாதென்று அவனுக்குக் கூறியிருந்தார். அதனால் அவன் தனக்குச் சுகமில்லையென்றும் பிரயாணம் செய்ய முடியாதென்றும் சொன்னான். கதிரேசனுக்கு எதுவும் செய்ய முடியவில்லை. தான் தான் போக வேண்டும் என்று நினைத்தார். அப்போது முகாமையாளருக்குத் தொட்டாட்டு வேலை செய்யும் சரவணன் அங்கு வந்து கதிரேசன் படும் அவஸ்தையைக் கண்டு அவரிடம் சென்று சொன்னான் ; “ ஐயா, நான் முகாமையாளருடன் பலமுறை கப்பலில் சென்று காரியம் பார்த்துள்ளேன். அவருடன் கூடச்சென்றமையால் அவர் செய்வதெல்லாம் எனக்குத் தெரியும். நான் சென்று வருகிறேன்” என்றான். கதிரேசன் அதை ஏற்று அவனைக் கப்பலில் அனுப்பினார்.”

“ஒரு மாதத்தின் பின் சரவணன் முதல் வேலை செய்த முகாமையாளர் ஏற்றாத பல பொருட்களை ஏற்றிக் கொண்டு வந்தான். அவன் கொண்டு வந்த பொருட்கள் வழமையை விடக்

கூடுதலான விலைக்கு விற்கப்பட்டதால் கதிரேசனுக்கு அதிக இலாபம் ஏற்பட்டது. அதனால் கதிரேசன் சரவணனை முகாமையாளராக நியமித்தார். அடுத்த முறை அரவிந்தன் கப்பலுக்குப் பொறுப்பாகத் தான் செல்கிறேன் என்றான். ஆனால் கதிரேசன் சம்மதிக்காது சரவணனையே அனுப்பி வைத்தார். அதன் பின் சரவணன் ஒவ்வொரு முறையும் ஒவ்வொரு விதமான பொருட்களை ஏற்றி வந்தான். அத்துடன் கப்பலில் கொண்டு சென்ற பொருட்களையும் அதிக விலைக்கு விற்று வந்தான். நாலைந்து வருடங்களில் கதிரேசனின் வருமானம் முன்பைவிட நாலைந்து மடங்கு அதிகரித்தது."

"கதிரேசனுக்கு அபிராமி என்றொரு மகள் இருந்தாள். அவள் திருமணம் செய்யும் வயதை அடைந்தமையால் கதிரேசன் தனது மகளுக்குச் சரவணனைத் திருமணம் செய்து வைத்தார். அதன் பின் கதிரேசனது வருமானம் மேலும் பெருகியது. ஆகையால் அன்பானவர்களே, ஒருவனுக்கு நல்ல விதியிருந்தால் அவன் செய்வதெல்லாம் பெருகிக் கொண்டே போகும். அரவிந்தன் முகாமையாளருக்கு உதவியாக இப்போதும் இருந்து வருகிறான். சரவணனை மருமகனாக்கிய பின்பு இன்னொருவனைக் கதிரேசன் முகாமையாளராக்கினார். அரவிந்தன் முன்பு அவசரத்திற்கு உதவாமையால் அவருக்கு அரவிந்தனைப் பிடிப்பதில்லை" என்றார் நமசிவாயம் சுவாமிகள்.

***இதுமன்னும் தீதென்று இசைந்ததூஉம் ஆவார்க்கு***
***அதுமன்னும் நல்லதே யாகும் - மதுமன்னும்***
***வீநாறு கானல் விரிதிரைத் தண்சேர்ப்ப!***
***தீநாள் திருவிடையார்க்கு இல்***

நல்ல வினைப்பயன் உள்ளவர்களுக்குத் தீய நாட்களும் நல்லநாட்களாக மாறும். **“தீநாள் திருவிடையார்க்கு இல்”** என்பது பழமொழி.

**37** “அன்பானவர்களே, தீய செயல்களெல்லாம் ஆரம்பத்தில் நன்மையையும் இன்பத்தையும் தரும். ஆனால் செய்த தீமைகள் வருத்தத் தொடங்கினால், பெற்ற நன்மைகளையும் இன்பத்தையும் விடப் பல மடங்கு துன்பத்தையே தரும். ஒரு செயலைச் செய்யு முன் அதனால் வரும் நன்மை தீமைகளை எண்ணிப் பார்த்தல் வேண்டும். அத்துடன் இன்பத்திற்காகத் தீய செயல்கள் எதையும் செய்ய வேண்டுமென்று மனதால் கூட நினைக்கக் கூடாது. தமக்குத் துன்பம் ஏற்படக் கூடாது என்று விரும்புகின்றவர்கள் பிறருக்குத் துன்பமேற்படும் செயல்களைச் செய்ய விரும்பக்கூடாது. ஒருவன் செய்யக்கூடாதவற்றைச் செய்வதும் கேடு, மற்றவன் செய்யக் கூடாதவற்றைச் செய்யும் போது அவனுக்குத் துணையாகப் போவதும் கேடு.”

“நாவலூரில் சுந்தரலிங்கம் என்றொரு வணிகன் இருந்தான். அவனது நண்பன் ஏகாம்பரம். ஏகாம்பரம் ஊரில் சிறு சிறு பொருட்களைக் களவெடுப்பான். அதைச் சுந்தரலிங்கம் கால்

விலை அரை விலைக்கு வாங்கி விற்பான். சுந்தரலிங்கம் வர்த்தக நிலையம் வைத்திருப்பதால்; அவன் பொருட்களைச் சந்தையில் கொள்வனவு செய்கிறான் என ஊரவர்கள் நினைப்பார்கள். இரவில் ஏகாம்பரம் திருடி, விடியு முன் சுந்தரலிங்கத்தின் வியாபார நிலையத்திற்குக் கொண்டு சென்று கொடுத்து விடுவான். அதனால் ஏகாம்பரத்தையும் யாரும் சந்தேகிப்பதில்லை.”

“சுந்தரலிங்கம் மலிவாகப் பொருட்கள் கிடைப்பதால் ஏகாம்பரத்தைத் திருடும்படி உற்சாகப்படுத்துவான். உழைக்காது மிகவும் இலகுவாகப் பொருட்கள் கிடைப்பது ஏகாம்பரத்திற்கு மிக்க மகிழ்ச்சியைக் கொடுத்தது. அதனால் அவன் ஒருமோட்டார் வண்டியை வாங்கினான். அதில் அவன் ஊரைச் சுற்றினான். அத்துடன் வண்டியை வாடகைக்கு விட்டும் பணம் சம்பாதித்தான். திருட்டுப் பொருட்களை மலிவாக வாங்குவதால், சுந்தரலிங்கமும் பெரும் வணிகனானான். அவன் தனது வியாபார நிலையத்தைப் பெருப்பித்தான்.”

“சிறு சிறு களவுகள் எடுத்த சுந்தரலிங்கத்திற்குப் பெருங்களவு எடுக்க ஆசையாக இருந்தது. அதனால் ஒரு நாள் வீட்டுக்காரர் இல்லாத சமயம் வீட்டை உடைத்துப் பெருந்தொகையான ஆபரணங்களைத் திருடினான் ஏகாம்பரம். அவ் ஆபரணங்களைச் சுந்தரலிங்கம் மிகவும் மலிந்த விலையில் வாங்கினான். ஊரில் அடிக்கடி களவு போவதால் மக்கள் உசாரடைந்தனர்.

“ஒரு நாள் பணக்காரனான வேலாயுதம் என்பவன் குடும்பத்துடன் தல யாத்திரை செல்வதாக அறிவித்தான். அவனது நண்பர்கள் அவனது வீட்டில் மறைந்திருந்தனர். அத்துடன் பிரதான வாசலுக்கருகில் பொறியும் வைத்தனர். இரவு திருட வந்த ஏகாம்பரம் பொறிக்குள் தனது காலை வைத்தான். அதனால் அவனது வலது கால் முடமானது. அன்று இரவு மின் ஒழுக்குக் காரணமாக சுந்தரலிங்கத்தின் வியாபார நிலையம் தீப்பற்றி எரிந்தது”.

“ஏகாம்பரம் களவெடுத்துக் கொடுக்கும் பொருட்களை சுந்தரலிங்கம் தான் மிகவும் மலிவு விலையில் வாங்குபவன் என்று அறிந்த ஊரவர்கள். சுந்தரலிங்கத்தின் வியாபார நிலையத்தை அணைக்கச் செல்லவில்லை. அதனால் அது முற்றாக எரிந்து சாம்பலானது. வலது காலை இழந்த ஏகாம்பரம் சிறையில் இருந்து வந்து தெருக்களில் பிச்சை எடுக்கிறான். ஆகையால் அன்பானவர்களே, தீய செயல்களை நினைப்பதே பாவம். நினைவு தான் நாட் செல்லச் செயலாக மாறுகிறது. தீய வழியில் வந்து சேரும் பொருட்ளை எடுக்கக் கூடாது. எடுத்தால் அப்பொருட்களுடன் தீமையும் சேர்ந்து வந்து வாழ்க்கை முழுவதும் கஷ்டப்படுத்தும்” என்றார் நமசிவாயம் சுவாமிகள்.

*அல்லது செய்வார் அரும்பொருள் ஆக்கத்தை*
*நல்லது செய்வார் நயப்பவோ? – ஒல்லொலிநீர்*
*பாய்வதே போலும் துறைவ! கேள்; தீயன*
*ஆவதே போன்று கெடும்.*

பாவிகளின் பொருளை ஒரு போதும் நல்லவர்கள் விரும்ப மாட்டார்கள். தீய வழிகளில் வரும் பொருட்கள் இன்பத்தைக் கொடுப்பது போலக் கொடுத்துத் தீராத துன்பத்துள் ஆழ்த்தும். **“தீயன, ஆவதே போன்று கெடும்”** என்பது பழமொழி.

38 “அன்பானவர்களே, கடல் பெரிதென்பார்கள் பெரியோர்கள். அதை விடப் பெரியது பொறுமை. பொறுமை உடையவர்கள் உலகில் உள்ள நன்மைகளையெல்லாம் ஒரு சேரப் பெறுவார்கள். அடக்கமுள்ளவன், தேவர்களை விட உயர்ந்தவன். பொறுமை, ஆக்கங்கள் பலவற்றைத் தரும். மற்றவர்கள் கூறும் சுடுசொற்களைப் பொறுத்துக் கொள்வது தான் அறிவாகும். தனக்குரிய நிலையிலிருந்து மாறுபாடடையாதவன் கருங்கல்லைப் போன்றவனாவான். அவனால் உணர்ச்சிகளை வெளிப்படுத்தாதிருக்க முடியும். நாம் எதைக்காக்காது விட்டாலும் விடலாம். ஆனால் நாவைக் காக்காது விட்டால் பல்வேறு வகைகளால் துன்பப்படவேண்டி வரும். நெருப்பினால் சுட்டபுண் சில நாட்களில் ஆறிவிடும். ஆனால் நாவினால் சுட்ட வடு என்றும் ஆறாது. யார் எதைச் சொன்னாலும் அதில் ஏதாவது உண்மை இருக்கிறதா என்று ஆராய்ந்து பார்த்தல் வேண்டும். சொல்பவை உண்மையானால் அவற்றில் தவறுகள் இருப்பின் திருத்திக் கொள்ளல் வேண்டும். அவை பொய்யானவையானால் அவற்றைக் கருத்தில் எடுக்கக் கூடாது. கருத்தில் எடுத்தால் தான் அது பற்றி மற்றவர்கள் ஆராய்வார்கள். மற்றவர்கள் கூறுபவற்றைக் கேட்டு

நடவடிக்கை எடுப்பதென்பது, தனது வீட்டைத் தானே கொழுத்துவது போன்றதாகும்."

"கதிரவேலன் பெரும் முருக பக்தன். அத்துடன் பெருந் தனவந்தன். தனது ஒரே ஒரு மகனுக்கு நல்ல குணவதியான ஒரு பெண்ணைத் தேடினார். கல்யாணத் தரகர்கள் பல பெண்களின் சாதகங்களையும், புகைப்படங்களையும் கொண்டு வந்து கொடுத்தனர். எனினும் அவருக்கு அவற்றில் விருப்பமில்லை. தன் கண்களால் பார்த்துப் பெண்ணைத் தெரிவு செய்ய வேண்டும் என்று விரும்பினர். அதுவும் தான் பார்ப்பது பெண்ணுக்கோ அல்லதுபெண்ணின் குடும்பதினருக்கோ தெரியக்கூடாதென்றும் விரும்பினார். பெண்ணைப் பார்த்து விட்டுப் பிடிக்கவில்லை என்று சொல்வது கூட அவரால் முடியாத காரியம்."

"அன்று அயலூரில் உள்ள ஒரு கோயிலுக்குப் பெண் பார்க்கச் சென்றார். பெண் நல்ல அழகி. அவருக்குப் பெண்ணைப் பிடித்து விட்டது. அவருடன் கூட வந்த மகனுக்கும் பெண்ணைப் பிடித்து விட்டது. யாரையாவது விசாரிக்க வேண்டும் என்று நினைத்தார். அப்பொழுது ஒரு ஏழைப் பெண் அவர் பார்த்த பெண்ணுக்கருகே வந்து நின்றாள். அவளில் இருந் து வீசிய துர்நாற்றம் கதிரவேலன் பார்த்த பெண்ணுக்குப் பிடிக்கவில்லை. அதனால் அவள் சொன்னாள் ; "சீ தள்ளி நில், நீ குளித்து விட்டுத் தான் கோயிலுக்கு வந்தாயா..? நாய்கள் கோயிலுக்குக் கூடக் குளித்து விட்டு வருவதில்லை" என்றவாறு கோயிலுக்கு வெளியே

வந்து நான்கு பேரிடம் அவளைப் பற்றிக் கூறிவிட்டுச் சென்றாள். கதிரவேலன் அதிர்ந்து போனார். அந்தப் பெண் பேசிய பெண்ணுக்கு அருகே சென்று பார்த்தார். அந்தப் பெண் பேசியது போல அந்தப் பெண்ணிடமிருந்து துர்நாற்றம் வீசவில்லை. அதனால் அவளைக் கேட்டார் ; " யாரோ ஒரு பெண் உன்னைப் பேசி விட்டுப் போகிறாள். நீ பதிலுக்குப் பேசவில்லையே, அது ஏன்..?"

" ஐயா, நான் ஏழை. அதைவிடப் பெண். பெண்கள் அடக்க ஒடுக்கமாகப் பேசவேண்டும். தவறுகள் நடந்தாலும் அதைப் பெரிதுபடுத்தக்கூடாது. பூமாதேவியைப் போலப் பொறுக்க வேண்டும். நான் குளித்து விட்டுத்தான் கோயிலுக்கு வந்தேன். அந்தப் பெண் திமிர் மிக்க பெண். பணக்காரி. அப்படித் தான் பேசுவாள். பதிலுக்கு நான் ஏதாவது சொன்னால் எனது குடும்பத்தைப் பற்றியும் எனது நடத்தையைப் பற்றியும் இல்லாதது பொல்லாதது யாவற்றையும் கூறுவாள். யார் எதைச் சொன்னாலும் பொறுத்துக் கொண்டால் பிரச்சினைகள் வராது. மாறாக நாமும் ஏதாவது சொன்னால் அது பெரும் சண்டையாகவும் மாறி விடும். அப்படிச் சொல்வது என்னை நானே அழிப்பதற்கும், எனது வீட்டை நானே கொழுத்தவும் எடுக்கும் நடவடிக்கையாகும். அவளுக்கு என்னைப் பிடிக்கவில்லைப் போலும்" என்று கூறிவிட்டுச் சுவாமியை வணங்கினாள்."

"கதிரவேலன் அவளையே தனது மருமகளாக்கிக் கொண்டார்.அதனால் அன்பானவர்களே, தன்னை

அவமதித்தவரையும் பொறுத்துக் கொள்வதே பெரும் தன்மை. அப்பெருந்தன்மை பல நன்மைகளைத் தரும்” என்றார் நமசிவாயம் சுவாமிகள்.

***நோவ உரைத்தாரை தாம் பொறுக்க லாகாதார்***
***நாவின் ஒருவரை வைதால், வயவுரை,***
***பூவிற் பொலிந்தகன்ற கண்ணாய்! அதுவன்றோ***
***தீயில்லை ஊட்டும் திறம்.***

தம்மைவைதவரைப் பொறுத்தலே பெருந் தன்மையா – னதாகும். அப்பொறுமை பல விதமான நன்மைகளைத் தரும். பதிலுக்கு நாம் இகழ்ந்தால் அது பெருந் தீமையாக முடியும். “**தீயில்லை ஊட்டும் திறம்**” என்பது பழமொழி.

39 “அன்பானவர்களே, எந்த உயிர் மீதும் அன்பு வைத்தால் அவ்வுயிர் தன்னாலான உதவிகளைச் செய்யும். பற்றின்றி அன்பு வைத்தலே நட்பாகும். தேவையான போது அன்பு கொண்டு விட்டுத் தேவையில்லாத போது விலக்கி வைத்தால் நாய் கூட அதை உணர்ந்து கொள்ளும். நாய் மீது அன்பு வைத்தால் அது வேட்டையாடிய முயலைக் கொண்டு வந்து கொடுத்துத் தனது நட்பை வெளிப்படுத்தும். ஒருவர் நட்புக் கொள்வதற்கு எதையும் ஆராயத் தேவையில்லை. நீங்காத அன்பு கொண்டால் போதும். அந்த அன்பு கொண்டவர் கட்டாயம் உதவி செய்தே தீருவார்.”

“நாவலூரில் இராமன் என்றொரு பிச்சைக்காரன் இருந்தான். அவன் ஊர் முழுவதும் சென்று தண்டி வாழ்ந்தான்.

பலர் அவனை ஏசுவார்கள். சிலர் தம்மாலியன்ற பணத்தைக் கொடுப்பார்கள். சிலர் பழைய உணவு வகைகளைக் கொடுப்பார்கள். இராமன் எவர் எதைச் சொன்னாலும் கோபிக்காது முகமலர்ச்சியுடன் சென்று விடுவான். அவ்வூரில் ஞானசேகரம் என்றொருவர் இருந்தார். அவர் தனது தோட்டத்தைக் காவல் காப்பதற்கென்று கட்டிய சிறு குடிசையொன்றை இராமனுக்குக் கொடுத்திருந்தார். அவர் இரவு காவலுக்குச் செல்லும் போது தனக்கும் இராமனுக்கும் உணவு கொண்டு செல்வார். இருவரும் நித்திரை வரும்வரை பேசிக் கொண்டிருப்பார்கள். நாளடைவில் இராமன் தோட்டத்திற்குத் தான் காவல் காப்பதாகக் கூறினான். அதனால் ஞானசேகரம் இரவுணவினைக் கொண்டு சென்று கொடுப்பார். அத்துடன் பணமும் கொடுப்பார். யாரும் இல்லாத அனாதையான இராமனுக்கு ஞானசேகரத்தின் உறவு பெரும் துணையாக இருந்தது."

"அன்று மாலை இராமனுக்கு இரவு உணவு கொண்டு வந்த ஞானசேகரன் மிகவும் சோர்ந்து போயிருந்தார். அவர் இராமனைத் தனது உயிர் நண்பனாக நினைத்தார். இராமனும் தனக்குள்ள குறை நிறைகளைச் சொல்லி ஆறுதலடைவான். அன்று வந்த நேரம் தொடக்கம் ஆழ்ந்த சிந்தனையில் இருந்த ஞானசேகரத்தைப் பார்த்து இராமன் கேட்டான் ; "ஐயா, இன்று என்றுமில்லாதவாறு சோகமாக இருக்கிறீர்கள். ஏதாவது நடக்கக்கூடாதது நடந்து விட்டதா?"

“வெகுநேரம் பேசாதிருந்த ஞானசேகரம் சொன்னார் ; “ ஓம் இராமு, எனது மகளுக்குத் திருமணம் பேசி வந்திருக்கு. மாப்பிளை நல்ல உத்தியோகம். நல்ல குடும்பம். ஆனால் ஓர் இலட்சம் ரூபா சீதனமாகக் கேட்கிறார்கள். என்னிடம் அவ்வளவு பணம் இல்லை. இந்தத் தோட்டக் காணியைத் தருகிறேன் என்று சொன்னேன். அவர்கள் சம்மதிக்கிறார்களில்லை. மாப்பிளைள்ளையின் தங்கைக்கும் திருமணம் முற்றாகி விட்டது. அவளுக்குச் சீதனமாகக் கொடுக்க ஓர் இலட்ச ரூபா கேட்கிறார்கள். தோட்டத்தை விற்கலாமென்றால் அறா விலைகேட்கிறார்கள். அதை விடப் பக்கத்து வீட்டுக்காரன் தனது பெண்ணுக்கு ஓர் இலட்ச ரூபா தருவதாகச் சொல்கிறான். அது தான் பயமாக இருக்கிறது. எனக்கு ஒரே ஒரு மகள். இப்பவே வயது முப்பது” என்று விம்மினார் ஞானசேகரம்”

“ஐயா, என்று அழைத்த இராமன் சிறிது தயங்கினான். பின்பு சொன்னர்; “ஐயா, நான் பல வருடகாலமாகப் பிச்சை எடுத்து வாழ்கிறேன். எனது செலவு போக மிகுதிப் பணத்தைச் சேமித்து வைத்திருக்கிறேன். அது ஓர் இலட்ச ரூபாவுக்கு மேல் வரும். என்னை ஊரில் யாரும் மதிப்பதில்லை. என்னோடு கதைப்பது கூட இல்லை. ஆனால் நீங்கள் பத்துப் பதினைந்து வருடங்களாக என்னை மதித்து என்னுடன் கதைப்பது மட்டுமல்லாது நான் தங்கவும் இடந்தந்துள்ளீர்கள். நீங்கள் பெரிய வசதியுடையவர் இல்லாவிட்டாலும் பல வருட காலமாக எனக்கு இரவுணவு தருகிறீர்கள். அதனால் என்னிடம் உள்ள பணத்தைத் தருகிறேன்.

நான் பணம் தந்த விடயத்தை ஊரில் யாருக்கும் சொல்ல மாட்டேன் சொன்னால் சில சமயம் திருமணம் குழம்பியும் விடும்" என்றான்".

"ஞானசேகரன், திகைத்துப் போனானர். இராமன் தன்னிடமுள்ள பணம் முழுவதையும் கொடுத்தான். திருமணம் மிகவும் கோலாகலமாக நடைபெற்றது. திருமணம் முடிந்த மறுநாள் ஞானசேகரன் தனது தோட்த்தில் உள்ள குடிசையில் இராமனைச் சந்தித்து நன்றி கூறினார். ஆகவே அன்பானவர்களே, எளியவர்கள் என்று நினைத்து யாரையும் ஒதுக்காதீர்கள். எளியவனனாலும், அவனுடன் நட்புரிமையுடன் உறவாடினால், அவன் உதவி செய்வான்" என்றார் நமசிவாயம் சுவாமிகள்."

***தாம்நட்டு ஒழுகுதற்குத் தக்கார் எனல் வேண்டா;***
***யார்நட்பே யாயினும் நட்புக் கொளல் வேண்டும்***
***கானட்டாய் நாறும் கதுப்பினாய்! தீற்றாதே***
***நாய் நட்டால் நல்ல முயல்?***

தனக்கு வேண்டியவருக்கு நாயும் முயலை வேட்டையாடி வந்து கொடுக்கும். யார் மீதாவது தகுதி பாராது நட்புக் கொண்டால் அவர் ஆபத்தில் உதவுவார். **"தீற்றாதே நாய் நட்டால் நல்ல முயல்?"** என்பது பழமொழி.

**40** "அன்பானவர்களே, பல நட்சத்திரங்கள் வானில் தோன்றிப் பிரகாசித்தால், உலகை ஆக்கிரமித்திருக்கிற இருள் சிறிதளவாவது விலகும். அதனால் உலகம் ஒளி பெறும். அது போலச் சிறிதாகத் துமிக்கின்ற மழையானது தொடர்ந்து துமித்துக்

கொண்டேயிருந்தால் அது பெருவெள்ளமாகி விடும். அது போல ஒருவருடைய வருமானமானது சிறிதளவாகவே இருந்தாலும், நாள் தோறும் வந்து சேருமானால் நாளடைவில் அது பெருஞ்செல்வமாகி விடும். தன்னால் சேமித்துப் பெரும் தனவந்தனாக முடியும் என்றும், அதை எப்படிச் செய்ய வேண்டும் என்றும் அறிந்து செயிலில் தளர்வின்றி முயல்கின்றவர் பெருஞ் செல்வந்தராகி விடுவர். ஆற்றல் என்பது மனவலிமையாகும். கனதியில்லாத பஞ்சாய் இருந்தாலும் அளவுக்கதிகமாக வண்டியில் ஏற்றினால் வண்டியின் அச்சு முறிந்து விடும். அது போலத் தினமும் சிறிதளவவாவது சேமிப்பவனின் சேமிப்பு ஒரு நாள் பெருகி அவனுக்கு வாழ்வளிக்கும். ஊக்கம் தான் நிலையான செல்வம். மனத்திடம் தான் ஒருவனை அவன் நினைத்தவாறு வாழ வைப்பது. மனத்திடமும் ஊக்கமும் கொண்டவரக்ள் சாதிக்க முடியாததென்று எதையும் விலக்கி வைக்க மாட்டார்கள்.”

“நாவலூரில் சபாபதிப்பிள்ளை என்றொரு விவசாயி இருந்தார். அவருக்கு ஐந்து பெண் பிள்ளைகள். அந்த ஊரில் சுப்பையா என்றும் ஒருவர் இருந்தார். அவர் பெரும் வர்த்தகர். அவருக்கு ஒரே ஒரு பெண்பிள்ளை. சபாபதிப்பிள்ளை ஊரில் உள்ள வங்கியில் தனக்குப் பிள்ளைகள் பிறக்கும் போது அவர்களின் பெயரில் சேமிப்புக் கணக்கொன்றைத் திறப்பார். அத்துடன் அன்று தென்னை, வாழை, போன்ற பயிர்களை நடுவார். அப்பயிர்களுக்குத் தனது பிள்ளைகளின் பெயரை வைப்பார். அப்பயிர்களில் இருந்து வரும் சிறு வருமானத்தையும் தனது உழைப்பில் ஒரு பகுதியையும்

அவர்களது சேமிப்புக் கணக்கில் வைப்பிலிடுவார். இப்படித் தினமும் செய்து வருவார். இது அவரது பிள்ளைகளுக்கும் மனைவிக்கும் மட்டும் தான் தெரியும்.”

“சுப்பையாவின் கடையில் தான் சபாபதிப்பிளை பொருட்களை வாங்குவார். அப்போது சுப்பையா சொல்வார்; “ சபாபதி, ஒண்டு இரண்டில்லை ஐந்து பெண்பிள்ளைகளைப் பெற்று வைதிருக்கிறாய். சீதனத்திற்கு என்ன செய்யப் போகிறாய்? பிள்ளைகளை அளவாகப் பெற்றால் தான் அவற்றைக் கவனித்து வளர்த்து நல்ல இடத்தில் கட்டிக் கொடுக்க முடியும். இவ்வளவும் போதும் இனியும் பெற்று விடாதே. எனக்கிருக்கும் சொத்திற்கு இன்னும் பத்துப்பிள்ளைகள் பிறந்தாலும் பரவாயில்லை” என்று கேலியாகச் சிரிப்பார். அதற்குச் சபாபதிப்பிள்ளை எதுவும் சொல்லாமற் சிரிப்பார். சில மாதங்களின் பின் சபாபதிப்பிள்ளைக்கு மேலும் ஒரு பெண் குழந்தை பிறந்தது. அதற்கும் ஒரு சேமிப்புக் கணக்குத் திறந்தார் சபாபதிப்பிள்ளை.”

“காலம் வேகமாக ஓடியது. சபாபதிப்பிள்ளையின் நான்கு பெண்களுக்குத் திருமண வயது வந்து விட்டது. அவர்கள் நன்றாகப் படித்து ஆசிரியர்களாக வந்தனர். ஆசிரியத் தொழிலில் இருந்து வரும் வருமானத்தையும் சபாபதிப்பிள்ளை தனது பிள்ளைகளின் கணக்கில் வைப்பிலிட்டார். மூத்த மகளுக்கு ஒரு வைத்தியரைப் பேசினார். ஐந்து இலட்ச ரூபா சேமிப்பில் இருந்தது. இளைய மகளின் சேமிப்பில் இருந்த இரண்டு இலட்ச ரூபாவையும் எடுத்து

மூத்தமகளுக்குத் திருமணம் செய்து வைத்தார். அப்படியே நான்கு மகளுக்கும் நல்ல நல்ல இடங்களில் திருமணம் செய்து வைத்தார். சுப்பையாவுக்குத் தொழிலில் நட்டமேற்பட்டது. அவர் வியாபார நிலையத்தை மூடி விட்டுக் கூலியாகத் தொழில் செய்தார். தான் கேலி பண்ணிய சபாபதிப்பிள்ளை தனது சேமிப்பின் மூலம் தனது ஐந்து பிள்ளைகளுக்கும் திருணம் செய்து வைத்ததை நினைக்க அவருக்கு ஆச்சரியமாக இருந்தது. தானும் தொழில் செய்யும் போது சிறிதளவு சேமித்திருந்தால் இந்த நிலை வந்திராது என்று எண்ணிக் கலங்கினார். ஆகவே அன்பானவர்களே, எம்மால் பணக்காரர் ஆக முடியாதென்று ஒரு போதும் வருந்தாதீர்கள். சிறு துளி தான் பெரு வெள்ளம். சிறுகச் சிறுகச் சேமித்தால் யாரும் தனவந்தராகலாம்." என்றார் நமசிவாயம் சுவாமிகள்"

***வருவாய் சிறிதெனினும் வைகலும் ஈண்டின்***
***பெருவாய்த்தாய் நிற்கும் பெரிதும் - ஒருவாறு***
***ஒளியீண்டி நின்றால் உலகம் விளக்கும்***
***துளியீண்டில் வெள்ளந் தரும்.***

சிறு சிறுதுளிகள் சேர்ந்து பெருவெள்ளமாகவதைப் போலச் சிறு சிறு வருவாயையும் சேமித்து வைத்தால் அது பெருஞ் செல்வமாக மாறும். "**துளியீண்டில் வெள்ளந் தரும்**" என்பது பழமொழி.